

கல்கி
KALKI 6.2.94 ரூ. 3.00
தடகளம் அமர்க்களம்!





ஜடிய, ஜடியக் கலகலக் மீட்டிங்!

தமிழர்களுக்கு எல்லாமே திருவிழா தான். கழகக் கண்மணிகளுக்குக் கேட்கவா வேண்டும்? கொண்டாடி விட்டார்கள். சமூக நீதிப் பேரணி என்று தானைத் தலைவர் அழைப்பு விட, 22-ம் தேதி இரவிலிருந்தே கூட்டம்.

சும்மா சொல்லக் கூடாது. ஒரே டென்ஷன்தான். 23-ம் தேதி பனகல் பார்க் பக்கம் போனவர்களுக்கெல்லாம், மனைவி தாலி மேல் பெரும் நம்பிக்கைதான். துரைசாமி பிரிட்ஜ் அருகிலேயே வண்டிகளை மடக்கி விட்டார்கள். மூன்று மணி பேரணிக்கு நான்கு மணிக்கு மேல்தான் 'ஜுட்' சொல்லப்பட்டது.

கடைகள் எல்லாம் மூடப்பட்டிருந்தன. வேர்க்கடலையும், கேன் டீயும்தான் தெரு ஓரமாய்க் கிடைத்தது. தேவாம்ருத நினைப்பில் அதுவே எக்கச்சக்க சேல்ஸ். பாண்டி பஜாரின் எல்லா குறுக்குச் சந்துகளும் அடைபட, பாவம் வாகன ஓட்டிகள். ஒருவர் தி.மு.க.வின் மூதாதையரையெல்லாம் தெருவுக்கு இழுத்து விட்டு, அடுத்த சந்து தேடி நுழைந்தார்!

கூட்டத்தில் என்ன செய்கிறார்கள் என்று கடற்கரை போனால், ஒரே தலைகள். நாகூர் அனீபா பாட்டு. மக்கா, மதீனா, அல்லா போன்ற வார்த்தைகளை நீக்கி விட்டு, கலைஞர், அறிவாலயம், உதய சூரியன்!

டெண்ட் கொட்டகையில் சினிமா பார்க்க வந்த கூட்டம் மாதிரி, எல்லோரும் துண்டை விரித்து விட்டார்கள். என்ன நடந்தால் என்னவென்று சிலர் களைத்து தூங்கிப் போர்வையில் தூங்கியும் போயிருந்தனர்.

கலைஞர், அண்ணா, உதயசூரியன் விளக்கு அலங்காரங்கள். காதைப் பிளந்து கொண்டிருந்தன ஜெனரேட்டர்கள். பல கட்அவுட் விளக்குகள் எரியாமல் முரண்டு பிடிக்க, மாய்ந்து மாய்ந்து டெஸ்டரில் நோண்டிக் கொண்டிருந்தார்கள்.

புத்திசாலித்தனமாய் சிலர் கட்டுசாத மூட்டையோடு வந்திருந்தார்கள். பல கண்மணிகளுக்குச் சோத்துக்கே வழியில்லை. 'எங்க சாப்பாடு கெடைக்கும் சார்?' என்று தலைவிதியை நொந்தபடி பலர் மீண்டும் வல் நோக்கி நடந்து கொண்டிருந்தனர். முடியாதவர்கள் மிளகாய், வாழைக்காய் பஜ்ஜிகளோடு திருப்திப்பட்டுக் கொண்டார்கள்.

கூட்டத்தில் பாடல்களுக்கு நடுநடுவே '48 வது வட்டம் கோவிந்த சாமி 101 ரூபாய், கொட்டிவாக்கம் ஜார்ஜ் 51' என்று மொய்ப் பணம் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்க, ஓரங்களில் 'எப்பய்யா தலைவர் வருவாரு?' வருத்தங்கள்.

இயற்கையின் அழைப்புக்கும் இடமில்லை. அந்த இரவு ராதாகிருஷ்ணன் சாலை முனையில், கல்யாணி ஆஸ்பத்திரி அருகில் போயிருந்தால், வயிற்றில் இருக்கும் பிள்ளை வெளிவந்திருக்கும். அவ்வளவு நாற்றம்!

'என்னய்யா 'அந்தாள்' சாதிச்சுட்டான்? தலைவரு மாதிரி போராட்டங்களை சந்திக்க உதை வாங்கி, சிறைவாசம் செய்திருக்கானா?' ஜூனியர்களின் ஆதங்கம்.

மேடையைப் பார்த்தபடி இருந்த ஒருவர் 'தலைவரு என்னா அப்பிடியே விமானத்துல போயிர்றா மாதிரி பிளானா' என்று சந்தேகித்தார். 'எத்தினி நாளாச்சு தலைவர் பேசிப் பார்த்து? அதுக்காகவே வந்தேன்' என்றது ஒரு முதிய தாய்க்குலம்.


ஒரு தூக்கம் போட்டு எழுந்தபின், ஒரிஜினல் கூட்டம் ஆரம்பித்தது. கலைஞர் சமூகநீதி என்றும், இடஒதுக்கீடு என்றும், அதைத் தடுத்தால் போர்க்கொடி தூக்குவோம் என்றெல்லாமும் பேசினார். கூட்டத்திலிருந்த பலருக்கு அது காலைப் பேப்பரில்தான் தெரியவே வந்திருக்கும்.

பலம் காட்டும் குறிக்கோளை பலமாகவே நிறைவேற்றி விட்டார். பசியோ பட்டினியோ, போக்குவரத்து உண்டோ, இல்லையோ, ஒழுங்கான வசதிகள் செய்யப்பட்டதோ, இல்லையோ, விடிய, விடிய, விடியப் பேச்சு! இந்த விழாவை மறக்க மாட்டார்கள் -

வை.கோ. இன்னொரு பெரிய கூட்டம் நடத்தும் வரை!

– ஞானம்

புகைப்படங்கள் : டி. ராமமூர்த்தி



பண முதலைகளுக்குப் பணிந்து போவதா?

பங்கு மார்க்கெட் ஊழல் பற்றிய நாடாளுமன்றக் கூட்டுக் குழு அறிக்கை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு உள்ளாகி, ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் ஒருவரை ஒருவர் காரசாரமாகச் சாடிக் கொண்டதுடன் சரி. 'சுபம்' சொல்லி, 'மங்களம்' பாடி விட்டார்கள். இனி அறிக்கை, அரசு அலமாரிகளில் தூசிப் போர்வை போர்த்திக் கொண்டு தூங்கப் போகலாம். அப்படியின்றி, அரசு ஏதும் நடவடிக்கை எடுக்கப் போகிறது என்றால் அதற்குரிய அறிகுறி ஏதும் இன்று வரை காணோம்.

நாடாளுமன்ற விவாதங்களின் போது, அறிக்கையிலேயே குறைகூறப்பட்டுள்ள அமைச்சர்களின் ராஜினாமாக்களை எதிர்க்கட்சிகள் கோர, ஆளும் கட்சியினரோ அவர்களைத் தாங்கோ தாங்கு என்று தாங்கி; 'அவர்கள் மேல் தப்பில்லை, எல்லாவற்றுக்கும் இன்றுள்ள நிதி நிர்வாக நடைமுறைதான் காரணம், நடைமுறை சரியாக இருந்திருந்தால் ஊழலே நடந்திருக்காது' என்றெல்லாம் வாதாடி, அமைச்சர்களுக்குப் பாதுகாப்புக் கவசம் அமைத்தார்கள். எல்லாமே ஏதோ நாடகம் மாதிரிதான் நடந்தது.

நாடக டயலாக்குகளை ஒதுக்கி விட்டுப் பார்த்தால் நமது வங்கிகளின் செயல்பாட்டிலும் நிதி நிர்வாக முறையிலும் நிறையவே ஓட்டைகள் இருப்பது தெரியவரும். சினிமாக்களில் வருவது போல, யதேச்சையாகத்தான் ஸ்டேட் பாங்கில் இருக்க வேண்டிய கடன் பத்திரங்கள் குறைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. 'ஏன் குறைகிறது?' என்று ஆராய்ந்த போதுதான், இமாலய ஊழல்களும் அதில் பங்கு பெற்ற புரோக்கர்கள், சில அதிகாரிகள், அயல்நாட்டு வங்கிகள் பற்றிய விவரங்களும் தெரியவந்தன. அத்துடன் ரிஸர்வ் வங்கி, இத்தனை பெரிய ஊழல் நடந்து கொண்டிருக்கும் போது அப்பாவியாக, 'தேமே'ன்று கை கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்ததும் புரியவந்தது.

நாடாளுமன்றக் கூட்டுக் குழு அறிக்கையின் அடிப்படையில் இப்போதாவது நமது வங்கிகளின் செயல்பாட்டினை அடி முதல் நுனி வரை ஆராய்ந்து செம்மைப்படுத்த அவசியம் உள்ளது. அயல்நாட்டு வங்கிகள் என்பதாலேயே இங்கே சலாம் போட்டு கண்டிப்புக் காட்டாமல் இலகுவாக விட்டிருக்கிறார்கள். இதனால் அவையும் குளிர் விட்டுப் போய், 'இந்த நாட்டின் சட்டங்கள் நம்மைப் பாதிக்காது' என்ற துணிவுடன் நடந்து கொண்டிருக்கின்றன. சில அயல் நாட்டு வங்கிகள், தாங்கள் நடந்து கொண்ட முறையால் தங்கள் நாட்டுக்கே தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளன. சில காலம் முன்பு அமெரிக்காவில் நமது யுனைடெட் கமர்ஷியல் வங்கி, அந்நாட்டின் சட்டத்தை மீறியதற்காக அபராதம் செலுத்த நேர்ந்தது. அப்படியிருக்க, இங்குள்ள அயல்நாட்டு வங்கிகளிடம் அதே மாதிரி கண்டிப்பை நாமும் ஏன் காண்பிக்கக் கூடாது?

நாடாளுமன்றக் கூட்டுக் குழு அறிக்கையின் அடிப்படையில் அரசு பின்வரும் நடவடிக்கைகளை உடனே எடுக்க வேண்டும்.

1. அயல்நாட்டு வங்கிகள் இங்கு இயங்கும் விதத்தை ஆராய ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். அவை நமது தேசத்தின் பொருளாதார மேம்பாட்டுக்கு எந்த அளவுக்கு உதவுகின்றன, அவை தொடர்ந்து இங்கே இயங்குவது அவசியம்தானா என்பன ஆராயப்பட வேண்டும்.

2. ரிஸர்வ் வங்கி சுதந்திரமாக இயங்குகிறதா? அரசுடைமையான வங்கிகள், தனியார் வங்கிகள், அயல்நாட்டு வங்கிகள் அனைத்தின் மீதும் மேலாதிக்கம் செலுத்தி அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க ரிஸர்வ் வங்கியால் முடிகிறதா?

3. ரிஸர்வ் வங்கி சுதந்திரமாகச் செயல்பட முடியாதபடி அரசு தலையிடுகிறதா? தற்போது தேர்தல் கமிஷன், டி.என். சேஷன் தலைமையில் தன் சுதந்திர அதிகாரங்களைக் காண்பிப்பது போல் ரிஸர்வ் வங்கியும் ஏன் செயல்படக் கூடாது? அப்படி சுதந்திரமாகச் செயல்பட்டு அதிகாரங்களைக் காட்ட முடியாமல் தடுப்பது எது?


4. இந்திய பங்கு மார்க்கெட் ஆரோக்கியமான முறையில் இயங்குகிறதா? அல்லது பிரதான நகரங்களில் உள்ள ஒருசில நடவடித் தரகர்கள் சேர்ந்து, லாபங்களுக்கு வடிகால் அமைத்து அள்ளிக் கொண்டு போய் விட, நிஜ முதலீட்டாளர்கள் முட்டாள்களாக்கப்படுகிறார்களா?

அரசு இந்த விஷயங்களை ஆராயாமல், பொதுவாக, 'நமது நிதி நிர்வாக நடைமுறை நம்மைக் கைவிட்டு விட்டது' என்று கூறி மழுப்பிக் கொண்டிருப்பதில் ஆதாயம், பண முதலைகளுக்கே.

– வி. கோபாலன்



● மோதல்...



● முற்றுப் பெறும்?

● எஸ். குமார், காரைக்குடி.
? மனிதனின் நிரந்தர எதிரி யார்?
! அரசியல்வாதி!

● இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.
? கவர்னர் - முதல்வர் மோதல் முற்றுப் பெறும் போலிருக்கே?
! குடியரசு நிலையில் முற்றிவிட்டதே!

● டி. எஸ். கிருஷ்ணன், திருப்பரங்குன்றம்.
? பிரதமர் யார் பக்கம்? ஜெ பக்கமா? கவர்னர் பக்கமா?
! மௌனத்தின் பக்கம்.

● எம். திருஞானம், சீர்காழி.
? அரசியல்வாதிகள் ஆன்மீகத்தில் ஈடுபட்டால்...?
! கோயில் கர்ப்பக்கிரஹங்களில் மூலவரை நீக்கி விட்டுத் தங்கள் சிலையை வைத்து விடுவார்கள்!

● ப. இராம் முருகன், சிவகங்கை.
? ஆளுனர் மாளிகை, காங்கிரஸ் மாளிகையாக மாறி வருவதாகக் கூறுகிறாரே, கே.ஏ.கே.?
! தலைமைச் செயலகமும்தான் அ.தி.மு.க. கட்சிச் செயலகமாக மாறி வருகிறது!

● ச. ஆ. கேசவன், இளாம்மணியாச்சி.
? கணவன் பெறும் ஊதியத்தைக் காட்டிலும் அதிக ஊதியம் மனைவி பெற்றால்...?
! சந்தோஷப்பட்டுவிட்டுப் போகிறது. என்ன இப்ப? அன்புக்கு அடிப்படை பணம் அல்ல, குணம்.

● ஜி. இந்திரா, திருச்சி.
? தமிழில் தந்தி அமுலாக்கப்பட்டது குறித்து?
! தமிழில் தந்தி முறையை 1955-ல் கண்டு பிடித்த அ. சிவலிங்கம், ராஜாஜியிடம் தாம் பெற்ற பாராட்டை நினைவுகூர்ந்து மகிழ்ந்து, நமக்கு எழுதியிருக்கிறார். எனினும் 35 ஆண்டுகளாக அரசு அதை நடைமுறைப்படுத்தவில்லை. இப்போது அறிவியல் சாதனங்கள் புதிய முறையில் தமிழ்த் தந்திக்கு வழி செய்துள்ளபோதிலும் தமது முயற்சியும் உழைப்பும் வீணாகவில்லை என்று திருப்தி அடைந்துள்ளார் சிவலிங்கம்.

● கே. மணிகண்டன், இராஜாக்கமங்கலம்.
? 'புரட்சித் தலைவியை அழிக்க நினைப்பவர்கள் அழிந்து போவார்கள்' என்று ஆர். எம்.வீ. கூறுவது...?
! அனுபவ அறிவு!

● யார் பக்கம்?





தற்போதைய தமிழக அரசியல் எப்படி?

● எஸ். ஜெயா சீனிவாசன், கும்பகோணம்.
? இலங்கையை இந்தியா வெற்றி கொள்ளுமா?
! கும்ப்ளே உபயத்தில் (11 விக்கெட்) முதல் டெஸ்டில் வெளுத்துக் கட்டியாகி விட்டது. இரண்டாவது டெஸ்டிலும் சித்து, காம்ப்ளி, டெண்டுல்கர் ஆகியோர் வெற்றிக்குப் பிள்ளையார் சுழி போட்டு விட்டார்கள். பிறகென்ன!

● பி. பிரான்சீஸ், கும்பகோணம்.
? சட்டசபை டயரியில் கவர்னர் படம் இல்லாததால், முதல்வர், சபாநாயகர் படங்களைத் தாமும் தமது உறுப்பினர்களும்

ரூ 25 பரிசு பெறுபவர் :
எம். ரேவதி,
23/1, அம்மையப்பா காலனி,
கீழ நான்காம் தெரு,
மன்னார்குடி - 614 001.

ஏ.எம். பழனிச்சாமி,
நிறு ராயல் பேக்கரி,
S.B. ரோடு,
கோவை - 641 018.



● ஹீரோ

ஒழிக்கப் போவதாக வாழப்பாடி கூறியுள்ளாரே?
! எம். எல். ஏக்கள் என்ன ஒழிக்கிறார்கள் என்று யாரும் கேட்க முடியாது! போட்டி போட்டுக் கொண்டல்லவா ஒழிக் கிறாங்க!


● ப. பழனி, மஞ்சபுத்தூர்.
? கல்வி ஓராண்டு சந்தாவுக்கு இலவசமாக டைரி கொடுப்பதற்குப் பதில் டைரிக்கு ஏற்ற விலையை டிஸ்கவுண்ட் செய்து தரக் கூடாதா?
! கல்வி போலவே, கல்வி தரும் பரிசும் உபயோகமாகவிருக்கட்டும் என்று டயரி தந்தால் என்னங்க, பழனி நீங்க...

● சிந்துஜா, திருவெண்ணெய்நல்லூர்.
? கவிஞர் சுரதா, முத்துலிங்கம் அ.தி.மு.க.வில் சேர்ந்துள்ளனரே?
! காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் பாலிஸி.

● அப்துல் காதர், சிங்கப்பெருமாள் கோயில்.
? 'தமிழை முடமாக்கினார் இளையராஜா' என்று சாடுகிறாரே, வைரமுத்து?
! வாலியைக் கேளுங்கள், 'வாழ வைத்தார்' என்று வாழ்த்துவார்.

● எம். அசோக் ராஜா, அரவக்குறிச்சிப் பட்டி.
? 'கவர்னர் சென்னாரெட்டி, சிறுபிள்ளைத்தனமாகச் சண்டை போடுகிறார் அ.தி.மு.க.வுடன்' என்று கே.ஏ.கே. கூறுகிறாரே?
! 'ஜெ' கூடத்தான் குழந்தைத்தனமாகப் பிடிவாதம் பிடிக்கிறார்.

● எஸ். எஸ். பூங்கதிர், திருவெண்ணெய்நல்லூர்.
? 1993ல் அரசியல் ஹீரோ யார்?
! டி.என். சேஷன். 94லிலும் அவரே! இவர் பிடிவாதம் சிறுபிள்ளைத்தனமானது அல்ல; அரசியல் சாசன அறிவுபூர்வமானது.


● கவலைகளுக்குக் குட்டு!


● அனுபவ அறிவு


● பிள்ளைகளாக...


● ...சுழ...


● ...போட்டார்கள்!

● எஸ். நாரம்புநாதன், அரக்கோணம்.
? டாக்டர் அம்பேத்கார் போக்குவரத்துக் கழகம் உதயமானது குறித்து...?
! என்னதான் சொல்லுங்க, ஜெ.ஜெ.டி.வி. சொகுசு பஸ்களுக்கு ஈடாகுமா! காப்பி மிஷின் என்ன, ஏ.ஸி. என்ன, வீடியோ என்ன, சரியாத சீட் என்ன, வாங்குற துட்டு என்ன...!

● ஆர். முரளி, சென்னை - 15.
? "மைத்ரீம் பஜத" என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?
! சொல் அல்ல, இரு சொற்கள். அர்த்தம் அதே தலையங்க வரியிலேயே உள்ளதே : "நட்பை வளர்ப்போம்". பாடலில் அடுத்து வரும் சொற்களின் பொருள் : "அது எல்லா இதயங்களையும் வெல்லும்."

● ஆர். என். ராஜா சாகிப், சென்னை.
? பொங்கலுக்கு வந்த படங்களில் உங்களுக்குப் பிடித்தது?
! மகாநதி - அதிலுள்ள வன்முறை ஓவர் டோனை நீக்கி விட்டால். டி.வி. சாப்பி விருந்து கவனத்தை விலக்கி, சினிமா பார்க்க வரச் செய்ய, பத்திரிகை படிக்கச் செய்ய இப்படி வன்முறை - செக்ஸ் இரண்டையும் இரண்டு மீடியாக்களும் சுவீகரித்துக் கொண்டது பரிதாபம். சமூகத்துக்கு நல்லதல்ல.

● எம். ரேவதி, மன்னார்குடி. ❑
? தற்போதைய தமிழக அரசியல் நிலவரம் எப்படி உள்ளது?
! ஜனவரி 26-ம் தேதி, ஒரு பள்ளிக் கூடத்தில் கேட்டது :

"ஐயய்யோ! தலைமை ஆசிரியர் ஏற்ற வேண்டிய தேசியக் கொடியை யாரோ மாணவன் ஒருவன் போய் ஏற்றுகிறானே...?"

"சும்மா இருய்யா, அது மந்திரியோட பையனாக்கும்!"

ஜோக் என்றாலும் தற்போதைய தமிழக அரசியல் நிலவரத்தைப் 'பளிச்'சிடுகிறது. ஜோக் உபயம் : ஏ. எம். பழனிச்சாமி, கோவை.

Kalki Shopping Page

OUR SPECIALITIES :


- புழுங்கலரிசி கைமுறுக்கு, தட்டை, சீடை, மிக்சர், (FREE OF OIL) ETC.
- சுத்திகரிக்கப்பட்ட கொலஸ்ட்ரால் தொல்லை இல்லாத தாவர எண்ணெயில் தயாராகும் கார வகைகள்
- அதிகப்படியான எண்ணெய் அகற்றப்படுவதால் நீண்டநாள் கெடாமல் இருக்கும் தென்னிந்திய பட்சணங்கள் (FREE OF OIL)



- சுத்தமான நெய்யில் தயாராகும் ஸ்வீட் வகைகள்
- மைசூர் பாகு, போளி, லட்டு, கோதுமை அல்வா. ETC.

Suswaad

1/2 VENKATRAMAN STREET,
T.NAGAR, MADRAS - 17. PH: 8282324 P.P.



NEWLOOK TAILORS

WE ACCEPT CREDIT CARDS

Opp. T. Nagar Bus Terminus
Phone : 44 34 48
NO BRANCHES
We specialise in Bridegroom's dress to make the bride proud.

தூமணி மாடம்

ஸ்ரீவைஷ்ணவ மாதாந்திர செய்தி இதழ்

லௌகீகத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், ஸ்திரீளுக்கும், இளைஞர்களுக்கும் மிகவும் உபயோகமான, முழுவதும் வித்தியாசமான பத்திரிகை

விவரங்களுக்கும், இலவச மாதிரி இதழுக்கும் எழுதவும் :

தூமணி மாடம்

1, மெயின் ரோடு,
சேஷாத்ரிபுரம்,
வேளச்சேரி,
சென்னை - 600 042.

ஸ்ரீ தேவி கோல்டு
கவரிங் ஒர்க்ஸ்

IMITATION JEWELLERY

* EXPORTS * WHOLESALE
* RETAIL

ஒரிஜினல் முத்து ஐட்டங்கள் கிடைக்கும்.

ஸ்ரீ தேவி கோல்டு கவரிங் ஒர்க்ஸ்

101 & 102, உஸ்மான் ரோடு,
தி. நகர்,
சென்னை - 600 017.

Kalki Shopping Page



பட்டுப் புடவைகள் உலகில் புரட்சி! புதுமை! சிக்கனம்!

ஸ்ரீ ராம்லோக் நிறுவனம் நீங்கள் உபயோகப் படுத்திய நிறம் மங்கிய பட்டு மற்றும் இதர புடைவைகளைப் புதுப்பொலிவுடன் மாற்றித் தருவதில் பல வருடங்களாகப் புகழ்பெற்ற ஒரே நிறுவனம். நீங்கள் உபயோகப்படுத்திய பட்டு மற்றும் இதர புடைவைகள், Jeans Pants, Curtains முதலானவற்றைப் புதுப்பொலிவுடன் மாற்றிக் கொள்ள விவரங்களுக்கு அணுகவும்.

மேலும்
சிக்கனத்திற்கு!
இந்த விளம்பரத்தைக் கொண்டு வருபவர்களுக்கு 5% சிறப்புத் தள்ளுபடி அளிக்கப்படும். இச்சலுகை பிப்ரவரி 28, 1994 வரை

Sri Ramlok & Co.,

74, Ranganathan Street (Ground floor),
T. Nagar, Madras - 600 017.

மேலும் விவரங்களுக்கு தொலைபேசி மூலம் அணுகவும்

R. Vasudevan Phone : 445697

B. M. SILK SAREES

B. M. சில்க் சாரீஸ்
காஞ்சிபுரம்
பட்டுசேலை
தயாரிப்பாளர் :

5, வடக்கு மாட வீதி,
மைலாப்பூர்,
சென்னை - 600 004.

குறிப்பு : அனைத்து பட்டு சேலைகளும் தறி விலைக்கே கிடைக்கும்.

உடல் வலியின்றியும் முதுகு வலியின்றியும் நிம்மதி நிறைந்த உறக்கத்திற்கு K. F. C. யின் மெத்தைகளும், தலையணைகளும் சோபா செட்டு குஷன்களும் கிடைக்குமிடம் :

SUPPORT & COMFORTABLE MATTRESSES

Karnataka Foam & Coir Company

கர்நாடகா ஃபோம் (அண்டு) காயர் கம்பெனி

133, பாரதி சாலை
(பைகிராப்ட்ஸ் ரோடு)
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

Ph : 830199, 846889 Fax : 830199.



ஆடுகளம் அமர்க்களம்!



"ஐயா... ஒலிம்பியாவில் நடைபெறப் போகும் விளையாட்டுப் போட்டிகளில் நான் கலந்து கொள்ளலாம் என்றிருக்கிறேன்."

"நீ ஒரு சமையல்காரன். உனக்கு போட்டியில் என்ன வேலை?" என்றார் கிரேக்கப் பிரபு.

"எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நான் வெற்றி பெறுவேன்!"

"இங்கிருந்து போனால் மறுபடி உனக்கு வேலை கிடையாது!"

செய்த வேலையை உதறி விட்டு ஒலிம்பியாவில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் சுமார் 215 மீட்டர் ஓடிக் கடந்தான் கரோபஸ். அவனே உலகின் முதல் தடகள வெற்றி வீரன்!

அத்லெட் (Athlete) என்றால் உடல் வலிமையுள்ளவன் என்று பொருள். அந்தக் காலத்தில் கிரேக்கர்கள், வலிமைக்கும் வனப்புக்கும் முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்தார்கள். என்றாலும் இன்றைக்குக்


> தினம் தினம் ஒரு பிரமுகர் கணிசமான நன்கொடையை முதல்வரிடம் கொடுக்க, சென்னையில் நடைபெறவுள்ள சர்வதேச தடகளப் போட்டிக்கு ஏராள நிதி சேர்ந்து வருகிறது... இந்த நிதியெல்லாம் முறைப்படி செலவு செய்யப்பட வேண்டுமே என்ற கவலைக்கிடையிலும் தமிழகத்தின் தலைநகரத்தில் நடக்கவுள்ள அமர்க்களமான தடகளப் போட்டிகளை எண்ணிப் பெருமைப்படத்தான் வேண்டும்.

தடகள ஓட்டம் என்று சொல்லப்படும் விளையாட்டுக்கு மூலம் எது என்று யாராலும் வரை யறுத்துச் சொல்ல முடியவில்லை. ஆதி மனிதன் கொடிய மிருகங்களிடமிருந்து தப்ப, ஓட்டம் பிடித்தது தான் முதல் ஓட்டப் பந்தயமாக இருந் திருக்க வேண்டும். ஓட்டப் பயிற்சி இல்லாவிடில் மனித இனம் அழிந்து விடும் என்பதால், தன் சந்ததிகளுக்கும் கற்றுக் கொடுத்தான். இதற்காக, யார் வேகமாக ஓடுகிறார்கள், பார்க்கலாம் என்று போட்டிகள் துவங்கப்பட்டன.

ஏதென்ஸ் நகரில் 1896-ல் புதிய ஒலிம்பிக் பந்தயம் மீண்டும் துவங்கப் பட்ட போது, அத்லெட்டிக்ஸுக்கு அமோக ஆதரவு கிடைக்கத் துவங்கியது. ஹார்வார்டு பல்கலைக் கழக மாணவரான ட்ரூபன் என்பவர், புதிய ஒலிம்பிக்ஸின் முதல் ஓட்டப் பந்தய வீரரானார். பேராசிரி யரிடம் சொல்லிக் கொள்ளாமலேயே போட்டிக்குச் சென்றதால், பல்கலைக் கழகத்தை விட்டே நீக்கலாம் என்று முடிவெடுத்திருந்த நிர்வாகம், ட்ரூபன் தங்கப் பதக்கத்தை வென்றதும் வாழ்த்தி வரவேற்றது!



✱ அஸ்வினி நாச்சப்பா



✱ பகதூர் பிரசாத்



அத்லெட்டிக் போட்டிகளுக்கு முழு அளவு அங்கீகாரமும், கௌரவமும் கிடைத்தது, சர்வதேச அமெச்சூர் அத்லெடிக் பெடரேஷன் உருவாகிய பின்னர்தான். பலரக ஓட்டப் பந்தயங்கள் தவிர நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல், தட்டு எறிதல், வேலெறிதல் போன்ற விளையாட்டுப் போட்டிகளும், அத்லெடிக்ஸுடன் சேர்க்கப்பட்டன. ஓட்டப் பந்தயங்களுக்கு 100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர், 800 மீட்டர் என்று தூரம் வரையறுக்கப்பட்டது.

தவிர, விரைவோட்டம் (sprint) இடைநிலை ஓட்டம் (Middle distance) நெட்டோட்டம் (Long distance) தடை தாண்டி ஓட்டம் (Hurdles) தொடரோட்டம் (Relay) என்று போட்டிகள் தோன்றின.

ஆசியாவைப் பொறுத்தவரை, முதல் அத்லெடிக் போட்டிகள் 1913ல் மணிலாவில் நடந்தன. அந்தச் சமயத்தில்தான் இந்தியா சர்வதேச அத்லெடிக் சங்கத்தில் உறுப்பினரானது. 1946 முதல் தேசிய அளவிலான போட்டிகள் நமது நாட்டில் நடைபெற்று வருகின்றன. வருடம் இரண்டு முறை, தேசிய போட்டிகளை (open nationals) நடத்துகிறது, இந்திய அமெச்சூர் அத்லெடிக் பெடரேஷன்.



இந்த வருடம் சண்டிகரில் நடக்கவிருந்த தேசியப் போட்டிகளை, சென்னைக்கு மாற்றிய பெருமை முதல்வர் ஜெ.வையே சாரும். "40 கோடி ரூபாய் செலவில் கம்பீரமான நேரு ஸ்டேடியத்தைக் கட்டி, உலகக் கோப்பை கால்பந்து போட்டியை நடத்திக் காட்டினார் முதல்வர். இப்போது ஸ்டேடியத்துக்குள்ளேயே செயற்கை இழை (Synthetic) தடகள ஓடுகளம் ஒன்று, இரண்டு கோடி செலவில் உருவாகி இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொண்டு போட்டிகள் நடத்த இருக்கிறோம்" என்றார் அதிகாரி ஒருவர். தேசியப் போட்டிகளுடன், 'சர்வதேச அழைப்பு அத்லெடிக் போட்டிகளும் நடைபெறுகின்றன. 25 நாடுகளைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்ட புகழ்பெற்ற வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

இந்தப் போட்டிகளுக்காக நேரு ஸ்டேடியம், சர்வதேசத் தரத்தில் தயாராகி வருகிறது. எட்டு பேர் ஓடக்கூடிய சிந்தடிக் டிராக், ஜோதி எரிய 40 அடி உயர பீடம், வெற்றியை நிச்சயிக்கும் போட்டோ ஃபினிஷ் சாதனம், காற்றை அளக்கும் கருவி, நவீன நேரம் காட்டி, தூரம் அளக்கும் சமீபத்திய சாதனம், நவீன ஸ்கோர் போர்டு என்று ஸ்டேடியமே புதுமலர்ச்சி பெறுகிறது. தலைமைச் செயலர் வெங்கட்ராமன் தலைமையில், விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் செயலர் அபுல்ஹசன், உயர் போலீஸ் அதிகாரி தேவாரம் ஆகியோர், போட்டிகள் நல்ல முறையில் நடக்க உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அத்லெடிக் உலகில் 1950களில் மில்கா சிங் ஏற்படுத்திய சாதனைகள்

தடைதாண்டும் இளஞ்சிங்கம்!

சென்னையில் இப்போது நடக்கும் அத்லெடிக் போட்டிகளின் சின்னமாக, தடைதாண்டும் இளஞ்சிங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. முதல்வரின் கற்பனைக்கு, வடிவம் கொடுத்திருக்கிறார்கள் அடின்பிக்ஸ் விளம்பர நிறுவனத்தினர்.




- சிங்கம் குதித்தோடும் வகையில் அமைக்கப்பட்டிருப்பது, ஒரு அத்லெட்டின் உற்சாகத்தைக் குறிக்கிறது.

- மற்றவர்களுடன் போட்டி போட வேண்டும் என்பதைத் 'தடை' உணர்த்துகிறது.

- ஷூவில் உள்ள ஐந்து ஆணிகள், ஐம்புலன்களையும் அடக்கினால் வெற்றி நமதே என்று சொல்கிறது!

இளஞ்சிங்கத்துக்கு மஞ்சள், பழுப்பு, பச்சை வண்ணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அமைதி, சந்தோஷத்தைக் குறிப்பது பச்சை. உற்சாகத்தைக் குறிக்க மஞ்சள். உடல்நலத்தையும் சக்தியையும் குறிக்க பழுப்பு!



வெகுகாலத்துக்கு தோற்கடிக்கப்படாமல் இருந்தன. 'தங்க மங்கை' பி.டி. உஷா வுக்குப் பிறகுதான் அத்லெடிக்ஸ், பாமரர்களும் ஆர்வத்துடன் பார்க்கும் ஒரு போட்டியாக மலர்ந்தது. தமிழகத் திலிருந்து ஏராளமாக புது வீரர்கள் உருவாகி இருக்கிறார்கள். நடராஜன், ஆனந்த நடராஜன், ராபர்ட் செல்வராஜ், பரத்வாஜ், ஸ்ரீதரன் போன்றோர் நம்பிக்கை நட்சத்திரங்கள். அதே போல் பெண்கள் பிரிவில் கவிதா, ஜெயந்தி ஆகியோர் ஜொலிக்கிறார்கள். 1500, 5000, 10000 மீட்டர் ஓட்டப் பந்தயங்களில் தெற்காசிய, தேசிய சாதனைகளை நிகழ்த்தி வரும் பகதூர் பிரஸாத் சென்னை போட்டிகளில் பங்குபெறுகிறார். திருமணத்திற்குப் பிறகும், ஒரு சிறந்த அத்லெட்டாக நிலைத்து நிற்கும் ஷைனி தவிர, சாரம்மா, மொய்லி சாக்கோ என்று பெண் வீராங்கனைகளும் உண்டு. மொத்தத்தில் 750 அத்லெடிக் வீரர்கள் கலந்து கொள்வார்கள். ரசிகர்களுக்குக் கொண்டாட்டம்தான்.

"விளையாட்டுத் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார் முதல்வர். தமிழ் நாட்டில் 388 பஞ்சாயத்து யூனியன் களிலும் கிராமப்புற விளையாட்டு மையம் அமைக்கப்படவிருக்கிறது. ஒவ்வொரு மையமும் இரண்டு பள்ளிகளைத் தத்தெடுத்து, அங்குள்ள திறமையுள்ள இளஞ்சிறுவர்களையும் சிறுமிகளையும் கண்டுபிடித்து, பயிற்சிகள் கொடுக்கும். எதிர்காலத்தில் தமிழகத்தைச் சேர்ந்த வர்கள் சாதனைகளை நிகழ்த்த இது ஒரு துவக்கம்" என்கிறார் விளையாட்டுத் துறை அதிகாரி ஒருவர். ஏற்கெனவே விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம், அத்லெடிக் வீரர்களுக்கு டிராக் ஸூட்டும், ஷூவும் அளிக்கப்படுகிறதாம்.

"தடகளப் போட்டிகளுக்கு நல்ல பயிற்சிகள் தேவை. பூனாவில் இப்போது முடிவடைந்த தேசியப் போட்டிகளில் தடகள ஓட்டங்களில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் தங்கப் பதக்கங்கள் வாங்கவில்லை என்பதே நாம் இன்னும் செல்ல (ஓட?) வேண்டிய தூரம் அதிகம் என்பதைக் காட்டவில்லையா?" என்று கேட்டார் தமிழக வீரர்களைத் தயாரிக்கும் பயிற்சியாளர் ஒருவர்.




- ப்ரியன்

அட்டையில் : பி.டி. உஷா, அனிதா சூட், வலசம்மா.

இந்தியப் பெண்களை பலியாடு ஆக்காதீர்கள்!

புதியதொரு கு.க. சாதனத்தை எதிர்த்துப் பல மாதர் அமைப்புகள் பலமாகக் குரல் எழுப்பியிருக்கின்றன. "ஆபத்து!" என்று எச்சரிக்கின்றன.



'**நா**ர்பிளான்ட் - ஆர்' என்ற கு.க. சாதனத்தை தேசிய குடும்ப நலத் திட்டத்தில் அறிமுகப்படுத்த மத்திய அரசு முயன்று வருகிறது. தீக்குச்சி சைஸில் ஆறு காப்ஸ்யூல்கள் அடங்கிய சாதனம் நார்பிளான்ட் - ஆர். சிலிகான் போர்வையுடன் கூடிய இந்த ஹார்மோன் குப்பிகளைப் பெண்களின் கையில் தோளுக்கடியில் பொருத்திவிட்டால், சிலிகானைத் துளைத்து மெள்ள ஹார்மோன் வெளிப்பட்டு ரத்தத்துடன் கலக்கும். ஐந்து வருடங்களுக்குக் கருவுறுதலிலிருந்து பாதுகாப்பு அளிக்கவல்லது இச்சாதனம்.

- ஒரு முறை பொருத்திக் கொண்டால் ஐந்து ஆண்டுகளுக்குக் கவலையில்லை.
- இந்தக் காலகட்டத்தின் இடையே மனம் மாறி நார்பிளான்டை நீக்க விரும்பினால் நீக்கலாம்.
- நீக்கப்பட்ட அல்லது பயன் முடிந்த காலத்திலிருந்து இரண்டு மாதம் சென்ற பிறகு மீண்டும் கருவுற முடியும்

என்று நார்பிளான்டின் அனுகூலங்களைச் சொல்கிறார்கள். ஆனால்.....

இம்முறையினால் மாத விலக்கு சுழற்சியில் பாதிப்புகள் ஏற்படும் என்பதை ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அரசாங்க மருத்துவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். 'எனினும் சுலபமாகச் சரி செய்து விட முடியும்' என்பதும் அவர்களுடைய வாதம்.

"**சு**லபமான, செலவு குறைவான முறை என்பதாகவே ஏழை எளிய பெண்கள் நார்பிளான்டை நாடக்கூடும். ஆனால் இவர்களுக்கு அதன் பக்க விளைவுகள் பற்றித் தெரிந்திருக்குமா? தெரிந்திருந்தாலும் தேவையானபோது மருத்துவ வசதி பெறும் வாய்ப்பும் வசதியும் இவர்களுக்கு இருக்கிறதா? ஒரு குக்கிராமத்துப் பெண்ணுக்கு திடீரென்று உதிரப் போக்கு அதிகமானால் அவள் கதி என்ன?" என்று கேள்வி எழுப்புபவர் டாக்டர் டெய்ஸி தர்மராஜ். இவர் Prepare என்ற பெண்கள் நல அமைப்பின் இயக்குனர்.

"நார்பிளான்ட் பொருத்திக் கொள்ளும் பெண்களை, தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு மருத்துவர்கள் கண்காணிக்க வேண்டும். ஆராய்ச்சி நிலையையே இன்னும் கடக்கவில்லை என்னும் போது ஒரு சாதனத்தை எப்படி உபயோகத்துக்கு உகந்ததாக ஏற்க முடியும்?" என்கிறார் டெய்ஸி தர்மராஜ். இதையேதான் இதர மாதர் அமைப்புகளும் வலியுறுத்துகின்றன.

பரிசோதனை முயற்சியாக, நார்பிளான்ட் - ஆர் உபயோகத்துக்குத் தங்களை உட்படுத்திக் கொள்ள, சென்னை


ICMR மருத்துவமனையில் மட்டும் 500 பெண்கள் முன் வந்தார்கள். 'இவர்கள் அனைவரது. உடல் நலனும் தொடர்ந்து கண்காணிக்கப் பட்டதா? அவர்களின் அனுபவம் என்ன? பக்க விளைவுகள், பிரச்னைகள் என்ன? இதையெல்லாம் வெட்ட வெளிச்சம் ஆக்குங்கள்' என்கின்றன மாதர் அமைப்புகள்.

மேலும், நார்பிளான்ட் - ஆர் உபயோகத்துக்கு ஏற்றதா என்ற ஆராய்ச்சியின் முதல், இரண்டாவது கட்டங்கள் மட்டுமே முடிந்துள்ளன. மூன்றாவது நான்காவது கட்டப் பரிசோதனைகள்தான் மிக முக்கியமானவை. இவைதான் அச்சாதனத்தின் முழுபாதுகாப்புத் தன்மையை உறுதிப் படுத்த வல்லவை. இந்தக் கட்டப் பரிசோதனைகளைச் செய்யாமலே, சுமார் இருபதாயிரம் பெண்களின் பேரில் நார்பிளான்டை உபயோகித்துப் பார்க்க இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் முடிவு செய்துள்ளது. இந்த முடிவை எதிர்த்துப் பெண்கள் அமைப்புகள் போராடுகின்றன.

நார்பிளான்ட் - ஆரின் பாதுகாப்புத் தன்மையும் நம்பகத்தன்மையும் உறுதியாக வில்லை. அதன் உபயோகிப்பாளர்கள் பின்னர் குழந்தை பெற்றுக் கொள்ள முடிவு செய்து கருவுற்றால், ஃபெல்லோபியன் டியூப்களில் கருச் சேர்க்கை (ectopic pregnancy) ஏற்பட்டு உயிருக்கே ஆபத்து உண்டாகும் வாய்ப்பு இருக்கிறது. மார்பகப் புற்று நோய், கருப்பையில் புற்று நோய் மற்றும் கட்டிகள், இதயக் கோளாறு போன்ற பக்க விளைவுகள் ஏற்படும் சாத்தியக் கூறுகளும் உண்டு எனப் பெண்கள் அமைப்புகள் கவலையுடன் குரல் கொடுத்து வருகின்றன.

ஒரு நாட்டின் ஜனத்தொகையைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில் அரசாங்கத்துக்குக் கவலையும் அக்கறையும் இருப்பது போலவே, மக்களின் ஆரோக்கியத்திலும் அக்கறை இருக்க வேண்டும். எனவே கு.களை ஏற்றுக் கொள்ளத் தயாராக உள்ள ஒரு சமுதாயத்தின் மீது விபரீதப் பரீட்சைகளை நடத்தாமல் முறையான ஆராய்ச்சிக்குப் பிறகு, அபாயமற்ற சாதனங்களையே சிபாரிசு செய்ய வேண்டும். பெண்களும், புதிய கருத்தடை சாதனங்கள் விளம்பரப் படுத்தப்படும் போது கவனமாக விசாரித்துத் தெரிந்து கொண்டே அதைப் பயன் படுத்த வேண்டும்.

- பாலன் பூங்குழலி.



அரசியல் அத்லெடிக்ஸ்...
விட்டு எறிஞ்சேன்னா பாரு...
...டில்லியிலே போய் விழுவாரு...
ஐயோ!...
நரசிம்மராவ்
சாக்கு ரேஸ்ல நம்மோட போட்டி போடறதுக்கு எவனுமே கிடையாது!
மெத்தனப் போக்கு
அடக் கடவுளே! தம்மாத் துண்டு கம்பை வச்சுக்கிட்டு, இம்மாம் உசரம் எப்படித் தாண்டறதாம்!
பட்ஜெட் பற்றாக்குறை
அரசின் ஊதாரிச் செலவினங்கள்
எத்தனை தடைகள் இருந்தால் என்ன, தாண்டாமே விட மாட்டேன்...
புலிகள் ஊடுருவல்



கல்கி



1994
பிப்ரவரி 6
மலர் : 52
இதழ் : 28
ஸ்ரீமுக
தை 24

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

குட்டிச்சுவரான அரசியலுக்குக் குடியரசுதினம் ஒரு கேடா?

அப்பாடா! ஒரு வழியாகக் குடியரசு தினத்தில் ஆளுநர் கொடியேற்றி விட்டார். ஆளுநருக்கு அவமானம் இல்லை என்பதால் காங்கிரஸ்காரர்கள் நிம்மதி அடையலாம்.

மாலை ஆளுநர் அளித்த தேநீர் விருந்தை சப்ஜாடாக ஜெயலலிதா அண்டு கம்பெனி புறக்கணிக்க, ஆளுநருக்கு மூக்கு அறுபட்டதாக அ.தி.மு.க. வினர் மகிழலாம்.

குடியரசு தினம் என்பது கடந்த கால சாதனைகளை மட்டுமல்ல; தவறுகளையும் எண்ணி அடக்கம் பெற வேண்டிய நாள். எதிர்காலத்தைத் திட்டமிடுவதுடன் மீண்டும் தவறுகள் நேராதிருக்க உறுதி பூண வேண்டிய தினம். ஆனால் குட்டிச்சுவராகிவிட்ட நமது அரசியலில், 'ஆளுநர் கொடி ஏற்ற வாரா மாட்டாரா?' என்பதுதான் குடியரசு தினத்தின் முக்கிய பிரச்னையாகி விட்டது! அன்று பனிப்போருக்கு ஒரு முடிவு ஏற்படும் என்று எண்ணியவர்கள், அது முற்றி விட்டதைத்தான் கண்டார்கள்.

'ஆளுநர் கொடி ஏற்ற முடியாமல் இடையூறு விளைவிக்க அ.தி.மு.க. வினர் சதி' என்று வாழப்பாடி குற்றம்சாட்ட; 'பொறுப்பற்ற பேச்சு' என்று ஜெ. குமுறி எழுந்து, பிரதமரிடம் புகார் பண்ண; கொடியேற்று விழா தடங்கலின்றி நடக்கவே, 'வாழப்பாடி வாலைச் சுருட்டிக் கொண்டு ஓட வேண்டும்' என்று அ.தி.மு.க. அமைச்சர்கள் கோர, 'நான் அப்படி குண்டு போட்டதால்தான் ஆளுநரைக் கொடியேற்ற விட்டார்கள்; இல்லாவிட்டால் நிச்சயம் இடையூறு விளைவித்திருப்பார்கள்' என்று வாழப்பாடி கூறிச் சமாளிக்க, பத்திரிகைகள் பரிமாறிய தொடருக்குத் தீனியை நன்றாகவே மென்றோம்.

எஸ்.ஆர்.பி. தம் பங்குக்குத் தாமும் ஏதாவது குற்றச்சாட்டு சுமத்த வேண்டும் என்பதற்காக, 'பொங்கல் வேஷ்டி - சேலை விநியோகத்தில் பயங்கர ஊழல்; வேற்று மாநிலங்களிலிருந்து, பினாமி விலாசங்களிலிருந்து ஜவுளி பெறப்பட்டிருக்கிறது; ஏன், கோ-ஆப்டெக்ஸில் விற்காமல் தங்கி விட்டிருக்கும் வேஷ்டி, சேலைகளை வாங்கி விநியோகித்திருக்கக் கூடாதா? விசாரணை தேவை' என்றெல்லாம் பாய்ந்திருக்கிறார்.

'நிரூபித்துக் காட்டு; இல்லையேல் வழக்குத் தொடருவோம்' என்பது பதிலுக்கு அ.தி.மு.க. அமைச்சரின் அச்சுறுத்தல்!

காங்கிரஸ்காரர்கள் மட்டுமென்ன, புனிதர்களா? அங்கும்தான் ஊழல்! கறுப்புப் பணம்! தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, சிறுபான்மை நலக்குழுவைச் சேர்ந்த ஹாரூன், அமானுல்லா இருவருமாகச் சேர்ந்து நடத்தும் லாட்டரி ஏஜென்ஸியில் வருமான வரி இலாக்காவினர் ரெய்ட் நடத்திய போது எம்.எல்.ஏ. ரங்கநாதனும் அங்கு இருந்திருக்கிறார். அவரும் தாமோதரனும் சேர்ந்து ரெய்ட் நடத்திய அதிகாரிகளை மிரட்ட, அவர்கள் தலைமைச் செயலரிடம் முறையிட, எம்.எல்.ஏ., தாமோதரன் இருவரையும் போலீஸ் கைது செய்தது.

ஆக மொத்தம், "ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்" என்று காமராஜர் முன்பு சொன்னது, எல்லா அரசியல் கட்சியினருக்குமே இன்று பொருந்துவதாகி விட்டது.

டான்ஸி ஊழல், நிலக்கரி ஊழல், சத்துணவுக் கூட ஊழல், தார் டிரம் ஊழல், ஆசிரியர்கள் நியமன ஊழல், வேஷ்டி சேலை ஊழல், மருத்துவக் கல்லூரி அட்மிஷன் ஊழல் என்று காங்கிரஸ்காரர்கள் அடுக்கிக் கொண்டே போக, அ.தி.மு.க. வினர் எல்லாவற்றையும் மறுத்துக் கொண்டே வர, 'எது உண்மை, எது பொய்' என்று புரியாமல் தமிழன் தவிக்கிறான்.

எனவே, மேல்நாடுகள் சிலவற்றில் உள்ளது போல், 'ஆம்பட்ஸ்மான்' என்பதாக ஒன்றை ஜெ. அமைத்தால், அதில் ஊழல் புகார்களை முதலில் சமர்ப்பிக்கலாம். சாட்சியங்களை அலசி, குற்றச்சாட்டில் சாரம் இருக்கிறதென்றால் வழக்குப் போட அனுமதி தருவது 'ஆம்பட்ஸ்மானி'ன் பணி. இதில் கட்சி வேற்றுமை இன்றி, எந்த நபரும் எந்தக் கட்சித் தலைவர் அல்லது உறுப்பினர் மீதும் குற்றம் சுமத்தலாம். அவதூறு வழக்கு, அவதூறு வழக்கு வாபஸ் என்பதற்கெல்லாம் இடமில்லாமல் போகும்.

இத்தகைய அமைப்பை 'ஜெ' ஏற்படுத்தினால், இந்தியாவுக்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்குவார். ஆனால் ஒன்று -

"ஆம்பட்ஸ்மானுக்கும் நானே தலைவி" என்பதாக மட்டும் அவர் சொல்லக் கூடாது!

பின்னாலிருந்து இயக்குவது யார்?

◆ ஆவேசமாகக் குமுறினாலும், எரிச்ச லூட்டும் கேள்விகளுக்குக் கூட, விளக்க மாய் பதில் சொன்னதில், தான் அரசியல் முதிர்ச்சி பெற்றவர்தான் என்பதனைத் தெளிவாக்கி விட்டார் வை.கோ! அது சரி; இனி உமக்கு கலைஞர் பேட்டி கொடுப் பாரோ?
பொன்மலை, துரை. நாகராஜன்.

◆ நானா துரோகி என்று கலைஞரும் பொதுக் கூட்டங்களில் நியாயம் கேட்கிறார். வை.கோவும், வீராவேசமாகப் பேசி வரு கிறார். பலன்? உண்மையான தொண்டர்கள் கூடச் சந்தேகப்படும் அளவு சந்தர்ப்பச் சூழ் நிலைகள், கைகொட்டி சிரிக்கின்றன. ஆகவே ஒரு கட்சியில் இரண்டு பெருந் தலைகள், போட்டி போட்டுக் கொண்டு, பகையை வளர்ப்பதால் லாபமடையப் போவது எதிர்க்கட்சிகளே.
கும்பகோணம், எஸ்.கே. மூர்த்தி.

◆ ஐம்பது வருடங்களாக அயராது பாடு படும் கருணாநிதியை, அவராலேயே வளர்க் கப்பட்ட வை.கோ., எவ்வளவு உரக்கக் குறைகூறினாலும் அதைத் தங்களுடைய பிரச்னையாகக் கருத மக்கள் தயாராக இல்லை. வை.கோபால்சாமி பேட்டியளித் துள்ள கல்கி வெளிவந்த அதே நாளில், "அறி வாலயத்தை மீட்போம்" என்று வை.கோ. பேசியுள்ளது தினசரிகளில் வந்துள்ளது. ஒரே முரண்பாடுகள். எதுவுமே வேண்டாமென் பவர் புதுக் கட்சி துவங்குவதுதானே நியா யம்? அவரை யாரோ பின்னாலிருந்து இயக் குவதாகவே இச்செயல்கள், கருதச் செய்கின்றன.
கோவை, எஸ். திருமலை.

◆ நெகிழ வைத்தது தலையங்கம். பெரி யவர் இழப்பு சட்டென்று மனத்தைத் தாக்கி னாலும் அதிலும் ஒரு தத்துவம் புரியத்தான் செய்கிறது. அவரது மொழிகள் நடைமுறை சாத்தியமானால் இன்றைய சமூக-அரசியல்-ஜாதிப் பிரச்னைகளுக்கு அற்புத விடிவு வாய்க்கும்.
திருச்சி, தாயு. செந்தில் குமார்.

◆ சேஷன் மாமிக்கும் அவரது கணவரின் குணத்தில் பாதி இருக்கும் போலிருக்கே. அவரது அழுத்தமான + தெளிவான பேச்சி (கருத்து)லிருந்து இது புலப்பட்டதுங்கோய்!
பு.க.பாளையம், சி. ரஜினி அருள்.

◆ திருநீர்மலையைப் பற்றிய கம்பீரமான கட்டுரை எங்கள் மனத்தில் மத்தளம் கொட் டியதென்றால்... இயற்கை எழிலை இனி மையாகக் 'கிளிக்' செய்த புகைப்படங்களோ எங்கள் இதயத்தில் பசுமரத்தாணியாய்ப் பதிந்தது!
சேலம் - 9, மு. இரவிச்சந்திரன்.

◆ "மூடப்பட்ட வழிகள்" சிறுகதை நூற் றுக்கு நூறு கலப்படமற்ற உண்மைச் சம்ப வம் என்பதால் படிப்பதற்கு விறுவிறுப் பாகவும் சிறந்த கதையைப் படித்த மன நிறைவும் கிடைத்தது.
தஞ்சாவூர், வளர்மதி ஆசைத்தம்பி.


◆ "வீட்ல விசேஷங்க" பட விமர்சனத் தில் உங்கள் சினிமா விமர்சகரின் குறும்புத் தனத்தைப் படித்து வியந்தேன். இந்தப் புத்தாண்டின் சிறந்த விமர்சனங்களுள் ஒன்றாக இடம்பெறும் தகுதி இதற்கு உண்டு. காணாமல் போன பாக்யராஜ் அடுத்த படத்தில் திரும்புவார் என்று நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
வேலூர் - 7, பா.வை. சுவாமிநாதன்.

◆ கன்னியாகுமரி - நாகர்கோவில் வாச கர்களுக்கு ஜோக்ஸ், கவிதைப் போட்டி நடத்தியதையும், கும்பகோணம் வாசகர் களுடன் சந்திப்பு மட்டுமே நடத்தியதையும் என்னால் மன்னிக்க முடியாது!
குடந்தை, பிரசன்னகுமார்.

◆ 'வெவ்வேறு தொழில் புரிபவர்கள் எழுத்தாளர்களானால் எப்படி இருக்கும்?' கற்பனைப் பகுதியை ஓடும் பஸ்ஸில் படிக்கத் தொடங்கி, படிக்கப் படிக்க வாய் விட்டுச் சிரித்தவுடன் என் இருக்கையின் அருகிலிருந்தவர் ஒரு மாதிரி என்னைப் பார்க்க, நான் 'ஙே' என அசடுவழிந் தேன்!
திருவட்டார், தா. சிந்துகுமார்.



* ஆர்.கே. லக்ஷ்மண்



* மதி



ஆர்.கே.லக்ஷ்மணும் அடுத்த நூற்றாண்டும்!

பிரபல கார்ட்டூனிஸ்ட் ஆர்.கே. லக்ஷ்மண் சென்னை வந்திருந்தார். இருபத்தோராம் நூற்றாண்டு எப்படி இருக்கும் என்று சவேரா ஓட்டலில் ஜனவரி 24 அன்று பேசினார். அவரது டிரேட் மார்க் குறும்புத்தனம், பேச்சு முழுக்க விரவிக்கிடந்தது. சில சாம்பிள்ஸ் :

● இந்த நூற்றாண்டில் நமக்கிருக்கும் பல குழப்பங்கள், வரும் நூற்றாண்டிலும் தொடரவே செய்யும். திட்டங்கள் பல அவ்வப்போது போடத்தான் செய்வார்கள். ஆனால் பிரயோஜனம் ஒன்றும் இருக்காது. வக்கணையாக, இருக்கிற குழப்பங்கள் பற்றிப் பேசுவார்கள். நாம் குழம்பாமல், அக்குழப்பங்களைப் புரிந்து கொள்ள முடியும். அவ்வளவே.

● தலைவர்களின் பிறந்த, இறந்த நாள் கொண்டாட்டங்களுக்கு இடைவெளியே இருக்காது. சமாதிக்குப் போய் மலர் வளையம் வைப்பது, நமது பிரதமரின் தினசரிக் கடமைகளில் ஒன்றாகி விடும்.

● நானும் 47 வருடமாகக் கார்ட்டூன்கள் வரைந்து வருகிறேன். எதற்கு வரைகிறேன் என்று எனக்கே தெரியவில்லை. இதன் மூலம் சீர்திருத்த நோக்கம் ஏதும் எனக்கு இல்லை. என் படங்களை ஏன் பப்ளிஷ் பண்ணுகிறார்கள் என்பதே எனக்குப் புதிராக இருக்கிறது!

பி.கு. : மேலே காணும் கார்ட்டூன், நமது கார்ட்டூனிஸ்ட் மதி வரைந்தது. ஆர்.கே. லக்ஷ்மணும் அவரது படைப்பான மிஸ்டர் பொது ஜனமும். மதி இதை லக்ஷ்மணிடம் காட்டி ஆட்டோகிராஃப் கேட்க - லக்ஷ்மண், ஒன்றுக்கு நான்கு கையெழுத்து போட்டு விட்டார்!



சேதுபதி I.P.S.

உருவுவதிலும் உல்டாவிலும் டைரக்டர் மன்னன். இங்கிலீஷ் ஹேரங்களிலிருந்து ஏரான 'சுடல்' பிஸினஸ்.

தீவிரவாதிகள் தமிழ் நாட்டுக்குள் சர்வ சாதாரணமாய் பிளேன் விட்டு இறங்குகிறார்கள். அண்ணா மேம்பாலத்தில் பாம் போடுகிறார்கள். பள்ளிப் பிள்ளைகளைப் பணயமாய்ப் பிடிக்கிறார்கள்.

போதாக்குறைக்குத் தாய், தங்கை, பொண்டாட்டி, தாத்தா பாசங்கள் வேறு. கொசுறுக்கு 'கடமையா பாசமா' மண்டைக் காய்ச்சல்.

முதல் ஷாட்டில், - அது காரா, பிளேனா? ஸ்பீக்கர் எல்லாம் திறந்து விட்டு, மக்களை மயிர்க்கூச்செரிய வைக்கும் அல்ப ஆசை வேறு. அடுத்த அடுத்த ஷாட்டுகளை என்னவென்று, பக்கத்து சீட்காரர் புட்டு புட்டு வைக்கிறார். ஒரு இடத்தில் தப்பாகவில்லை. அத்தனை சுத்தமான பார்முலா. மாறவே மாட்டேன் என்று எந்தக் கோவில் முன் வீர சபதம் செய்திருக்கிறாரோ டைரக்டர்!

வில்லன் புதுசு. மழு மழு முகம். பூனைக் கண். ஆர்ப்பாட்டமாய் வில்லத்தனம் செய்யும் ஆசை தெரிகிறது. நடுவில் ஜென்டில்மேன் பாணி மொட்டையும் உண்டு.

படத்திற்கு வேகம் கொடுக்க அவ்வப்போது துரத்தல், ஓடுதல், சுடுதல். ஆனாலும் ஜவ்வு, ஜவ்வுதான். ஃ ஸ்டாலில் செமை வசூல்.

படம் பார்த்துவிட்டு வருபவர், பார்க்கப் போகிறவரைப் பரிதாபமாகப் பார்க்கிறார்.... ஹூ்ம்!

- துளசி.

வாங்க பார்ட்னர் வாங்க



மாரியம்மன், வேப்பிலை, மஞ்சள் புடைவை, யானை, குரங்கு, ஷாமிலி இன்னபிறவற்றை விடுத்து, கொஞ்சம் போல் சிரிக்க வைக்கும் முயற்சியில் விகவோடு கூட்டணி அமைத்திருக்கிறார் ராமநாராயணன்.

ஆயினும் அதிமுக - காங்கிரஸ் கூட்டணியின் கடைசி காலத் தோற்றம் மாதிரிதான் முழுப் படமும்.

எம். ஆர். ராதாவை நகலெடுக்கும் ராதா ரவி, விநோதமான ஒலிக் கலவைகளை அவ்வப்போது எழுப்பி பயம்காட்டும் வெ. ஆ. மூர்த்தி, குட்டிக்கரணம் போட்டாலும் சிரிப்பு வரவழைக்க முடியாத எஸ்.எஸ். சந்திரன் - கடவுளே! இவர்களைக் கொண்டு ஒரு நகைச்சுவைப் படமா?

பல், சீடை கேட்கும் போதெல்லாம் தடுத்து ஆட்கொள்ளபவர் விக. கதைப்படி, மனித உருவில் பிள்ளையார்! அவர் கண்டல் மகாத்மியம் பாடுவதும், லேசான அரசியல் நையாண்டி புரிவதும், வழக்கம் போல் குழப்பம் விளைவித்து, தெளிவிப்பதும் - யாருக்கும் ரசிக்கும்.

அடிமுட்டாள்களாக ஆரம்பத்தில் காட்டப்பட்டு, பிள்ளையார் அருளால் அலிபாபா குகை வஸ்து அள்ளிச் சொரியப்பட்டு, ரா.ரவி & கோ ஷோக் பேர்வழிகளானதும் - கதை வளர்க்கும் பொருட்டு வழிமாறிப் போய் விடுகிறார்கள். போதாக்குறைக்கு, இளைய சமுதாயத்தின் பிரதிநிதிகளாக விவேக்கும் சின்னி ஜெயந்தும். அசட்டுச் சிரிப்பும் அநியாய வழிசலும்.

சங்கர் - கணேஷ் பிரிந்து, இதில் தனியே கணேஷ் மட்டும். பெரிய வித்தியாசம் ஏதுமில்லை. வழக்கம் போல், பழைய பாடல்களை சிறந்த முறையில் புதிதாக ஒலிப்பதிவு செய்து தந்திருக்கிறார்.

யாரோ சொன்னார்கள், படத்தை பதினாறே நாளில் எடுத்து முடித்தார்கள் என்று. அவசரம், அங்குலம் அங்குலமாகத் தெரிகிறது.

- ஆர்.பி.ஆர்.

தியாக பூமி

ஜனகம்மாள், ''கிருஷ்ணா நீ பேகனே பாரோ'' என்ற கன்னடப் பாட்டுக்குச் சரியாகத் தமிழில் ஒரு பாட்டு, தானே கவனம் செய்திருந்தாள். அதை இப்போது பாடினாள்.

சாரு, அந்தப் பாட்டின் அர்த்தத்துக்குத் தகுந்தபடி அபிநயம் பிடித்துக் கொண்டு ஆடினாள்.

குழந்தைகள் அளவிலாத ஆர்வத்துடன் சாருவின் ஆட்டத்தைப் பார்த்து அநுபவித்துக் கொண்டிருந்தார்கள். இடையிடையே கையைக் கொட்டி, அவர்கள் சாருவை உற்சாகப்படுத்தினார்கள்.

சாருவின் அபிநய ஆட்டம் அவளுடைய வாத்தியாரம்மாளுக்கே வியப்பை யளித்தது. 'நாம் ஏதோ காமா சோமா என்று சொல்லிக் கொடுத்ததற்கே இவ்வளவு நன்றாய் வந்திருக்கிறதே! இன்னும் இந்தக் குழந்தைக்குத் தக்கபடி பயிற்சி அளித்தால் எவ்வளவு நன்றாய் ஆடுவாள்?' என்று எண்ணினாள்.

பள்ளிக்கூடத்து முதல் மணி அடித்தது; கொஞ்ச நேரத்துக்கெல்லாம் இரண்டாவது மணியும் அடித்தது.

ஆனால், சாருவின் ஆட்டம் நடந்து கொண்டேயிருந்தது. வகுப்புகளெல்லாம் காலியாய்க் கிடந்தன.

பள்ளிக்கூடத்தின் ஹெட்மிஸ்ட்ரஸ், காலியாகக் கிடந்த வகுப்புகளைப் பார்த்துக் கொண்டு, கடைசியில் ஆட்டம் நடந்து கொண்டிருந்த இடத்திற்கு வந்தாள். அவளுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

அந்த ஹெட்மிஸ்ட்ரஸ் இந்தப் பள்ளிக் கூடத்துக்குப் புதிதாக வந்தவள். ஆட்டம் பாட்டுக்களினால் பள்ளிக்கூடத்தின் 'டிஸிப்ளி'னைக் கெடுத்து விடுவதாக ஜனகம்மாளின் பேரில் அவளுக்கு ரொம்பக் கோபம். ஆனால், பள்ளிக்கூடத்தின் நிர்வாகிகள், குழந்தைகளுக்குப் பாட்டும் ஆட்டமும் சொல்லித் தரவேண்டுமென்று வற்புறுத்தியபடியினால் அவள் சகித்துக் கொண்டிருந்தாள். இப்போது வகுப்புகளே நடக்காதபடி ஜனகம்மாள் பள்ளிக்கூடத்தையே குட்டிச் சுவராக்குவதைக் கண்டதும் அவளுக்குச் சொல்ல முடியாத கோபம் வந்துவிட்டது.

கோபத்தை ஜனகம்மாளின் பேரில் காட்ட முடியவில்லை; எனவே, அந்தக் கோபம் சாருவின் மேல் பாய்ந்தது.

மேஜையின் பேரில், கையில் இருந்த பிரம்பினால் ஓங்கி அடித்தாள் ஹெட்மிஸ்ட்ரஸ். எல்லாரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

''டீச்சர்! கலாட்டா போதுமா?'' என்றாள். உடனே, ஜனகம்மாள் குழந்தைகளை அவரவர்கள் வகுப்புக்குப் போகும் படி ஜாடை காட்டிவிட்டுத் தானும் போனாள்.

குழந்தைகள் விழுந்தடித்து அவரவர்களுடைய வகுப்புக்கு ஓடினார்கள். பாவம்! சாரு மட்டும் பின் தங்கி விட்டாள்.

''சாரு! கம் ஹியர்!'' என்றாள் ஹெட்மிஸ்ட்ரஸ்.

சாரு தயங்கிக் கொண்டே அடி மேல் அடி வைத்து வந்தாள்.

''உன் கார்டியன் யார்?'' என்று ஹெட்மிஸ்ட்ரஸ் கேட்டாள்.

''சம்பு சாஸ்திரி'' என்றாள் சாரு.

''யாரு?''

''சம்பு சாஸ்திரி.''

''அவர் உங்க அப்பாவா?''

''இல்லை, எங்க தாத்தா!''

''உங்க அப்பா யாரு?''

''எங்க அப்பா இல்லை.''

''அம்மா?''

''அம்மாவும் இல்லை.''

''அவாள்ளாம் எங்கே?''

''அவா பொறக்கவேயில்லை. நான் மட்டுந்தான் பொறந்தேன்'' என்றாள் சாரு.

வேறு யாராயிருந்தாலும் இம்மாதிரி குழந்தை சொன்னவுடன் கோபம் தணியப்

அமரர் கல்கி

பெற்றிருப்பார்கள். ஆனால், அந்த அம்மாளுக்குக் கோபம் அதிகமாயிற்று.

''அப்பா, அம்மா இல்லையா? ஓஹோ! அதனாலேதான் இப்படித் துஷ்டத்தனம் பண்ணறே? இங்கே வா! கையை நீட்டு!'' என்றாள்.



சாரு அன்று சாயங்காலம் வீட்டுக்குப் போனபோது, சாஸ்திரி எங்கேயோ வெளியில் போயிருந்தார். சாரு, சாஸ்திரியாரின் பூஜை மாடத்துக்கு முன்னால் நின்று, ''அம்பிகே! பராசக்தி! நீ நினைச்சால் முடியாதது ஒண்ணுமில்லைன்னு தாத்தா சொல்வாளே! எனக்கு ஓர் அம்மா கொடுக்கக் கூடாதா, நல்ல அம்மாவா?'' என்று பிரார்த்தனை செய்தாள்.

ஹெட் மிஸ்ட்ரஸ் சாருவின் கையில் கனி ரென்று பிரம்பினால் அடித்தபோது சாருவுக்கு வலித்த தென்றாலும் சற்று நேரத்துக்கெல்லாம் அந்த வலி மறந்து போயிற்று. ஆனால், ''அப்பா, அம்மா இல்லாததனால்தான் இப்படித் துஷ்டத்தனம் பண்றே!'' என்று சொன்னது மட்டும் மறக்கவேயில்லை. அவளுடைய குழந்தை உள்ளத்தில் அதனால் ஏற்பட்ட வலியும் மாறவில்லை. ஆகையினால்தான், அம்பிகையை அவ்வாறு பிரார்த்தனை செய்தாள்.

குழந்தையின் பிரார்த்தனையைக் கேட்டுக் கொண்டே சாஸ்திரி உள்ளே வந்தார். புன்னகையுடன் அவர் சாருவை அணைத்துக் கொண்டு, ''உனக்கு அம்மாவா வேணும், சாரு! பராசக்திதான் உனக்கு அம்மாவாச்சே! வேறு அம்மா என்னத்துக்கு, சாரு!'' என்று கேட்டார்.

''பராசக்திதான் எனக்கு அம்மான்னாக்கே, பராசக்தியை வந்து என்னை மடியிலே எடுத்து வைச்சுக்கச் சொல்லேன். எல்லா அம்மாவும் அவாவா குழந்தையை மடியிலே வச்சுக்கலையா?'' என்றாள் சாரு.

35. உமாராணி விஜயம்

சென்னைப்பட்டணம் சில நாளாக அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. பம்பாயிலிருந்து ஸ்ரீமதி உமாராணி என்னும் சீமாட்டி சென்னைக்கு விஜயம் செய்யப் போகிறாள் என்னும் செய்திதான் அதற்குக் காரணம். டிராம் வண்டிகளிலும், மோட்டார் பஸ்களிலும், கிளப்புகளிலும், காப்பி ஹோட்டல்களிலும், பீச் மணற்கரையிலும், பார்க் புல் தரையிலும் இன்னும் ஜனங்கள் எங்கெங்கே கூடுகிறார்களோ, அங்கெல்லாம் உமாராணியின் வரவைப்பற்றிய பேச்சாகவே இருந்தது.

''ஏன் ஸார்! என்னிக்கு வர்றாளாம்?''

''அடுத்த புதன்கிழமை வர்றதாகப் பத்திரிகையிலே போட்டிருக்கு.''

''எந்த ரயில்லே - பம்பாய் எக்ஸ்பிரஸிலேதானே?''

அருள்வாக்கு



பாஷையை வைத்துக் கொண்டு, 'இது என் பாஷை, இது உன் பாஷை, இந்தப் பாஷைதான் உயர்ந்தது, அந்தப் பாஷைதான் உயர்ந்தது' என்று இப்போது பலர் சண்டை போடுவதைப் பார்த்தால் மிகவும் துக்கமாக இருக்கிறது. நாம் எல்லோரும் ஊமையாகப் போனால் தேவலை என்று கூடத் தோன்றுகிறது. நம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க இருக்கும் கருவி பாஷை. அது எல்லா ஊரிலும் ஒன்றாக இருக்க முடியாது. ஒவ்வொரு கூட்டம் ஒவ்வொரு பாஷையைப் பேசும். ஒவ்வொரு சீமையிலும் ஒரு பாஷை இருக்கும். எனவே 'இது என் பாஷை, அது உன் பாஷை' என்பதும் 'இது உசத்தி, அது தாழ்த்தி' என்று சண்டை பிடிப்பதும் அர்த்தமில்லாத காரியம். 'தெரிந்த பாஷை, தெரியாத பாஷை' என்று வேண்டுமானால் சொல்லலாமே ஒழிய 'என் பாஷை, உன் பாஷை' என்பதே தப்பு. பாஷையால் சண்டை என்பது பெரிய தப்பு. மதத்தைக் காட்டிலும், ஸ்வாமியைக் காட்டிலும் பாஷைதான் உயர்வென்று நினைப்பது மிகவும் தப்பு. பாஷை என்ற ஒரு காரணத்துக்காக மட்டும் சம்ஸ்கிருதம் வேண்டுமா என்றால் நான் கூட வேண்டாம் என்றே சொல்வேன். ஆனால் நம்முடைய மதத்துக்கு மூலமான வேதம், சாஸ்திரம் எல்லாம் அந்தப் பாஷையில் இருப்பதனால் வேதத்தையும் சாஸ்திரங்களையும் ரட்சிப்பதற்காக சம்ஸ்கிருத பாஷையையும் ரட்சிக்கத்தான் வேண்டும் என்கிறேன்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

''நான் சொல்றேன், கேளுங்கோ! அவள் சென்ட்ரல் ஸ்டேஷனிலே வந்து இறங்கமாட்டா. சென்ட்ரல்லே இறங்கினா, கூட்டம் தாங்காது. பேஸின் பிரிட்ஜிலேயே இறங்கிக் காரிலே போயிடுவா.''

''கார்ப்பரேஷனிலே உபசாரம் நடக்கிறதோ இல்லையோ?''

''ஆகா! மீட்டிங் நடந்து தீர்மானங் கூடப் பாஸாயிடுத்தே!''

இந்தச் சமயத்தில், அந்த டிராமிலோ பஸ்ஸிலோ உலக விஷயங்களை அதிகமாய்க் காதிலே போட்டுக் கொள்ளாத மனுஷர் யாராவது இருந்தால், ''ஏன் ஸார்! யாரோ வர்றா, வர்றா என்கிறயளே? அது யாரு?'' என்று கேட்டு வைப்பார்.

''யாரு, உமாராணிதான்'' என்று பதில் வரும்.

''உமாராணியா! அவள் யார் ஐயா, அப்படி ஒருத்தி கிளம்பியிருக்காள்? ஸினிமா ஸ்டாரோ?''

உடனே கலகலவென்று சிரிப்பு.

''என்ன, சிரிக்கறயளே? அவள் யாரு தான் பின்னே? காங்கிரஸிலே சேர்ந்தவளோ?''

''என்ன ஐயா, நிஜமா உமாராணி யாருன்னு தெரியாமயா கேட்கிறீர்?''

''தெரியாமல்தான் கேட்கிறேன். பின்னே, தெரிஞ்சால் கேட்பாளோ?''

''உமாராணிங்கறவள் பம்பாயிலே ஒரு பெரிய பணக்காரி. அவள் நம் ஊர் மீனாக்ஷி ஆஸ்பத்திரிக்கு அஞ்சு லட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறாள்.''

''என்ன? என்ன?''

''அவரைக் கொஞ்சம் பிடிச்சுக்குங்கோ, ஐயா! மூர்ச்சை போட்டு விழுந்துடப் போறார்.''

''என்ன பரிகாசம் பண்றயளா? அஞ்சு லட்சம் ரூபாயாவது, கொடுக்கவாவது?''

''கொடுக்கவாவதுன்னா - கொடுத்திருக்காளே?''

''ஐம்பதினாயிரமாயிருக்கும்; பத்திரிகைக்காரன் ஒரு பூஜ்யத்தைச் சேர்த்துப் போட்டிருப்பான்.''

''அஞ்சு லட்சம்னு இலக்கத்திலும் போட்டு, எழுத்திலும் எழுதியிருக்கு. அப்புறம்?''

''நம்பறதுக்கு முடியாமேன்னா இருக்கு? அஞ்சு லட்சம்! அடேயப்பா!''

''அஞ்சு லட்சமான்னு வாயைப் பிளந்துடறீரே, ஐயா! நமக்குன்னா அஞ்சு லட்சம் பெரிசு! பம்பாயிலே, அஞ்சு லட்சம் என்கிறது அஞ்சு ரூபாய் மாதிரி.''

''ஆமாமாம்; நம் ஊரிலே பெரிய ரூபாய்ன்னா ஓர் ஆயிரம்; அங்கே, ஒரு லட்சம்.''

''பம்பாய்ன்னா, குபேரப் பட்டணந்தான்; சந்தேகம் என்ன? அங்கே இருக்கிற ஒரு லேட் மனை™ வச்சான்னா, இந்த

மெட்ராஸ் பூராவையும் விலைக்கு வாங்கிடு வான்.''

''நம் ஊர்க்காரன்கிட்டப் பணந்தான் இருக்குன்னு வச்சுக்குங்கோ. இந்த மாதிரி ஒரு நல்ல காரியத்துக்கு அஞ்சு லட்சம் கொடுக்க மனஸு வருமா? எவனாவது கொடுத்திருக்கானான்னு கேக்கறேன்!''

''அல்லது எவளாவதுதான் கொடுத் திருக்காளா?''

இந்த மாதிரி எங்கே பார்த்தாலும் பல விதமான பேச்சுக்கள் நடந்து கொண்டிருந் தன.

கடைசியாக, உமாராணியின் விஜய தினம் வந்தது. அவளை வரவேற்பதற்கு ஸ்டேஷனில் ஏராளமான ஜனக்கூட்டம் சேர்ந்திருந்தது. சென்னைப் பிரமுகர் ஒருவர் பாக்கியில்லாமல் வந்திருந்தார்கள். வண்டி வந்து பிளாட்பாரத்தில் நின்று, உமாராணி யின் முகம் தெரிந்ததும், காமராக்கள் 'கிளிக்' 'கிளிக்' என்று சப்தித்தன. நாளைக் குப் பத்திரிகைகளில் படம் வரும்போது, உமா ராணிக்குப் பக்கத்தில் தாங்களும் தெரிய வேண்டுமென்று அநேகம்பேர் தலையைத் தலையை நீட்டினார்கள்.

உமாராணி ரயிலிலிருந்து இறங்கி, அங்கே தன்னை வரவேற்பதற்காகக் கூடி யிருந்தவர்களைப் பார்த்துப் புன்னகை யுடன் ஒரு கும்பிடு போட்டு விட்டுக் காரில் போய் ஏறிக் கொண்டாள். அந்த ஒரு செய் கையினால் சென்னைவாசிகளின் உள் ளத்தை அவள் கொள்ளை கொண்டு விட் டாள் என்றே சொல்ல வேண்டும்.

அடுத்த வாரத்தில் ஸ்ரீமதி உமாராணிக் குச் சென்னைக் கார்ப்பரேஷனின் சார்பாக உபசாரப் பத்திரம் அளிக்கப்பட்டது. அன்று சாயங்காலம், சென்னையிலுள்ள அவ் வளவு மோட்டார் வண்டிகளும் ரிப்பன் கட்டடத்தை நோக்கிச் சென்றதுபோல் தோன்றிற்று. ஆனால் அவற்றில் பெரும்பா லானவை கட்டடத்தின் காம்பவுண்டுக்குள் பிரவேசிக்க முடியாமல் திரும்பிப் போக வேண்டியிருந்தது. ஏற்கெனவே அந்தக் காம்பவுண்டில் அவ்வளவு ஜனங்கள் கூடி யிருந்தார்கள். இவர்கள் எல்லாரும் கட்ட டத்தின் மண்டபத்துக்குள் போக முயன்று, அங்கே ஏற்கெனவே கூட்டம் நிறைந்து விட்டபடியால் ஏமாற்றம் அடைந்து, உமா ராணி வரும்போது அவளைப் பார்த்து விட்டாவது போகலாமென்று நின்றார்கள்.

உமாராணியின் வரவேற்புக்காக ரூ.500 வரையில் செலவு செய்யலாமென்று நகர சபையில் தீர்மானம் ஆகியிருந்தபடியால், நகரசபை மண்டபம் அன்று பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. கார்ப்பரேஷன் மேயரும் உமாராணியும் அமருவதற்காக அமைக்கப்பட்டிருந்த மேடை ஹாலிவுட் தியேட்டர்களில் உள்ள அரங்க மேடை களைப் போல் அவ்வளவு அழகாக விளங் கிற்று.



''என்னுடைய ரசிகர்கள் என்னிடமிருந்து நிறையவே எதிர் பார்க்கிறார்கள்!''

''புதுப் புது காரெக்டர்கள்; வித்தியாசமான நடிப்பு... எல்லாம்தானே!''

''உஹூம்... ரசிகர் மன்றம் நடத்துவதற்கான பண உதவியை!''

– குமார்.

மேயரும் உமாராணியும் மேடையில் வந்து உட்கார்ந்த போது சபையில் எழுந்த கரகோஷம் அடங்குவதற்கு ஐந்து நிமிஷம் ஆயிற்று. பிறகு, மேயர் உபசாரப் பத்திரம் படிப்பதற்காக எழுந்தார். உபசாரப் பத்திரம் ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் எழுதி அச்சிடப்பட்டிருந்தது. மேயர் ஆங்கிலத்தில் எழுதிய உபசாரப் பத்திரத்தைப் படிக்கத் தொடங்கினார். சபையில் இருந்த தமிழபிமானி ஒருவர். ''தமிழ்! தமிழ்!'' என்றார்.

''சபையோர்களே! உபசாரப் பத்திரம் தமிழிலும் இருக்கிறது. ஆனால், நாம் இன்றைக்கு யாரை உபசரிக்கக் கூடியிருக்கிறோமோ அவருக்குத் தமிழ் தெரியாதாகையால், முதலில் இங்கிலீஷில் படித்துவிட்டு, அப்புறம் வேணுமானால் தமிழிலும் படிக்கிறேன்'' என்றார் மேயர்.

இச்சமயத்தில் ஸ்ரீமதி உமாராணி, "Please read in your mother-tongue (தயவு செய்து உங்கள் தாய் பாஷையிலேயே படியுங்கள்)'' என்று மேயரைப் பார்த்துக் கூறினாள். சபையில் முன் வரிசையிலிருந்தவர்களுக்கு இது காதில் விழவே, அவர்கள் கரகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.

மேயர் பிறகு தமிழிலேயே பத்திரத்தை வாசித்தார்!

''... தாங்கள் பம்பாயைச் சேர்ந்தவரா யிருந்தும், இந்தச் சென்னையிலுள்ள மாதர் வைத்தியசாலைக்கு இவ்வளவு பெரிய நன்கொடையை அளித்திருக்கிறீர்கள். தங்களுடைய தர்ம சிந்தனையானது சாதி, மதம், பாஷை, மாகாணம் முதலிய வரம்புகளைக் கடந்தது என்பது இதிலிருந்து வெளியாகிறது. தாங்கள் செய்திருக்கும் இந்தச் சிறந்த தர்மத்தைத் தமிழ் மக்கள்-முக்கியமாகத் தமிழ் நாட்டுப் பெண்மணிகள் - நன்றியுடன் எப்போதும் நினைவு கூர்வார்கள். தங்களுடைய இந்த அரிய உதாரணத்தைத் தமிழ் நாட்டிலுள்ள செல்வந்தர்கள் பின்பற்றுவார்கள் என்று நம்புகிறோம்.

இந்த அரிய நன்கொடையின் மூலம் தங்களுக்கும் தமிழ் நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள உறவு, என்றைக்கும் நீடித்திருக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்,

கார்ப்பரேஷன் மேயரும் அங்கத்தினர்களும்.''

மேற்கண்டவாறு வாசித்துவிட்டு, மேயர் உபசாரப் பத்திரம் அடங்கிய அழகிய வெள்ளிப் பேழையை உமாராணியிடம் அளித்தார். உமாராணி அதை வாங்கி வைத்துவிட்டு உபசாரப் பத்திரத்துக்குப் பதில் சொல்வதற்காக மேடையின் முன்னால் வந்து நின்றாள். அவள் வந்து நின்றவுடனேயே சபையில் பலமான கரகோஷம் உண்டாயிற்று. ஆனால் அவள், ''சகோதரிகளே! சகோதரர்களே!'' என்று தமிழில் பேச ஆரம்பித்ததும், சபையோரின் உற்சாகத்துக்கும் குதூகலத்துக்கும் அளவில்லாமல் போயிற்று. காது செவிடுபடும்படியான கரகோஷம் அடங்கியதும் உமாராணி தொடர்ந்து பின்வருமாறு பேசினாள் :

''சகோதரிகளே! சகோதரர்களே! நான் தமிழில் பேச முன் வந்தது உங்களுக்குச் சிறிது ஆச்சரியத்தை அளித்தது என்று நினைக்கிறேன். ஆனால் இதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. பல வருஷ காலமாக நான் பம்பாயிலேயே வாசம் செய்தபடியால், என்னுடைய நடை உடை பாவனைகளால் வடக்கத்தியாரைப் போல் நான் தோன்றக்கூடும். ஆனால், உண்மையில் நான் இந்தத் தமிழ் நாட்டைச் சேர்ந்தவள் தான். உலகத்தில் பல தேசங்களுக்கும் நான் சென்று பார்த்திருக்கிறேன். மற்ற தேசங்களைப் பார்க்கப் பார்க்கத்தான் நமது தமிழ் நாட்டின் சிறப்பு எனக்கு நன்றாய்த் தெரிய வந்தது. நமது செந்தமிழ் நாட்டைப் போன்ற அழகான நாட்டை நான் வேறெங்கும் பார்த்ததில்லை. தமிழைப் போன்ற இனிமையான பாஷையையும் கேட்டதில்லை. உங்களுடைய உபசாரப் பத்திரத்தில் நீங்கள், எனக்கும் தமிழ்நாட்டுக்கும் ஏற்பட்டிருக்கும் உறவு நீடித்திருக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறீர்கள். உண்மையில், நான் இனிமேல் சென்னை நகரில் வசிப்பதென்ற தீர்மானத்துடனேயே வந்திருக்கிறேன்.''

உமாராணி பேசிக் கொண்டு வந்த போது இடையிடையே சபையில் கைத் தட்டலும், ''கேளுங்கள், கேளுங்கள்'' என்ற கோஷமும் ஏற்பட்டு வந்தன. அவள் இனிமேல் சென்னையிலேயே வாசம் செய்யப் போவதாகச் சொன்னதும் சபையோரின் உற்சாகம் மறுபடியும் ஒரு தடவை உச்ச நிலையை அடைந்தது. கரகோஷ ஆரவாரங்களுக்கிடையில், ''உமாராணிக்கு ஜே!'' என்ற கோஷமும் எழுந்து வானை அளாவிற்று.

(தொடரும்)

தாழம்பூ

பெரமாச்சியாருக்கு வயது எண்பதுக்கு மேலிருக்கும். வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தில் புளியம்பிளார் அடிவாங்கிய உடம்பு. இன்று நம் சுதந்திரத்தைப் போலவே எலும்பும் தோலுமாய்... வெண்கலப்பிடி போட்ட பிரம்பு அவரின் மூன்றாவது காலாய்... கூண்டு வண்டிக்குள் உட்கார்ந்து கொண்டார் பெரமாச்சியார்.

''ஹேய்... ஹேய்...'' கெங்கமுத்துவின் அதட்டலில் ஜல்... ஜல்... ஜதி சொல்லிய படி மாடுகள் சீரான வேகத்தில்... அந்த களிமண் சாலை வெறிச்சோடிக் கிடந்தது. பெரமாச்சியாரின் மனசைப் போலவே. உச்சியை நோக்கிய சூரியன், பூமியை உஷ்ணப்படுத்திக் கொண்டிருந்தான். மூக்கை உறிஞ்சி வாசம்பிடித்தார் பெரமாச்சியார்.

''பில்லாத்தங்கரையில தாழ பூத்திருக்குங்கையா!'' பெரமாச்சியாரின் முகம் பார்த்து கெங்கமுத்து, பக்கத்து புங்கமர நிழலில் வண்டியை நிறுத்தி விட்டு சடேரென இறங்கி, தாழம்பூவோடு திரும்பி, மாடுகளை ஜதி சொல்ல வைத்தான்.

பூவை வாங்கி முகர்ந்த பெரமாச்சியாரின் முகத்தில் வெளிச்சம் கூடியது. பூவை மார்போடு பொத்திக் கொண்டவரின் உதடுகளில் ஒரு துடிதுடிப்பு.

''கெங்கமுத்து... நம்ப மண்டுவா ஓரமா மண்டிக் கெடக்குமே தாழங்காடு, அங்க இப்ப ஒரே பூவாசமா இருக்குமில்ல?''

அவசரமாய் பதிலை எதிர்பார்க்கும் ஆவலில் பெரமாச்சியார்.

''எங்கையா இருக்கு? தழஞ்சி நின்ன தாழங்க காட்டத்தான் அழிச்சிபுட்டானுவளே...!''

இயற்கை தன் வனப்பை இழந்து போனதால் அவனுக்குள் இருந்த சோகம் பெரு மூச்சாய் வெளிவந்தது.

சூழ்ந்து வந்த மேகக் கூட்டமொன்று சூரியனைச் சிறைபிடித்தது.

தாழம்பூவை எடுத்து உற்றுப் பார்த்த பெரமாச்சியார், நோகாமல் அதன் மடல்களை நீவி விட்டு, தன் மார்போடு இறுக்கமாக அணைத்துக் கொண்டார்.

நேரம், நீண்ட மௌனங்களில் கரைந்து கொண்டிருந்தது. கெங்கமுத்து தனது நீண்ட நாள் அரிப்பைத் தீர்த்துக் கொள்ள அவரைத் தயக்கத்தோடு திரும்பிப் பார்த்தான்.

''அய்யா...''

''என்னப்பா...''

''ஏங்கையா நீங்க கலியாணமே கட்டிக்கல?''

''ஏதோ ரகசியத்தைத் தெரிந்து கொண்டு விட்டதைப் போல கெங்கமுத்துக்குள் சந்தோஷம்.

பெரமாச்சியாருக்குள் ஒரு குழந்தை வந்து குந்தியிருக்க வேண்டும். அவரின் முகத்தில் அப்படியொரு புன்னகை. மெல்ல மெல்லத் தனது கடந்த காலத்துக்குள் மூழ்கிப் போனார்.

சர்தார் வேதரத்தினம் பிள்ளையின் சகவாசத்தால் சுதந்திரப் போராட்டத்தை தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டவர் பெரமாச்சியார்.

மண்டுவா நெடுகிலும் பட்டா போட்டுக் கொண்ட தாழைகள். மழையோ, வெயிலோ, காத்தோ, வெள்ளைக்காரன் போலீசோ. எல்லாத்துக்கிட்டேயிருந்தும் பெரமாச்சியாரைக் காப்பாத்தியது, அந்தத் தாழங்கோட்டைதான்.

அலஞ்சி திரிஞ்ச களப்புல, தாழ நெழல்ல மல்லாந்து படுத்திருந்தாரு பெரமாச்சியார். சுதந்திரத்துக்கு போராடுதேன்னு சொல்லிப்புட்டு இப்படி சோம்பேறியா படுத்துக் கெடக்குறியேன்னு கேக்கற மாதிரி கடலோட சப்தம்.

பெரமாச்சியாரோட காமாட்டுப் பக்கமா பதுங்கிப் பதுங்கி வந்தா, ஒரு பொண்ணு. நல்ல கருப்பு. தாமங்கொண்டால் மாதிரி விறிஞ்சி நீண்ட தலைமுடி. எதையும் பொத்துக்கிட்டு பாக்குறாப்போல கண்ணு. கையில நீளமான கம்பு. அது நுனில இரும்புல அடிச்ச கர்தப்பட்ட ஓல குத்தி. சடக்குன்னு பெரமாச்சியார் காலப் புடிச்சி

சக்தி சம்பத்

இழுத்து அந்தண்டையால போட்டவ, பொபேர் பொபேர்ன்னு கருநாகப் பாம்பு ஒன்ன அடிச்சி பெரமாச்சியார் காலுகிட்ட போட்டா. பெரமாச்சியாருக்கு திக்குன்னு ஆயிபுட்டு, மரமாட்டம் நிக்கிறாரு.

''இப்படியா தூங்குவாவோ... காரியா காரவகிட்ட சொல்லி, பெரிய பண்ணையில சொல்லச் சொல்லுரே...'' சொன்னவள் ஓட்டமும் நடையுமா திரும்பிப் பார்க்காமல் போய்க் கொண்டிருந்தாள்.

வானத்துல ஒரு கொடி மின்னல். மின்னலுதான் தாழபூக்கும்பாங்க. அப்படித்தா பளிச்சின்னு அந்தக் கருத்தாழம்பூ பெரமாச்சியாரோட நெஞ்சுக்குள் பூத்துபுட்டுது.

சூடவோர மணமோடு. அதுல குத்து குத்தாராவணந்தாடி. பெரமாச்சியார் மணமோட்டுல ஏறுறாரு. காலு பொதுக்கு பொதுக்குன்னு மண்ணுக்குள்ள வாங்குது. உச்சிக்குப் போயி தங்கூட்டாளி யாரு வருராளுவலான்னு பாக்கறப்போ அபூர்வமா ஒரு செந்தாழம்பூ அவரு கண்ணுக்கு தெரிஞ்சிப் போச்சி. அவ்வளவுதான்! தடபுடான்னு எறங்கி ஓடிப் போயி பூவப் பறிச்சிக்கிட்டு வர்றாரு. தாலுமுள்ளு குத்தி, ஒடம்பெல்லாம் பொட்டு பொட்டா ரெத்தம்.

மஞ்சப் பொழுதாயிட்டு பொல பொலன்னு மழ தூறுது. அந்தப் பொண்ண நெனச்சிக்கிட்டு இந்தப் பூவுக்கு முத்தி கொடுத்துட்டே நடக்குறாரு பெரமாச்சியார்!

மண்டுவாயில அந்தண்டப் பக்கமா அந்தப் பொண்ணு, காயப் போட்ட தாழ ஓலய அவசர அவசரமா அள்ளிக் கட்டிக்கிட்டு இருந்தவ - பெரமாச்சியார் வருறதைப் பாத்துட்டு, எந்திரிச்சி பிழிஞ்சி போன சித்தாடைய சரிபண்ணிக்கிட்டு குனிஞ்சபடியே நிக்கிறா.

கடல் காத்து தாழையில முட்டி மோதி தாழம்பூவோட பேசி, வாசத்த வாங்கிக்கிட்டு வந்த அவங்க ரெண்டு பேரு மேலேயும் ஊறிவுடுது.

பெரமாச்சியார், அவரு மனசில உள்ளதை எல்லாம் ஒண்ணுவிடாம அப்படியே அவகிட்ட கொட்டிப்புட்டு செந்தாழம்பூவ கொடுக்குறாரு. அந்தப் பொண்ணு பெரமாச்சியார நிமுந்து பாத்து களுக்குன்னு சிரிச்சிப்புட்டு.

''அய்யா, நாங்கள்ளா ஒங்க பண்ணையில பண்ணையடிக்கறவங்க..... என்னுக்கிட்ட நீங்க இப்படியெல்லாம் பேசலாமுங்களா...? யாராவது பாத்தா என்னைக் கொன்னு போட்டுடுவாங்களே... நீங்க நெனச்சா என்ன எது வேணுமுன்னாலும் செஞ்சிக்கலாமுங்க. நீங்க போயி என்னைக் கலியாணம் கட்டிகிறேன்னு சொல்லுறியளே இத... இந்த ஊரு ஒலகம் ஏத்துக்குமுங்களா?''ன்னு கேட்டவ, பொகக்குன்னு



பெரமாச்சியார் காலடியில் மண்டியிட்டு அழ ஆரம்பிச்சிட்டா. அந்தப் பொண்ணு அழுறது தாங்க மாட்டாம பெரமாச்சியார், தாழம்பூவ அவ மடி மேல வச்சிட்டு "இருட்டுறதுக்குள்ள வீட்டுக்குப் போ"ன்னுட்டு ரெண்டடி எடுத்து வச்சாரு.

"நீங்க நிக்க சொல்ல எனக்கொன்னும் பயமில்ல"ன்னுட்டு தாழ ஓல கட்ட தல மேல வச்சிக்கிட்டு நடந்து போறா.

பெரமாச்சியாரோட ஒடம்பும், மனசும் சுத்தமா நனஞ்சி போயிருக்கு.

அந்தப் பொண்ண அஞ்சாறு நாளா பாக்காம இருந்ததில, பெரமாச்சியாருக்கு பேயுடிச்சாப்ல ஆயிபுட்டு. பெரமாச்சியார் தாழ விழுதில நார் உறிச்சிக்கிட்டு இருக்காரு. அவரு கைதான் நார் உறிச்சிக்கிட்டு இருக்கு. அவரு மனச அந்தப் பொண்ணு உறிச்சிக்கிட்டு இருக்கா...

உச்சி உரும நேரம். வேக்க விறுவிறுக்க அந்தப் பொண்ணு வறா. கையில பழைய துணியில எதையோ வச்சிக் கட்டின தூக்கு. பெரமாச்சியாருகிட்ட வந்து தயங்கித் தயங்கி பக்கத்ல ஒக்காந்தா. பெரமாச்சியாரோட கண்ணு அவள அப்படியே மென்னு தின்னுக்கிட்டு இருக்கு. ரொம்ப நேரமா ரெண்டு பேரும் அப்படியே ஒக்காந்துக்கிட்டு இருக்காங்க. வலவந்திருக் கணும் அலவாக்கரையில. காச்சிமூச்சின்னு சத்தம். அந்தப் பொண்ணு திடுதிப்புன்னு கேட்டா.

"நெசத்துக்கே என்ன நீங்க கலியாணங் கட்டிக்குவீங்களா?"

சந்தோசத்தில் தவிச்சிப் போன பெரமாச்சியார்,

"ஆமாமா"ன்னார்.

"அப்ப நாங்கொடுக்கறதை சாப்புடு வீங்களாய்யா!"

பெரமாச்சியாருக்குள் வெளிய சொல்ல முடியாத தவிப்பு.

தூக்குமுடிச்ச அவுந்தா, மண் சட்டியில பழைய சோறு. மொதநா வச்ச சென்னகூனி கொழம்பு. குப்புன்னு வாசம். பெரமாச்சியார் வாயில எச்சிலூருது. சப்புக் கொட்டிக்கிட்டாரு. சோத்த உருட்டி உருட்டி பெரமாச்சியாரோட கையில வச்சா அந்தப் பொண்ணு. செத்துப் போன அவரு அம்மாவோட ஞாபவம் வந்திச்சி பெரமாச்சியாருக்கு.

"மூத்தானா, ரெட்டக்கொளத்தாங்கர பள்ளிவொடத்தடியில நீங்க போட்ருந்த கூட்டத்துக்கு நா வந்திருந்தே..."

"நெசமாவா...?" பெரமாச்சியாருக்குள் சந்தோசம் கூத்தடிக்குது.

"அங்க, புரஞ்சிமூன வேலாயுத பொறை யாரய்யா பேசினத கேட்டேன். நீங்கள்ளாம், வெள்ளக்காரன வெரட்ட, உசுரயும் கொடுக்கப் போறியளாமே. ஒங்களயெல்லாம் போலீஸ்காரவங்க புடிச்சிக்கிட்டுப் போயி செயில்ல போடுவாங்களாமே!" அவளுக்கு பொலபொலன்னு கண்ணுல தண்ணி... தொடச்சிக்கிட்டே சொன்னா.

"நீங்க பேசினத கேட்டப்போதா எனக்கு ஆவேசம் வந்துபுட்டு. சாமி வந்த மாரி ஆயி ஒடம்பெல்லாம் சிலுக்கவும், சுத்திருந்தவளுவ என்ன அமிக்கி புடிச்சிப் புட்டாளுவ."

பெரமாச்சியாரின் மனசுக்குள்ள அந்தப் பொண்ணு ஒசந்துக்கிட்டே போறா.

"நா ஒன்னு கேக்கப் போறே, கோவிச் சுக்க மாட்டியளே!"ன்னா

"இல்ல" தலையாட்டினாரு பெரமாச்சியார்.

"என்ன நீங்க கலியாணம் கட்டிக் கிட்டா... என்னப் பாப்பியளா...? வெள்ளக் காரனை வெரட்டப் பாப்பியளா? ஒங் களுக்கு நா ஒசத்தியாப் போவனா... சொதந் தரம் ஒசத்தியாப் போவுமா? நம்ப அல்லா ருக்கும் சொதந்தரந்தானுங்களே முக்கியம்? அதனால..."

"அதனால.. சொல்லு..."

"நம்ப கலியாணத்தப் பத்தி நல்லா ரோசனை பண்ணணுமுங்க!"

இவளுக்கு இப்பிடியெல்லாம் பேசக் கூடத் தெரிஞ்சிருக்கு! இத்தனை நாளா இந்த சொடர எங்க மறச்சி வச்சிருந்தா? பெரமாச்சியாருக்கு வியப்பா இருந்திச்சி.

"தயாரிப்பாளர் சரியாவே பணம் தரலைங்கறதுக்காக டைரக்டர் பழிவாங் கிட்டார்."

"எப்படி?"

" 'தாராள மனசுக்காரன்'னு வைச்சிருந்த டைட்டிலை 'கஞ்ச மனசுக் காரன்'னு மாத்திட்டார்.

- பொ. பொன்ராஜ்குமார்



''என்ன அப்பாடியே குந்தியிருங்கிங்க, ரோசவ பண்றீங்களா.... நாஞ்சொல்லட்டுமா...?''

பெரமாச்சியார் அவள உத்துப் பாத்தாரு.

''அடிமையும்... அடிமைக்கு அடிமையும் கலியாணங் கட்டிக்கிட்டு புதுசாவொரு அடிமைய எதுக்குங்க பெத்துப் போடணும்? நீங்க வெள்ளக்காரன வெரட்டப் போங்க. நா அணிபுள்ள மாரி என்னால முடிஞ்சத செய்யிறே.''

பெரமாச்சியாருக்குள்ள ஒக்காந்து, லகான இழுத்துப் புடிக்கப்புட்டா அந்தப் பொண்ணு.

''எனக்கொரு சத்தியம் பண்ணிக் கொடுப்பியளா?''

பெரமாச்சியாரோட காலப் புடிச்சிக்கிட்டு கெஞ்சிர மாரி கேட்டா.

''நம்ம ஊருக்கு அல்லாபுள்ளயலும் படிக்கிற மாதிரி ஒரு பள்ளிவொடம் கொண்டு வரணும். அப்பதா அல்லாருக்கும் வெவரம் தெரியும். ஒருத்தரவொருத்தர ஏமாத்த முடியாதுங்களே!''

அவ ரெண்டு கையாலும் பெரமாச்சியார் கன்னத்த வழிச்சி அவ கன்னத்தில வச்சி நெட்டி முறிச்சவ... கதறிக் கதறி அழுவுறா...

''இனிமேலுக்கு நா இந்தப் பக்கமே வர மாட்டேங்கையா... நீங்களும் என்ன பாக்க வேண்டாமுங்க...''

பெரமாச்சியாருக்கு வெறி வந்தமாரி பத்து வெரலையும் அவ தலமகருக்குள்ள குடுத்து இழுத்து அவ மொகத்த அவரு நெஞ்சோட வச்சி அழுத்திக்கிட்டாரு. அவரு ஒடம்பு நடுங்கிக்கிட்டே இருந்திச்சி, அழுவுறாரு... அழுதுக்கிட்டே,

''வந்த... பேசின... போறேங்க... ஒன்ன நா எப்படிச் சொல்லிக் கூப்புடுவே?''

''ராசம்மா...''ன்னா. அதுக்கு பொறவு அவரு அவள பாக்க இல்ல...

நினைவில் ஊறி, அழுது கொண்டிருந்தார் பெரமாச்சியார்.

''அய்யா... அய்யா...'' கெங்கமுத்துவின் சத்தத்தால் நினைவுப் புயலிலிருந்து விடுபட்ட பெரமாச்சியார், மேல் துண்டால் கண்களைத் துடைத்துக் கொண்டார். அவர் அழுதிருந்ததைப் பார்த்த கெங்கமுத்துவுக்கு வினோதமாயிருந்தது.

சாலையின் பக்கத்திலிருந்த சேரியிலிருந்து ஒப்பாரிச் சத்தம். பெரமாச்சியார் வண்டியை நிறுத்தச் சொன்னார். கெங்கமுத்து மாட்டை அவிழ்த்து மரத்தில் கட்டி விட்டுப் பெரமாச்சியாரின் பின்னால் நடந்தான்.

அந்தக் குடிசைக்கு முன்னால் விரியலை தட்டியில் நீட்டி கிடத்தப்பட்டிருந்தது. ஒரு கிழவியின் பிணம். கூட்டத்துக்குள் நுழைந்த பெரமாச்சியார் கிழவியை உற்றுப் பார்த்தார்.

''கெழவி சாவுறத்துக்கு முந்திதான், செத்துப்பூட்டா தன்னோட இதையும் போட்டு எரிச்சிப்புடச் சொன்னாப்பா!''

ஒரு பழைய பெட்டியை ஆவலோடு பிரித்தார்கள். அதில் பாடம் செய்து வைக்கப்பட்டது போலிருந்தது ஒரு தாழம்பூ.

சட்டென்று பெரமாச்சியாருக்குள் என்னமோ அசைந்தது.

''கெழவி லேசுப்பட்டதில்லப்பா... சின்ன வயசில யார் கொடுத்த பூவோ?!'' ஒரு இளைஞன் கிழவியின் நெஞ்சின் மீது போட்டான்.


சவத்தைப் பாடையில் வைத்தார்கள். பெரமாச்சியார் தன் ஜோல்னா பையிலிருந்த தேசியக் கொடியை அவள் உடல் மீது போர்த்தி விட்டார். ஒரு பைத்தியக் காரனைப் பார்ப்பது போல் அந்தக் கூட்டம் பெரமாச்சியாரைப் பார்த்தது. பிறகு மெல்லக் கிழவியைச் சுமந்து கொண்டு நகர்ந்தது. நீர்த்திரை கண்ணை மறைக்க, போகிற கிழவியைப் பார்த்தபடியிருந்த பெரமாச்சியாரை வியப்புடன் கவனித்துக் கொண்டிருந்தான் கெங்கமுத்து. முகத்தில் அறைந்த காற்றில் தாழம்பூ வாசனை 'கம்'மென்று வீசிப் பரவியது.

''இருந்தாலும் தலைவருக்கு இவ்வளவு பேராசை கூடாது!''

''விஷயத்தைச் சொல்லு!''

''அந்தக் கட்டடத்தோட பழைய பேரை மாத்தி அவரோட பேரை வைக்கிறதுக்கு ஏகப்பட்ட எதிர்ப்பு. அதனால அந்தக் கட்டடத்தோட பேரையே அவர் தனக்கு வச்சிக்கிட்டார்!''

– ஞா. ஞானமுத்து



இன்னொருவர் வீட்டில்

உன் வீட்டில்
இருக்கும் போதும் நீ
இன்னொருவர் வீட்டில்
இருப்பதுபோல்
இரு!
உனக்கே
ஒரு நாகரிகம் வந்துவிடும்.
கடுமையைக் கழற்றிவிட்டு முகத்தில்
மலர்ச்சியை மாட்டிவைக்கும் மனம்!
வார்த்தைகளும் நீயும்
வாய்திறந்து கத்த மாட்டார்கள்.
இப்படிக் கேட்கலாம் நீ
'இது செயற்கையல்லவா?'
என்ன செய்வது?
ஆடை கூடச் செயற்கைதானே!


பிள்ளைகள் செய்யும் சிறுசிறு
பிழைகளுக்கும்
கண்களில் பற்றாது நெருப்புக்
கங்கு!
சாப்பாட்டில் - உப்பு
கொஞ்சம் குறைந்ததற்காக உன்
குரலுக்குள் ஓடிவந்து
குரைக்காது நாய்.

"போதும்! போதும்!"
என்பாய்...
சாப்பாட்டு மேசைமேல் - உனது
நீண்ட ஆயுள்
காப்பீடு செய்யப்படும்.

அமர்ந்திருக்கும் போது
ஆடிக்கொண்டே இருக்கும் கால்கள்
ஆடாதபடி, கவுரவம் காக்கும்!
உனது
உட்காருதல் கூட
உன் உடம்பை ஒழுங்குபடுத்தி வைக்கும்
நாற்காலியில்...
"எவ்வளவு நேரம் இப்படி?"
கேட்கலாம் நீ!
எவ்வளவு நேரம் இப்படி என்று
சுவாசிப்பது பற்றிக் கேட்பாயா?

இன்னும் கேள்...
கண்ணாடி பார்க்க அடிக்கடி
படுக்கை அறைக்குப் போகமாட்டாய்!
அங்கும் இங்கும் பார்த்துவிட்டு
அவசர அவசரமாய்க்
காதுகளோர நரைமுடிகள் மேல்
போகாது உன் கை!

பெற்றோர்கள் கூடப்
பிரியத்திற்குரிய அந்நியராகப் பெறுவர்
மரியாதை!
ஆனால்
உன்வீட்டில் இருப்பது போல்தான் நீ
இன்னொருவர் வீட்டிலும்
இருக்க முடியும் என்றால்
இன்னொருவர் வீட்டிற்குப்
போக வேண்டாம் -
உன் வீட்டிலேயே இரு.



தமிழன்பன்


இந்த பிட்டு போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா?
- கார்த்திக் ராஜா
M.L.A. HOSTEL
''பிட்டோ பிட்டு!
பி.ஏ. பிட்டு!
பி.எஸ்ஸி. பிட்டு!
எம்.ஏ. பிட்டு!
எம்.எஸ்ஸி. பிட்டு...!''
அகோர சாமி பிட்டு B.A
''வெண்டா என் போர்டுலே பிட்டு பி.ஏ.ன்னு எழுதினது...?''
''அநேகமா... இது
காரங்க வேலையாத்தான் இருக்கும் அண்ணே!''
''பிட்டு வெச்சி எழுதிக் கூட நம்ப எம்.எல்.ஏங்க நிறைய பேர் ஃபெயில் ஆயிட்டாங்க...''
''அதனாலே?''
''அதனால எம்.எல்.ஏக்களுக்கு மட்டும் வினாத்தாள்களைப் பரீட்சைக்குப் பத்து நாள் முன்னாடியே விநியோகிக்கணும்னு சட்டம் இயற்றப் போறாங்க.''
''அவரு
கத்தையே
''அவரு
மந்திரிங்க
எழுதலாம்னு
தாங்க. தெரியாத



இந்த பிட்டு போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா?''
"இப்ப சந்திக்க முடியாது. நாளைக்கு நம்ப எம்.எல்.ஏ. எம்.ஏ. பரீட்சை எழுதப் போறாரு!''
"அதுக்காக சீரியஸா படிக்கறாரா?''
"இல்லே... சீரியஸா பிட் தயார் பண்ணிக்கிட்டு இருக்காரு...!''
MLA caught 'copying'
CALCUTTA, Dec. 13
The West Bengal CPI(M) is embarrassed over an incident in which a party MLA was reportedly caught redhanded for copying in the ongoing MA examinations of the Calcutta University.
The MLA, Mr Yunus Sarkar, hailing from Murshidabad district was appearing ... exams as a private candidate ... caught copying during ... by an invigil...
கல்கத்தாவில் எம்.ஏ. பரீட்சை எழுதிய ஒரு எம்.எல்.ஏ. காப்பி அடித்தார்.
- செய்தி
"எதுக்குங்க... பிட்டு கிட்டு அடிச்சிக்கிட்டு கஷ்டப்படறீங்க... பேசாம வெள்ளை பேப்பரைக் கொடுத்துட்டு வாங்க... நம்ப ஆளிவர்விட்டு தான் பால் வாங்கித் தர்றேன்...!''
எல்லாம் என்னங்க... புஸ்த ...கிட்டு எழுதறாரு!''
...திரி... நேத்துதான் ...த்தை வெச்சிக்கிட்டு ...முன்னுரிமை கொடுத்...''
"நாளை பரீட்சை எழுதப் போகும் எங்கள் எம்.எல்.ஏ. அவர்களுக்கு 48-வது வட்ட சார்பில் இந்த 'பிட்' மாலையை அணிவிக்கிறோம்!''
மதி...

தாத்தாவுக்கு வயது -



130!

அறுபது வயதைத் தாண்டிய உடனே, ''காடு வா, வா என்கிறது; வீடு போ, போ என்கிறது'' என்று புலம்புகிற காலம் மலையேறிக் கொண்டு வருகிறது. மருத்துவத் துறையின் கண்டுபிடிப்புகள், வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் போன்ற காரணங்களினால், இன்று மக்களின் சராசரி ஆயுட்காலம் கணிசமாக அதிகரித்துள்ளது. ஒரு சராசரி ஜப்பானியர் எண்பது வயது வரையில் உயிர் வாழ்கிறார். அமெரிக்காவில் மக்களின் சராசரி ஆயுட்காலம் எழுபத்தியாறு. நமது நாட்டில் 1950, 60 களில் நாற்பது வயதாக இருந்த சராசரி ஆயுட்காலம், படிப்படியாக உயர்ந்து இன்று அறுபது வயதை எட்டி விட்டது!

நெதர்லாந்து நாட்டிலுள்ள Dutch Institute of Gerontology செய்துள்ள ஆராய்ச்சியின்படி, அடுத்த தலைமுறையில் - குறிப்பாக முன்னேற்றம் அடைந்த நாடுகளில் மனிதர்கள் சராசரி நூறு வயது வரையில் வாழ்வது சர்வசகஜமாகப் போய்விடும்! நல்ல தேக ஆரோக்கியத்துடன் நூற்றி முப்பது வயது வரையில் மனிதன் வாழும் அதிசயத்தை, இருபத்தியோராம் நூற்றாண்டு காணப்போகிறது!

நமது நாட்டில் அறுபது வயதைத் தாண்டியவர்கள், முதியோர் என்று கணக்கிடப் படுகிறார்கள். ஆனால் ஜப்பான், அமெரிக்கா போன்ற முன்னேற்றம் அடைந்த நாடுகளிலோ, அறுபத்தி ஐந்து வயதைக் கடந்தவர்களே முதியோர் என்ற வரிசையில் சேர்க்கப்படுகிறார்கள்.

நமது நாட்டின் ஜனத்தொகையில் வயோதிகர்களின் விகிதம் இப்பொழுது தான் ஏழு சதத்தை எட்டியிருக்கிறது. என்றாலும், மிக அதிகமான ஜனத்தொகை உடைய நாடானதால், உலகிலேயே அதிகமான முதியோர்கள் வாழும் நாடு என்ற நிலையை நாம் ஏற்கெனவே அடைந்து விட்டோம்! தற்சமயம் இந்தியாவில் கிட்டத்தட்ட ஆறு கோடி முதியோர்கள் வாழ்கிறார்கள்.

ஓய்வு பெற்ற முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போனால், உழைக்கும் சமுதாயத்தின் மேல் உள்ள பளு ஏறிக் கொண்டு போகும். உழைக்கும் மக்கள், அவர்களைச் சார்ந்து வாழும் மக்களுக்கும் சேர்த்துப் பொருள் ஈட்ட வேண்டிய கட்டாயம். ஜப்பான் போன்ற நாடுகளில், நாட்டின் வருமானத்தில் கணிசமான ஒரு தொகை முதியோர் நலனுக்கென்று ஒதுக்கப்படுகிறது. இதற்கான வரிச் சுமையையும் உழைக்கும் மக்கள் தான் சுமக்க வேண்டியுள்ளது.

இன்று மேல்நாடுகளில் எல்லா மருத்துவமனைகளிலும் Geriatrics பிரிவுகள் உள்ளன. நமது நாட்டில் முதியோர்களுக்கென்று இப்படிப்பட்ட பிரத்தியேகப் பிரிவு மிகச் சில ஆஸ்பத்திரிகளிலேயே உள்ளன.

பல நகரங்களில் முதியோர் இல்லங்கள் தோன்ற ஆரம்பித்து விட்டன. முதியோர் விகிதம் மிக அதிகமாக உள்ள கேரள மாநிலத்தில் சுமார் நூறு முதியோர் இல்லங்கள் இயங்குகின்றன!

மேலைநாடுகளில் பெரும்பாலான வயோதிகர்கள், முதியோர் இல்லங்களில் வாழ்கிறார்கள் என்று நாம் நினைப்பது தவறு. அமெரிக்காவில் அதிகமாகப் போனால் முப்பது சதவிகித முதியோர்களே இத்தகைய இல்லங்களில் வசிக்கிறார்கள். தம்பதிகளாக வாழும் முதியோர்கள், கூடிய வரையில் தங்கள் குழந்தைகள் வாழும் ஊரிலேயே தனியாக வசிக்கிறார்கள். பாரம்பரிய நம்பிக்கைகள், குடும்பப்பற்று அதிகமாக உள்ள ஜப்பான், சைனா போன்ற நாடுகளில் முதியோர்கள், குடும்பத்துடன் சேர்ந்தே வாழ்கிறார்கள். ஜப்பானில், மூன்று தலைமுறைக் குடும்பங்கள் ஒரே கூரையின் கீழ் வாழ்வது மிகவும் சகஜம்.

தம்பதிகளாக இல்லாமல் தனியாக உள்ள வயோதிகர்களில் ஆண்களை விடப்






பெண்களே அதிகம். இதற்கான காரணங்கள் என்ன? முதல் காரணம், ஒரு சராசரி ஆணை விட, பெண் அதிக காலம் உயிர் வாழ்கிறாள். குடிப்பழக்கம், புகை பிடித்தல் போன்ற தீய பழக்கங்களுக்குப் பெண்களை விட ஆண்களே அதிகமாக அடிமையாவதால், ஆண்களின் சராசரி ஆயுட்காலம் பெண்களை விடக் குறைவு. மேலும், தம்பதிகளில் கணவனை விட மனைவியே வயதில் சிறியவளாக இருப்பதால், மனைவியை இழந்த ஆணை விட, விதவைகளின் எண்ணிக்கை அதிகம். அது மட்டுமல்லாமல், விதவைகள் மறுமணம் என்பது அவ்வளவாக வழக்கத்தில் இல்லை என்பதனாலும், வயது காலத்தில் தனித்து விடப்பட்ட ஆணை விடப் பெண்களின் எண்ணிக்கையே அதிகம். அதனால், பெண்களுக்கென்று வேலை வாய்ப்புகள் உருவாக்குவதும், வயது காலத்தில் ஓய்வு ஊதியம் பெற வழி செய்வதும் மிகவும் அவசியம். தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் சத்துணவுத் திட்டம் அமல்படுத்திய பொழுது கணவனை இழந்த சுமார் 20,000 பெண்கள் சத்துணவு மையங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டதை ஒரு நல்ல உதாரணமாகக் குறிப்பிடலாம்.

மனிதர்களின் சராசரி ஆயுட்காலம் நீண்டு கொண்டே போவதனால், பல நாடுகளிலும் வேலையிலிருந்து ஓய்வு பெறும் வயது அதிகரிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, ஐரோப்பிய நாடுகளில் அறுபத்தி ஐந்து அல்லது எழுபது வயதில்தான் வேலையிலிருந்து ஓய்வு பெறுகிறார்கள். அமெரிக்காவில் ஓய்வு பெறும் வயது அறுபத்தி ஐந்து. நமது நாட்டிலும் அரசாங்கம் மற்றும் தனியார் அலுவலகங்களில் ஓய்வு பெறும் வயதை அறுபதாக உயர்த்தலாம். மேலும் அரசாங்கம் முதியோர்களுக்கென்று சில சலுகைகள் வழங்கலாம். ஏற்கெனவே அரசு, ரயில் கட்டணத்தில் முதியோர்களுக்குச் சலுகை வழங்குகிறது.

முதியோர் நலனுக்காக நமது நாட்டில் Age Care India, Help Age India போன்ற சமூகநல ஸ்தாபனங்கள் ஆற்றும் பணி குறிப்பிட வேண்டிய ஒன்று. அரசும் பல திட்டங்களைத் தீட்டி வருகிறது. எனினும் நமது நாட்டிலும் சரி, மேலைநாடுகளிலும் சரி, பொதுநல ஸ்தாபனங்களோ, அரசாங்கமோ முதியோர்களுக்கு முழுமையான கவனிப்பை வழங்க முடியாது. முதியோர்கள் குடும்பத்தைச் சார்ந்தே வாழ வேண்டும். இன்று மேலைநாடுகளில் குடும்பம் என்ற அமைப்பே ஆட்டம் கண்டு விட்டது. குடும்பம் என்ற பந்தம் வெகுவாகக் குறைந்து கொண்டு வருவது, மக்கள் மனத்தில் பெரும் பீதியை உண்டு பண்ணியுள்ளது.

மக்கள் நீண்ட காலம் உயிர் வாழ்ந்தால் மட்டும் போதாது. அவர்கள் கூடிய வரையில் திடமான உடல்நிலையுடனும், கடைசி வரையில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலையிலும் வாழ வேண்டியது அவசியம். மகிழ்ச்சி என்பது ஒதுக்கப்படும் போது கிடைக்காது. உற்றாரும் உறவினரும் காட்டும் பரிவில் தான் கிட்டும். இதையெல்லாம் உத்தேசித்துத்தான் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை, முதியோர் நலனுக்காக உலக அளவில் பல திட்டங்கள் தீட்டியுள்ளது. 1999-ஆம் ஆண்டை உலக முதியோர் ஆண்டாகவும் இப்போதே அறிவித்துள்ளது!

– ரமாமணிசுந்தர்



"படம் சரியாவே போகலைன்னு சொல்றீங்க தயாரிப்பாளர் சந்தோஷமா இருக்காரே! எப்படி?"

"மக்களைப் பழிவாங்கப் போறாராம்!"

"எப்படி?"

"படத்தை டி. வி. யில போட்டுத்தான்!"

– பொன்ராஜ்குமார்

சக்கரவர்த்தித் திருமகன்

இப்படியெல்லாம் மிகக் குரூரப் பேச்சுக்களைக் கேட்டும், பயங்கர சொரூபங்களைப் பார்த்தும், சீதை ''ஓ!'' என்று வாய் விட்டு அழுதாள். எவ்வளவு தைரியமாக இருந்தாலும் இயற்கை வேகத்தை வழியடைப்பது கஷ்டம். ஆனபடியால் குழந்தை போல் அழுதாள். அழுதபோதிலும், சித்தம் கலங்காமல் ராமனை தியானித்துக் கொண்டேயிருந்தாள்.

''பதினாலாயிரம் ராட்சஸர்களை ஜன ஸ்தானத்தில் நிர்மூலம் செய்த என் ராமன் ஏன் என்னை மீட்டுக் கொண்டு போக இன்னும் வரவில்லை? தண்டகாரண்யத்தில் விராதனை வதம் செய்த வீரர்கள் ஏன் என்னைப் பற்றி இன்னும் சும்மா இருக்கிறார்கள்? நான் இவ்விடம் இருப்பது அவர்களுக்கு இன்னும் தெரியவில்லையென்றே எண்ணுகிறேன். தெரிந்திருந்தால் சும்மா இருப்பார்களா?

''கழுகரசன் ஜடாயுவும் அரக்கனால் கொல்லப்பட்டான். அவன் உயிர் வைத்திருந்தால் விஷயத்தைச் சொல்லியிருப்பான். ஆனால் என்னை அரக்கன் தூக்கிப் போவதைப் பார்த்துப் பொறுக்க முடியாமல் கோர யுத்தம் செய்து அவன் உயிர் நீத்து விட்டான். ராமனுக்கு நான் இருக்குமிடம் இன்னும் தெரியவில்லையென்றே எண்ணுகிறேன்.

''ஆனால் தெரியாமலா போகப் போகிறது? இந்த லங்கையும் ராக்ஷசர்களும் அழியாமலா போகப் போகிறார்கள்? கட்டாயம் இந்த நகரத்தில் ஒவ்வொரு வீட்டிலும் அரக்க குலத்துப் பெண்கள் விதவைகளாகி அழுது புரண்டு அலையப் போகிறார்கள். இந்த நகரமும் ராவணனும் அரக்கர் குலமும் அழிந்து போவது நிச்சயம்.''

இவ்வாறு தனக்குள் யோசித்துக் கொண்டிருந்தாள். யோசித்துத் தைரியம் அடைந்தாள். மறுபடியும் வேறு ஊகங்களை ஊகித்துத் துக்கத்தில் மூழ்கினாள்.

''என்னை இழந்த துக்கத்தினால் ஒரு வேளை ராமன் உயிரை விட்டு விட்டானோ? அப்படியே நடந்திருக்கலாம். இல்லாவிட்டால் இப்படி என்னை விட்டு விட்டு இவ்வளவு நாட்கள் சும்மா இருந்திருக்க முடியாதே! ஆஹா! அவனல்லவோ பாக்கியவான். தேவர்களோடு சேர்ந்து விட்டான். நானல்லவோ பாபம் செய்தவள், இந்த நிலையிலிருக்கிறேன். என் இதயம் கல்லாகவே இருக்க வேண்டும். இவ்வளவு தேர்ந்தும் உயிருடன் இருக்கிறேனே!''

மறுபடி வேறு பயம் தோன்றிற்று. ''ஒருவேளை தவம் செய்தே ஆயுளைக் கழிக்கத் தீர்மானித்து விட்டு என்னைப் பற்றி எண்ணம் விட்டு விட்டார்களோ? இல்லை, இல்லை! அப்படி ஒரு நாளும் செய்ய மாட்டார்கள். வீரன் தன் கடமையை விட்டு விட்டு, மனைவியைப் பகைவன் வசத்தில் விட்டு விட்டு சந்நியாச வாழ்க்கையில் புகுவானா? இதை நான் எண்ணியது அறியாமை. நான் இருக்குமிடம் அவர்களுக்குத் தெரியவில்லையென்பதே காரணம்.

''ஒருவேளை என்மேல் ராமனுக்கு இருந்த அன்பு ஓய்ந்து போய் விட்டதோ? உருவம் மறைந்தால் அன்பும் மறையும் என்கிறார்களே, ஒருவேளை அப்படியிருக்குமோ? மறைந்தது மறந்தும் போகும் என்கிறார்களல்லவா?

''சீ, சீ, இந்த எண்ணம் பாபமாகும். என் ராமன் என்னை மறப்பானா? ஒரு நாளும் இல்லை. என்னை ராமன் மறந்து விடும்படியான குற்றம் நான் ஏதும் செய்ததில்லையே! அதுவல்ல காரணம். ஒருவேளை ராவணன் ஏதோ திருட்டும் மோசமும் செய்து வஞ்சித்து ராஜகுமாரர்களைக் கொன்று விட்டானோ?''

இவ்வாறு மாறிமாறிப் பல யோசனைகள் செய்து கொண்டு துயரக் கடலில் மூழ்கினாள். உயிரை விடுவதே நலம் என்கிற முடிவுக்கு வந்தாள். சிம்சுபா மரத்துக் கிளை ஒன்றில் தன் தலை மயிரைக் கொண்டு சுருக்குப் போட்டுக் கொண்டு துக்கத்திலிருந்து

ராஜாஜி

விடுதலை பெறலாம் என்று எண்ணி னாள்.

அரக்கிகள் சீதையைத் தங்கள் எண் ணத்துக்குத் திருப்ப முடியவில்லையே என்று இன்னது செய்வது என்பது தெரி யாமலிருந்தார்கள். அவர்களில் சிலர் காரியம் முடியவில்லை என்று ராவண னுக்குச் செய்தி சொல்லப் போனார்கள். சிலர் அங்கேயே நின்றார்கள்; சீதை யைப் பயமுறுத்திக் கொண்டிருந்தார் கள்.


அவர்களிடையில் திரிஜடையென் கிற ராக்ஷஸி வந்து அவர்களைக் கண் டித்து, ''மூர்க்கிகளே, என்ன உளறுகிறீர் கள்! நான் கண்ட கனவைக் கேளுங்கள். இந்த லங்கை அழிந்து போகும் காலம் நெருங்கிற்று'' என்றாள்.

பிறகு, தான் கண்ட கோர கனவத்தை விவரித்துச் சொன்னாள்.

''சீதையை அழைத்துப் போக ராமன் சூரியனைப் போல் திவ்யப் பிர காசம் வீசிக் கொண்டு லங்கைக்கு வந்து விட்டதாகக் கனவு கண்டேன். ராவணன் அழிந்து யமனுடைய வீட்டுக் குப் போனதைக் கண்டேன்.

''சீதையை எடுத்து யானையின் மேல் ஏற்றிக் கொண்டு ராமன் சென்று விட்டதைக் கண்டேன். ராவணனும் ராக்ஷச சமூகம் முழுதும் அவலக்ஷண வஸ்திரங்கள் உடுத்திக் கொண்டு அவ லக்ஷண நிலையில் யமனால் இழுத்துப் போகப்படுவதைக் கண்டேன்.''

இப்படி திரிஜடை ராக்ஷஸிகளுக்குத் தான் கண்ட கெட்ட கனவைச் சொல்லி,



''இந்தப் புண்ணியவதியை இம்சிக்கா தீர்கள். அழிந்து போவோம். இவளுடைய அருளைக் கேட்டுப் பெறுங்கள்'' என்று போதித்தாள்.

இப்படி திரிஜடை சொல்லிக் கொண்டிருந்த சமயத்தில் உயிரை மாய்த்துக் கொள்ளுவதென்று நிச்சயித்த சீதைக்குப் பல நற்சகுனங்கள் திடீரென்று உண்டாயின. கண்களும் கை கால்களும் மங்களகரமாகத் துடித்தன. மனத்தில் எதிர்பாராத தைரியம் தானாக உண்டாயிற்று. உயிரை நீக்கும் யோசனை மறைந்து போயிற்று.

வனத்தில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் மேலே மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த ஹனுமான், இனி என்ன செய்யலாம் என்று யோசித்தான்.

லங்கைக்கு வந்து அங்கே சீதையைக் கண்டபின் வேறு என்ன இருக்கிறது என்று வாசகர்கள் எண்ணலாம். ஆனால் காரியம் அவ்வளவு எளிதாக இல்லை. ஹனுமான் யோசித்த விஷயங்களைக் கேளுங்கள் :

''மற்றவர்கள் செய்ய முடியாத காரியத்தைச் செய்து விட்டேன், கடலைத் தாண்டி சீதையிருக்குமிடம் கண்டாயிற்று. ராக்ஷசர்களுடைய நகரம், அதன் காப்பு முதலிய எல்லா விஷயங்களையும் பார்த்து அறிந்து கொண்டேன். பகைவனுக்குத் தெரியாமல் தூதனாகிய நான் செய்ய வேண்டியது செய்தாயிற்று. ஆனால் நிலைமை அபாயமாக இருக்கிறது. கண்ட விஷயங்களை ராமனிடமும் அரசனிடமும் சொல்ல நான் இப்போது திரும்பிப் போய்விட்டேனானால் இங்கே நடக்கும் சம்பவங்கள் என்ன? ராமலக்ஷ்மணர்களும் வானர சேனையும் இவ்விடம் வருவதற்குள் சீதை துக்கத்தைப் பொறுக்க முடியாமல் உயிரை விடுவாள். அப்போது எல்லாக் காரியமும் அழிந்ததாகவேயாகும். சீதையைக் கண்டது மட்டிலும் போதாது. அவளுக்குச் சொல்லித் தைரியப்படுத்தி விட்டே செல்ல வேண்டும். சீதையிடம் பேசாமல் திரும்பினால் ராமனுக்கு என்ன திருப்தியாகும்? ஆனபடியால் எப்படியாவது வழிதேடி சீதையுடன் பேசியே தீர வேண்டும்.''

ஆஞ்சநேய ஸ்தோத்திர மாலையில் 'புத்திமதாம் வரிஷ்டம்' என்று ஒரு பெயர் வரும். அதாவது 'புத்திமான்களில் சிறந்தவன்' என்று. அது உண்மை தானே!

''சீதையுடன் எந்த பாஷையில் எந்த உருவத்தில் நின்று நான் பேசுவது நலம்? இந்த அசோகவனத்தில் திடீர் என்று ஒரு குரங்கு வந்து ஏதேனும் பேச வந்தால் நிச்சயமாக சீதை, 'இது ஒரு மோசம். ராவணனுடைய வஞ்சக வேலை' என்று எண்ணுவாள். பயப்படுவாள். கூக்குரலும் இடுவாள். அவள் இப்போது இருக்கும் மனோ நிலையில் இவ்வாறுதான் நடக்கும். காவலிருக்கும் ராக்ஷஸிகள் இப்போது தூங்கிப் போயிருப்பவர்களும் எழுந்து விட்டு என்னைக் கண்டு கொள்வார்கள். இவன் பகைவனுடைய தூதன், மோச வேஷக்காரன் என்று எண்ணி ராக்ஷசர்களை அழைத்து வருவார்கள். இவ்விடம் பெரிய யுத்தம் நடைபெறும். நானும் கம்மா இருக்க முடியாது. எதிர்ப்பேன். அவர்களை வதம் செய்வேன். உண்மை. ஆனால் சீதையை மீட்கும் காரியம் கெட்டுப் போகும். என்னைப் பிடித்துச் சிறையில் வைப்பார்கள். பிறகு ராமனுக்கு விஷயம் சொல்லக் கூடியவர்கள் யாருமே இல்லை. அப்படி ஆகாது, நான் பிடிபடாமல் யுத்தம் வெற்றிகரமாகச் செய்வேன் என்றாலும் சங்கடமும் காயங்களும் பட்டு, பிறகு கடல் தாண்டும் சக்தி இழந்தாலும் இழப்பேன். நான் வந்து சீதையைப் பார்த்தது பயனற்றுப் போகும். அவசரப்பட்டு ஏதும் செய்யலாகாது. வந்த காரியம் கெட்டுப் போகும். வழியில் பரபரப்பாக எந்தக் காரியமும் செய்யலாகாது. என்னை நம்பியல்லவா அரசனும் ராமனும் காத்திருக்கிறார்கள்? என்னுடைய சிறிய தவறு பெரும் நஷ்டத்தில் முடியும். எப்படியும் சீதையுடன் பேசிவிட்டே திரும்ப வேண்டும். அப்படிப் பேசுவதில் அவளுக்குப் பயம் உண்டாகாதபடி முதலில் அவள் உள்ளத்தில் நம்பிக்கையும் தைரியமும் உண்டாக்க வேண்டும். என்னை ராவணன் என்றாவது, அவனுடைய ஆள் என்றாவது சந்தேகப்படாமல் இருப்பதற்கு என்ன செய்யலாம்?

''சரி, ராமனுடைய குணங்களையும் சரித்திரத்தையும் மதுரமான முறையில் அவள் மட்டும் கேட்கும்படிச் சொல்லுவேன். அப்போது சீதையின் உள்ளத்தில் சந்தோஷமும் நம்பிக்கையும் உண்டாகும். பயப்படமாட்டாள். பிறகு காரியம் நிறைவேறும்.''

இவ்வாறு யோசித்து மரத்தில் மறைந்திருந்தே மெதுவான குரலில் 'ராம', 'ராம' என்று ஜபம் செய்ய ஆரம்பித்தான்.

(தொடரும்)



“அடக் கடவுளே... பச்சப் புள்ள...”

“வெவரு பாப்போம்... அட ஒன்னத்தானே... கொஞ்சம் வழிய உட்டு நின்னா என்ன வாம்? எல்லாரும் பாக்கத் தேவை இல்ல...?”

“நின்ன புள்ள மேல இடிச்சுட்டானா...?”

“அய்யே... இந்த ட்ரை வரு மட்டும் ரொம்ப ராங்கிக் காரன். அன்னிக்கு தண்ணியத் தூக்கிட்டு வர்றேன் தலை மேல. ‘பாங்’னு பக்கத்துல ஆரன் அடிச்சதுல தூக்கி வாரிப் போட்டு அம்புட்டுத் தண்ணியும் கொட்டிக் கவுரும் படியா ஆச்சு...”

குனியமூர் பஸ் ஸ்டாண் டில் ஊர் மொத்தமும் ஏறக் குறைய கூடியிருந்தது. ஆறரை மணி. இந்நேரம் கள்ளங்குப் பம் தாண்டி வண்டி ஆடா துறை போயிருக்க வேண்டும்.

இதை விட்டால் அரசு பஸ் ஒன்று இன்னும் ஒரு மணி நேரம் கழித்து இருக்கிறது. அதை எந்த நேரமும் நம்ப முடியாது. சில நாள் அதன் டயர் பஞ்சராகி இருக்கும். உள்ளே எங்காவது பட்டை விட்டுப் போயிருக்கும். அதை யும் மீறிப் போனால் ட்யூட்டி டிரைவரோ, கண்டக்டரோ லீவ் போட்டிருப்பார்கள். மாற்று ஆள் கிடைக்காது. எல்லாம் போக, ஓடும் நாட் களில் கட்சிகளோ, சங்கங்களோ மறியல் செய்யாமல் இருக்க வேண்டும்.

டிரைவர் சிதம்பரம் மெயின்ரோட்டை நோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருந்தார். சூரியன் கன்றென்று உறைக்காத போதும் அவரது காக்கிச் சட்டை தொப்பலாக நனைந்திருந்தது. அவர் மேல் சரியோ தப்போ - ஜனங்களிடம் மாட்டக் கூடாது. அருகாமையில் உள்ள போலீஸ் ஸ்டேஷ னுக்குள் நுழையும் வரை அவர் உயிருக்கு அவரே உத்தரவாதம் தர முடியாது.

அடித்துக் கொண்டு அழுததில் அந்தப் பெண்ணின் இறுக்கி வாரப்பட்ட சிகை கலைந்தது. பிசிபிசியாய் தலைமயிர் தொங் கியது. அழுததில் பவுடர் திட்டு திட்டாக ஆனது. சாந்துப் பொட்டு போல குங்குமம் கெட்டியாய்க் கரைந்து அவள் மூக்கு நுனி வரை கோடிழுத்து நின்றது.

“அய்யோ... தமிழரசி.. நின்டு நின்டா ஒன்னப் பெத்த செம்மம் இருக்கு. குருத்தா போயிட்டியே. போன வாரம்தான் இருந்து இருந்து கொலுசு வாங்கிப் போட்டேன். அந்தச் சத்தம் கேக்காம கூட அரைச்சுட் டானே...”

பஸ்ஸின் முன் சக்கரத்தடியில் குழந்தை யின் கால்களும் கொலுசும் தெரிந்தன. கால் செருப்பு காலோடு ஒட்டியே இருந்தது. தலை மட்டும் தெரியவில்லை. மற்றபடி பார்ப்பதற்கு பஸ் நிழலின் சுகத்தில் குழந்தை உறங்குவது போலவே குப்புறப் படுத்திருந்தது.

அயந்தூரிலிருந்து குணசேகரன், இன் னும் அவன் வயசுப் பையன்கள் நால்வர் சைக்கிளில் விரைந்து வந்தனர். பெரியவர் களிடம் எப்படி நடந்தது என்று விவரமாகக் கேட்டனர்.

“பின்னால ஓடிச்சிருக்

சுப்ரமணியன் ரவிச்சந்திரன்



விபத்து

கான். அந்தப் புள்ள சட்டுன்னு ஏறியிருக்கு. ட்ரைவர் சைட் கவனிக்கறதுக்குள்ளாற பொரட்டிடுச்சு. ஒரு சத்தம் இல்லை. சரியா தலை மட்டும் சிக்கிக்கிச்சு. ஐயோ புள்ளன்னு, யாரோ போட்ட சத்தத்துல வண்டி ஒரு தப்படி கூட நகரலே. அப்படியே குதிச்சவன்தான். தெக்கே ஓடிப் போயிட்டான்...''

''அந்தப் பொம்பள யாரு? நம்ம பக்கமா தெரியலே..''

''அது கொல்லுமாங்குடி... இங்க அண்ணன் வூட்டுக்கு வந்திருக்கு. காலம்பற பொறப்பட்டா சாயந்திரம் வெளக்கு வைக்கறதுக்குள்ள ஊர் போயிடலாம்னு ஒரு கணக்கு. நம்ம சிவமணி தங்கச்சிதான்.''

''யாரு இட்டவெளி சிவமணியா... ஆமாம் அவுரு எங்கே..?''

''இட்டாற ஆளு போயிருக்கு...''

''த்சு... வந்த எடத்துலியா இப்பிடி ஆவணும். எட்டு வயசு இருக்குமா..?''

''ரீ... அவ்ளோ கூட இல்லை. ஒன் ரெண்டாம் பொண்ணு கலைய ஒடுக்கதுதான்.''

''**யா**ர்றா அங்க... வாங்கடா!''

குணசேகரன் கூட்டாளிகளுடன் சைக்கிளைத் தெற்குப் பக்கமாய் மிதித்தான்.

அவனது அவசர கதிக்கு சைக்கிள் சீராகப் போகாமல் குறுக்கும் நெடுக்குமாய் அலைந்து கொண்டே விரைந்தது.

காலை பஸ்ஸிற்குக் காத்திருந்த கூட்டம் சற்று ஒதுங்கி கூட்டத்தையும், குழந்தையையும், பஸ்ஸையும் மாற்றி மாற்றிப் பார்த்தவண்ணம் இருந்தது. எாரு பிசகான இடத்தில் வேறு பஸ்ஸை நிறுத்தி விட்டான். கார்ப்பரேஷன் பஸ்காரன் திரும்ப முடியாது. ம்ஹூம்... இன்றைக்குப் போனால் போலத்தான். பேசாமல் சிதம்பரம் ரோட்டிற்கு நடந்து போய் வேறு பஸ் பிடித்து ஊரைச் சுற்றிப் போக வேண்டியதுதான்.

முடிக்க முடிச்சாய் ஜனங்கள் தெற்குப் பக்கம் நகர ஆரம்பித்தனர். மூன்று மைல் நடக்க வேண்டும். எல்லா வண்டியும் நிறுத்த மாட்டான். என்ன.. இவ்வளவு ஆட்கள் நிற்பதால் நிறுத்தலாம்.

''போலீஸ்க்குச் சொல்லியாச்சா..?''

''சொல்லத்தான் ப்ரசிடெண்டு போனாரு...''

''அதான் சரி. நம்ம மணியன் அப்பாவை லாரிக்காரன் அடிச்சுட்டான். இவங்க அவசரப்பட்டு அள்ளிப் போட்டுட்டு வந்துட்டாங்க. அப்புறம் நஷ்டஈடு வேணும்னு கோர்ட்டுக்குப் போனா கேஸ் நிக்கலே. யாரைக் கேட்டுட்டு பாடியை எடுத்தீங்கன்னு இன்ஸ்பெக்டர் எக்கித் தள்ளிட்டாரு...''

''முன்னால அடிபட்டிருக்குடா.. பணம் உண்டு. பின்னால் அடிச்சிருந்தா ஒண்ணும் வராது.''

''அந்தப் புள்ளயா இல்ல போய் விழுந்திருக்கு..?''

''அதெல்லாம் விட்ருவோமா.. நம்ம ஊருப் பொண்ணுக்கு ஒண்ணு ஆயிருக்கு. நாம என்ன இளிச்சவாயனுங்களா..?''

குணசேகரன் திரும்பி வந்தான். அவனுடைய சைக்கிள் காரியரில் ட்ரைவர் நடுங்கியபடி அமர்ந்திருந்தான். அவன் இறங்கி ஓடாமல் பூனைப் படையைப் போல் பின்னால் குணசேகரனின் கூட்டாளிகள் சைக்கிளில் தொடர்ந்து வந்தனர்.

ட்ரைவரின் சட்டை கிழிந்திருந்தது. அவன் முகத்தில் இரண்டு இடங்கள் கன்றியிருந்தன. உதட்டோரம் கிழிந்து ரத்தம் காய்ந்திருந்தது.

''ஓடப் பாத்தாரு அய்யா. அமுக்கிட்டோம்.''

''போட்டுத் தாளிங்கடா அவன.. என்னமப்பா போவான். அன்னிக்கு சகலருக்கு வரா(ல்) மீனு கொண்டு போறேன். மீனுக் கூடைய டவுன் வண்டில ஏத்துங்கறான். அகராதி புடிச்சவன்...''

''அவன் எங்க... கண்டக்டரு.. ஒரு படி அரிசி எடுத்துப் போனாலும் லக்கேஜ், மாமூல்னு வெரட்டுவான்...''

''அது கெடக்கட்டும். என்னிக்காவது பாக்கி சில்லறை குடுத்துருக்கானா. கேட்டா கரெக்டா சில்லறை இருந்தா ஏறுன்னு ஞாயம் பேசறான்..''

''பேசுவான். ஏன் பேச மாட்டான். பொடரில போடு...''

''இவனுங்க வண்டியில ஒரே ரோதனை.. எங்க நின்னாலும் முன்ன போ முன்ன போன்னு செக்கர் தள்ளுவான். ஆம்பள பொம்பளன்னு பாக்கறதில்ல. சரின்னு முன்ன நின்னா, இவரு, யாரு இந்தக் கண்டக்டர் தொரைதான், சைடு மறைக்குது போய்யா பின்னாலங்கறான். நமக்காக இவனுங்க வண்டி ஓட்டறானுங்களா, இல்ல இவனுங்க ஓட்டறதுக்கு நாம போவணுமா...''

கைகூப்பிய கண்டக்டரின் கெஞ்சல் எடுபடாமல், கூட்டம் சூழ்ந்து கொண்டது. துணி துவைப்பது போல் தப்தப்பென்று சத்தம்.

''டேய் டேய் விடுங்கடா. செத்து வைக்கப் போறான்...'' - மேலே துணியில்லாத தலை நரைத்தவர் விலக்கினார்.

''சாவட்டும். இப்போ போன கொழந்த உசிரை இவன் தருவானா? இந்தா பாரு... ஒழுங்கு மரியாதையா அதுக்கு ஒரு ஏற்பாடு பண்ணு. கொழந்தை ஏறினது தப்புன்னு சொன்னே, மவனே, பொலிதான்...''

தூரத்தே புழுதியைக் கிளப்பிக் கொண்டு போலீஸ் ஜீப்பைக் கண்டதும் அப்படியே டிரைவரைச் சூழ்ந்த வட்டம் விலகிப் போனது.

டிரைவர் கசங்கிய துணியைப் போல சூம்பலாய் அப்படியே சுருண்டு விழுந்தான்.

இன்ஸ்பெக்டர் பூனிபாரம் போடாத நபர்களுடன் இறங்கினார். கூட்டம் ஒரு அடி தள்ளியே நின்றது. சிலர் நழுவினர்.

சம்பிரதாயச் சடங்குகள் நிறைவேறின. ஆணைகளைப் பிறப்பித்த இன்ஸ்பெக்டர், ஊர்ப் பிரமுகர்களிடம் நிறையக் கேள்விகள் கேட்டார். அவருடைய பார்வை சுருண்டிருந்த டிரைவர் பக்கம் போனது.

''என்னய்யா ஆச்சு. தண்ணி தெளிங்க... யாருய்யா அடிச்சது? எழுப்புங்கய்யா..!''

கூட்டம் மிரண்டது. யாரோ சோடா தெளித்து கைத்தாங்கலாக டிரைவரை அழைத்து வந்தார்கள்.

''சொல்லுய்யா..! எவன் அடிச்சது..? சப்ஜாடா எல்லாரையும் ஜீப்ல ஏத்திடுவேன்..''

''நா அப்பவே சொன்னேன். அய்யா வர வரைக்கும் பேசாம இருங்கடான்னு...'' ஊர்ப் பெரியவர் இளைப்புடன் கூறினார்.

வண்டியை நகர்த்தினார்கள்.

''பாடிய போஸ்ட்மார்ட்டம் பண்ணித்தான் குடுக்க முடியும். யாருய்யா சொந்தக்காரங்க?''

''நான்தான் அதோட மாமாங்க. ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போய் அறுக்க வேணாங்க. புள்ளய முழுசா குடுத்தா நல்லதுங்க...''

''பின்னால பிரச்னை வந்தா எந்தலை உருளும்யா..!''

''ஒண்ணும் வராதுங்க. நாங்க ஊர்க்காரங்க எழுதிக் குடுத்துடறோம்.''

''என்ன ப்ரஸிடெண்டு! நீங்க சொல்லுங்க...'' இன்ஸ்பெக்டர் தருவிக்கப்பட்ட நாற்காலியில் அமர்ந்தார். டீ வந்தது.

''அதெல்லாம் ஒண்ணும் இல்லீங்க...''

வேண்டிய பேப்பர்களில் கையெழுத்து வாங்கப்பட்டு, பிள்ளை ஒப்படைக்கப்பட்டு டிரைவருடன் ஜீப் புறப்பட்டது.

''என்னய்யா... பணம் கெடைக்காதா...?''

''பணமா... சரியாப் போச்சு. பணம் வேணும்னு போய் நின்னா டிரைவரை அடிச்சது நீதான்னு தனிக் கேஸ் புறப்படும். கேஸ் பண்ணாமா புடிச்சிருக்கு போய் வழவுல மாட்டிக்க...?''

''நீதான நம்ப ஊருப் பொண்ணுக்கு ஞாயம் வேணும்னு சொன்னே...''

''ஞாயமா... அந்த டிரைவரைத்தான் செமத்தியா புடிச்சிட்டோமே அவன் ஆயுசுல இந்த மாதிரி ஒரு அடி தின்னிருக்க மாட்டான்...''

''இனிமே கரெக்டா சிக்னலை குடுத் துருவான்...''

''ஆமா... நம்ம ஊர்க்காரன்னா ஒரு பயம் இருக்கும். அது போதும்...''

''பணம் வாங்கறது சிவமணி பாடு... பஸ் ஓனர் பாடு... ஒங்கொழுந்தயா மாட்டிக்க. விடு. ரொம்ப நாளா இந்த பஸ்காரனைப் போட்டுத் தள்ளணும்னு நெனச்சேன். வகையா மாட்டினான்...''

''டேய்.. டவுன் வண்டி வருது.. எடம் போடுடா... இல்லன்னா நின்னுக்கிட்டே போவணும்...''


''அப்பாடா! இன்னிக்கு இவனும் வராமப் போனா டவுனுக்கு எப்பிடி போறது. பொழப்பை எப்பிடிப் பாக்கறது. ஏற்கெனவே சரக்கு எடுக்க ரெண்டு நாளாப் போவலே...''

விபத்து நடந்த இடமா இது... ஊரே சுத்தமாய்த் துடைத்து விடப்பட்டிருந்தது.

மீன்

பளிங்குக் கரையின் கீழ்
கண்ணாடித் தொட்டி கட்டி
பக்கத்தில் செடிகள் வைத்து,
பார்த்துப் பார்த்து எனை நீ
வளர்த்தாலும்,
தொடுவான் கீழே
நீளப்படுத்து -
தன்போக்கில்
தரை புரளும் ஆற்றில்,
கிழக்கும் மேற்குமாய்
நீர் கிழித்து நீந்தி
விளையாடும்
நாளெங்கே?

– க. சோமீசுவரன்.



5

சுஜாதா

வரும் பகல் தன்னில் வச்ரவேல் காக்க
அரை அருள் தன்னில் அனையவேல் காக்க

– கந்தர் சஷ்டி கவசம்

விமானம் அத்தனை பிரம்மாண்டமாவது என்று எனக்கு ஐடியாவே இல்லை. மேலே அலமாரியும் எதிரே டிபன் சாப்பிட மடக்கு மேசையுமாக ஏறக்குறைய முன்னூறு பேர் உட்கார வசதியாக.

''இது இத்தனை பளுவை வைத்துக் கொண்டு எப்படி மேலே பறக்கும்?'' என்றேன்.

சன்னலுக்கு வெளியே பார்த்த போது, ஒரு ஃபியட் காரை வேறு ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

விமானம் கிளம்பும் முன் எனக்கு அவர் தான் பெல்ட் போட்டு விட்டார். அப்போது எனக்கு அந்த பயம் வந்தது. இந்த விமானம் விழுந்து நொறுங்கப் போகிறது என்று அர்த்த மற்ற பயம் வந்து ஆட் கொள்ள, அர்ஜுனைப் பிடித்துக் கொண்டேன்.

''ஏன் உன் கை நடுங்கறது?''


''ரொம்பப் பயமாக இருக்கு.''

''என்ன பயம்?''

சொல்லவில்லை. சிரிப்பார் என்று தோன்றியது.

''இதுக்கு முன்னால ப்ளேன்ல போனதில்லையா?''

இல்லை என்று தலையாட்ட, விமானம் கிளம்பி கொஞ்ச தூரம் மெல்லப் போய், பிறகு திடீர் என்று பலமான விசில் சப்தத்துடன் வேகமாகப் புறப்பட்டு எவ்வியது. என் வயிற்றைக் கவ்வியது. கரும் பஞ்சுப் பொதிகள் போல மேகங்கள் சன்னலுக்கு வெளியே விசிறியடிக்க, கொஞ்சம் தூக்கித் தூக்கிப் போட, ''விழப்



வண்ணத்துப் பூச்சி வேட்டை

போறது விழப் போறது'' என்று சொல்லிக் கொண்டே,

''அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி
அக்கமும் உணர்ச்சியும்
ஒளிதரும் ஆக்கையும்
ஆக்கமும் அருளிய அருட்
பெருஞ்ஜோதி''

என்று என்ன என்னவோ முணுமுணுக்க ஆரம்பித்தேன். அந்த உணர்ச்சிவெள்ளம் புதுசாக இருந்தது எனக்கு. ஏன் இப்படி என்று எனக்கே வியப்பாக இருந்தது. எரிக்கா ஜாங்கின் FEAR OF FLYING ஞாபகம் வந்தது.

''ரேகா! இஸ் எனிதிங் ராங்?'' என்றார் அர்ஜுன்.


நான் பதில் சொல்லவில்லை. முகம் எங்கும் வியர்த்தது.

ஹோஸ்டஸ் பெண்கள் யாரையும் காணோம். ஏதோ இந்த விமானத்தில் கோளாறு. அதனால் எல்லாரும் பைலட்டுக்கு உதவி செய்யப் போயிருக்கிறார்கள். சக பயணிகள் எதுவுமே நடக்கவில்லை போல பேப்பர் படித்துக் கொண்டு சாந்தமாக இருப்பது வியப்பாக இருந்தது.

விமானம் குதிப்பது நின்று போய், சீராகப் பறக்கத் துவங்கியது.

''ரிப்பேர் எல்லாம் சரியாப் போச்சு'' என்றேன்.

அர்ஜுன் என் கையை வாங்கி ரேகை பார்த்தார். காதல் ரேகை நீர்க்கமாக இருப்பதாகச் சொன்னார்.



நான் பைத்தியம் போல அதை நம்பிக் கொண்டு அப்படி ஒரு ரேகை இருக்கிறதாகப் பாசாங்கு பண்ணிக் கொண்டு அவர் கையை வாங்கிப் பார்த்து முப்பத்தைந்து லட்சம் சொன்னது ஞாபகம் வந்து, தன ரேகை நீர்க்கமாக இருப்பதாகச் சொன்னேன்.

''உனக்கு கார்ட்ஸ் ஆடத் தெரியுமா?'' என்று தன் ப்ரீப்கேஸிலிருந்து புதுசாகச் சீட்டுக் கட்டை எடுத்தார்.

''எனக்கு டாங்கி ஒரு விளையாட்டுத்தான் தெரியும். அப்புறம் ப்ளஃப் ஆட்டம் ஆடுவோம்.''

''செட்டு சேக்கறது ஆடுவதானே?''

''கமாரா.''

''கமார் போறும்!'' என்று மேசையைப் பிரித்து, பதின்மூன்று கார்டு போட்டதே ஒரு பாங்காக இருந்தது. ஜோக்கர் வெட்டச் சொன்னார்.

''பப்லு ஆட்டம் தெரியுமா?'' என்றார். 'தெரியாது' என்றதற்கு, சொல்லித் தருகிறேன் என்

றார்.

நான் அவர் கார்டைப் பார்த்துப் பார்த்து ஆடினேன். இரண்டு முறையும் கட்டிலி ருந்து கலைத்துக் கலைத்து ஆடினார். நல்ல கார்டு வந்தது. அவர்தான் டிக்ளேர் செய்து விட்டு, ''இதையே கிளப்பில ஆடியிருந்தா இதுவரைக்கும் எங்கிட்ட இருநூறு ரூபா தோத்திருப்பே. அதுக்கு பதிலா இருநூறு முத்தம் வாங்கிடப் போறேன்'' என்றார்.

''அந்த நாலு ஸ்பேடை போட்டிருக்கக் கூடாது. நான் மூணை எடுத்தேன், பார்த் தல்லை?''

''போனால் போகிறதுன்னு விட்டுக் கொடுக்கலாம்ன்னுட்டுத்தான் போட்டேன். எனக்குத் தெரியும்.''

''எல்லாத்துக்கும் இந்த மாதிரி விட்டுக் குடுப்பாயா?'' என்றார்.

''உங்களுக்காக எது வேணும்னாலும் விட்டுக் கொடுக்கத் தயார்!''

''அடேயப்பா! என்ன ஒரு பெண்மணி நீ?'' என்று என் தலையைத் திருப்பி பச்சக் என்று சத்தமாக முத்தம் கொடுக்க, பக்கத்து சீட் மந்திரி இன்னும் அதிகமாக முறைத்துப் பார்த்தார்.

விமானம் கவிழாது என்பது எனக்கு உதயமாவதன் முன் அது கீழே இறங்க ஆரம் பித்துச் சரியாக இறங்கப் போவதில்லை என்கிற பயம் மறுபடி வயிற்றைக் கவ்விக் கொண்டு, கந்தர் சஷ்டி கவசம் சொல்ல ஆரம் பித்தேன்.

கடைசி நிமிஷத்தில் கடைசி பத்து அடியை அது தொப்பென்று விழுந்த போது செத்தோம் என்று நினைத்தேன். கண் திறந்து பார்த்த போது உயிருடன் இருந்தேன்.

''என்ன ஆச்சு?'' என்றேன்.

''பெங்களூர் வந்தாச்சு.''

''இனிமே செத்தாலும் ப்ளேன்ல ஏற மாட்டேன்.''

''அப்படியா?'' என்றார் அர்ஜுன் கேலி யாக. ''அந்த பாப்பாவைப் பாரு. எத்தனை கலப சுபாவமாக இருக்கிறது?''

பெங்களூரில் லேசாகக் குளிர் இருந்தது. சட்சட்டென்று மழை பெய்து நகரத்தை அவ் வப்போது அலம்பி விட்டது. எல்லாருமே கண்ணியமாகத் தோன்றினார்கள். கன்னட எழுத்துக்களில் தமிழ்ப் படங்கள் சுவரொட் டிகள் தெரிந்து, நிறைய மரங்கள் இருந்தன. நாங்கள் தங்கின ஓட்டலின் பெயர் ஞாபக மில்லை.

நட்சத்திர ஓட்டல் இல்லை, நடுவாந்தர மான ஓட்டல் என்று தெரிந்தது. அடர்த்தி யான அந்த ஏரியாவுக்குப் பெயர் காந்தி நகர் என்று சொன்னார் அர்ஜுன். நிறைய கூட்ட மாக, கலகலப்பாக இருந்தது. டீவியில் ஒரு கிழவனார் நடந்து கொண்டே வர, அவரைப் பேட்டி கண்டார்கள். பெரிய கன்னட எழுத் தாளர் போலும். மாமி இவர் எழுதிய புத்த கங்களையெல்லாம் கொலு போல் வரிசை யாக அடுக்கி வைத்திருந்தாள். அணைத்து விட்டு, போர்த்திக் கொண்டு படுத்துக் கொள்ள விரும்பினேன்.

''டீவியை அணைச்சுருங்க'' என்றேன்.

பின்னிரவில், இரண்டு நாள் தூக்கமில் லாததால் நன்றாகவே தூங்கினேன். இடம் புதிதாக இருந்ததால் ஒரே ஒருமுறை தான் எழுந்தேன். படுக்கை அருகே விளக்கு ஸ்விட்சைத் தட்டிய போது அர்ஜுன் பக்கத் தில் இல்லை. படுக்கை காலியாக இருந்தது. எனக்குக் கொஞ்சம் அச்சம் இருந்தாலும் பாத்ரூம்தான் போயிருப்பார் என்று கொஞ்ச நேரம் காத்திருந்தேன்.

அரை மணியாச்சு, முக்கால் மணியாச்சு, அவரைக் காணோம். எனக்கு என்ன என் னவோ கற்பனை பயங்கள் தோன்ற ஆரம் பித்தன. கல்யாணம் செய்து கொண்டு இரண்டு நாள் ருசி பார்த்து விட்டு பெங்க ளூரில் தனியே விட்டு விட்டுப் போய் விட்டார். அல்லது அவரை யாரோ, நான் தூங்கிக் கொண்டிருக்கும் போது கதவைத் தட்டி கடத்திச் சென்று விட்டார்கள். இதோ போன் ஒலிக்கப் போகிறது...

''உன் கணவன் எங்களிடம் இருக்கி றான். சின்னச் சின்ன நோட்டுகளாக பத்து லட்சம் ரூபாய்க்கு...''

கதவு திறந்தது. அர்ஜுன் உள்ளே வந் தார்.

''எங்க போய்ட்டீங்க அர்ஜுன்?''

''தலைவலி மாத்திரை வாங்கப் போயி ருந்தேன்.''

''என் பையில் மாத்திரை இருக்கிறதே, கேட்டிருக்கலாமே?''

''எனக்குத் தெரியாதே!''

''என்ன அர்ஜுன், நீங்கதானே வாங்கிக் கொடுத்தீங்க. நான், நீங்க இல்லாம பயந்தே போய் விட்டேன் தெரியுமா?''

அர்ஜுன் ''பயப்படாதே. படுத்துத் தூங்கு'' என்று என் தலையைக் கலைத் தார். முத்தம் கொடுத்தார்.

தூக்கமும் கலைந்து போய் விட்டதால் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தோம். ''அர்ஜுன், உங்களுக்கு என்னைப் பிடித் திருக்கிறது என்று சம்மதம் சொல்ல ஏன் அத்தனை நாள் ஆச்சு?'' என்று கேட்டேன்.

''உன்னைப் பத்தியும் உங்க குடும்பத்

"நீங்க தயக்கமா? கலக்கமா? மயக் கமா?"

"என்ன டாக்டர் கேக்கறீங்க?"

"ஃபீஸ் சொன்னவுடன் எப்படி ரியாக்ட் பண்ணுவீங்கன்னு கேட்டேன்!"

- பி. ஜி. பி. இசக்கி



தைப் பத்தியும் விசாரித்தோம்.''

''யாரை வெச்சு?''

''அதுக்கெல்லாம் டில்லியில் ஏஜென்ஸி இருக்கிறது.''

''என்னைப் பத்தி என்ன ரிப்போர்ட் வந்தது?''

''நீ படிச்ச டிடிஏ பள்ளிக்கூடம், காலேஜ், நிஜமாகவே நீ பி.எஸ்ஸி பாஸ் பண்ணையா? அதில நீ வாங்கின மார்க், உனக்குப் பிடித்தமான கலர், ரைட்டர்...''

''கலர் என்ன?''

''பர்ப்பிள். ரைட்டர் - எமிலி டிக்கின் ஸன்!''

''அட, எப்படித் தெரிஞ்சது?''

''க்விஸ் ப்ரொக்ராம்ல காலேஜ்ல நீ ஆன்ஸர் செய்ததில இருந்து. உனக்கு இரண்டு பர்த்டே இருக்கு...''

எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

''இதனால உன்னை முழுக்க தெரிந்து கொண்டேன் என்று சொல்ல முடியாது'' என்றார் அர்ஜுன்.

''ஏன்?''

''அதற்கு மிக நாட்களாகும். இட் இஸ் எ ஸ்லோ ப்ராஸஸ். என்னைப் பற்றியும் நீ முழுக்க தெரிஞ்சுக்க ரொம்ப நாளாகும். என்னைப் பத்தி நீ என்ன இதுவரைக்கும் தெரிஞ்சுக்கிட்டே?''

''ஒண்ணே ஒண்ணுதான். ராத்திரி திடீர்னு காணாமப் போயிடறீங்க - நள மகாராஜா மாதிரி. இதுவரை ரெண்டு தடவை.''

''ஸாரி! ரெண்டு தடவை எப்படி?''

''டில்லியிலயும் ஹனிமூன் நிலத்தின் போது ராத்திரி எழுந்த போது படுக்கை காலியா இருந்தது.''

''சொன்னேனே, ஆபிக்குப் போய் போன் பண்ணிட்டு வந்தேன்னு.''

''போன் பண்ணினதாச் சொன்னீங்களா என்ன?''

''என்ன நீ, ரொம்ப உளவு வேலை பண்ணுவே போலிருக்கே?''

''சேச்சே அப்படியில்லை அர்ஜுன். உங்ககிட்ட எனக்குப் பூர்ணமான நம் பிக்கை'' என்றேன். முத்தம் கொடுத்தார்.

''நீங்க எந்த பாங்க்ல உத்தியோகம் பார்க்கறீங்க?''

''பாங்க் இல்லை அது. ஃபைனான்ஸ் கம்பெனி.''

''அப்பா பாங்க் என்றாரே?''

''ஏறக்குறைய பாங்க் மாதிரித்தான் இது. எல்லாத்தையும் விளக்கமாச் சொல் றேன். இப்ப அதை விட முக்கியமான வேலை இருக்கு...''

மீண்டும் படுத்த போது முதல் தூக்கத் தின் மேல்பரப்பில் மிதந்தேன். கனவில் திடுக்கிட்டு எழுந்த போது அர்ஜுன் மீண் டும் கதவைத் திறந்து கொண்டு வெளியே போவது தெரிந்தது.

(தொடரும்)

ஹோமியோபதி: ஹோம்லி மருத்துவம்!

● டாக்டர் பன்யன்



அலோபதி என்கிற ஆங்கில மருத்துவம் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிற காலம் இது. தலை வலியா? அனாஸின். ஜுரமா? மெட்டாஸின். வயிற்று வலியா? பரல்கான். ஜலதோஷமா? கோல்டாரின்.

அதிகபட்சம் ஒரு ரூபாயில், சோட்டா உடல் உபாதைகளை நாம் சுலபமாக அவ்வப்போது தீர்த்துக் கொள்கிறோம். கொஞ்சம் பெரிய சமாசாரம் என்றால் ரெண்டு லட்சம் கொடுத்து, எம்.பி.பி.எஸ் படித்து, கிளினிக் வைத்துக் காத்திருப்பவர்களுக்கு தட்சணை வைத்து, மளிகை லிஸ்ட் மாதிரி ஒரு நீள ப்ரிஸ்கிருப்ஷன் எழுதி வாங்கி, அதன்படி சில மாத்திரை வகையறாக்களை வாங்கி முழுங்கி, கிட்டத்தட்ட ஐம்பது, அறுபது ரூபாய் செலவில் ஒரு வைரல் ஜுரத்துக்கு நிவாரணம் தேடிக் கொள்கிறோம்.

சமயங்களில் கொடுக்கிற மருந்து உடம்புக்கு ஒத்துக் கொள்ளாமல் பக்க விளைவுகள் ஏற்பட்டு அதற்கு ஒரு இருபது, முப்பது ரூபாய்!

''உடல் நல ரீதியிலும், துரித நிவாரண ரீதியிலும் அலோபதிக்கு எள்ளளவும் குறைந்ததல்ல ஹோமியோபதி'' என்கிறார் டாக்டர் பன்யன். செலவு மட்டும் முன்னதை விடக் கணிசமாகக் குறைவுதான்.

ஹோமியோபதி, பதினேழாம் நூற்றாண்டு சமாசாரம். வைகை எக்ஸ்பிரஸ் வேக நிவாரணம் இதன் ஸ்பெஷாலிட்டி. கண்டு பிடித்தவர்: டாக்டர் சாமுவேல் ஹான்மன். (Dr. Samuel Hahnemann. என்ன ஒரு ஸ்பெல்லிங்!?) ஜெர்மனி நாட்டுக்காரர். மருந்தாக இவர் கருதியவற்றைத் தாமே சாப்பிட்டுப் பார்த்துப் பரிசோதிப்பாராம்.

ஹோமியோபதியின் அடிப்படை இலக்கணம் - நோய்க்கான கிருமி அல்லது காரணியையே அதைத் தீர்ப்பதற்கான மருந்தாகப் பயன்படுத்துவது! முள்ளை முள்ளால்... கேள்விப்பட்டதில்லை? இதை இன்னும் எளிமையாக விளக்குவதானால் இப்படிச் சொல்லலாம் : ஒரு சாதாரண, நோயற்ற மனிதனுக்கு, ஹோமியோபதியின்

வயிற்று வலி நிவாரண மருந்தைக் கொடுத்தால் - உடனே அவனுக்கு வயிற்று வலி வந்துவிடும். அதையே வயிற்றுவலிக்காரனுக்குக் கொடுத்தால் 'போயே போச்சு!'

உலகின் ஒவ்வொரு அசையும் பொருளைச் சுற்றிலும் ஒரு சக்தி வட்டம் இருக்கிறது. ஹோமியோபதி மருந்துகள், மனித உடலைச் சுற்றி உள்ள சக்தி வட்டத்தை (energy field) பாதிப்பதன் மூலமே நிவாரணம் ஏற்படுத்துகின்றன என்றும் சொல்கிறார்கள்.

ஹோமியோபதி மருத்துவ முறைகளைப் பற்றி நம்மிடம் பேசிய டாக்டர் பன்யன், இம்முறையிலான மருத்துவத்தின் அணுகுமுறையே இதன் தனிச்சிறப்பு என்றார்.

அதாகப்பட்டது, தலைவலிக்காக நீங்கள் ஒரு ஹோமியோ டாக்டரைப் பார்க்கப் போனால், அவர் வெறும் தலைவலி மாத்திரையைக் கொடுத்து அனுப்பி விடமாட்டார். உங்களிடம் சிலபல விநோதமான கேள்விகள் கேட்பார். இப்படி :

1. உங்களுக்கு வயிற்றுவலி வருவதுண்டா?

2. நீங்கள் எங்கே வேலை பார்க்கிறீர்கள்?

3. மாதச்சம்பளம் என்ன?

4. உங்களுக்கு என்னென்ன பிடிக்கும்?

5. சினிமா பார்ப்பீர்களா?

6. ஹோட்டல் சாப்பாடு பிடிக்குமா? வீட்டுச் சாப்பாடா?



7. மாமனார் வீட்டுடன் சுமுக உறவு உண்டா? தகராறு ஏதும்?

8. சின்ன வயதில் கிரிக்கெட் ஆடி பந்து பட்டு, அல்லது லவ்லெட்டர் கொடுத்து செருப்பு பட்டு எப்போதாவது ட்ரீட்மெண்ட்டுக்குப் போயிருக்கிறீர்களா?


வெறும் தலைவலி! அதற்கு இப்படியெல்லாம் கேட்டால் எழுந்து போய்க் கழுத்தைப் பிடித்து விடத் தோன்றுகிறதா? ஆனால் ஹோமியோபதிக்கு இதெல்லாம் வேண்டியிருக்கிறது!

காரணம் - இந்த முறையில் ஒரு குறிப்பிட்ட நோய்க்கு மட்டும் மருத்துவம் பார்ப்பதில்லை. மாறாக நமது கேரக்டர், உடல் நலம், அணுகுமுறை, இதர நோய் பாதிப்புகள், தாக்குப் பிடிக்கிற திறன் எல்லாவற்றையும் மனதில் கொண்டே ட்ரீட்மெண்ட் ஆரம்பிக்கிறார்கள். இதில் என்ன லாபம் என்றால் - ஒரு தலைவலிக்காக நீங்கள் ஹோமியோபதி பக்கம் போனால் - உங்களுக்கு வேறு நோய் வருகிற வாய்ப்பு இருந்தால் - அதுவும் தீர்த்து வைக்கப்படுகிறது! வந்த நோய் மீண்டும் வரும் (relapse) சாத்தியக்கூறு அற்றுப் போகிறது. ஆச்சர்யமாக இல்லை? ஆனால் நூறு சதம் உண்மை. ஒரு மனிதன் நீண்ட காலம் எவ்வித உபாதைகளும் இன்றி, ஆரோக்கியமாக வாழ்வதற்கு ஹோமியோபதி பெரிதும் உதவும்.

மற்ற மருத்துவ முறைகளில் கிடைப்பது வெறும் 'relief' (தற்காலிக நிவாரணம்). முழுமையான நிவாரணம் தரவல்லது ஹோமியோபதி. குறிப்பாக வைரஸ் ஜுரங்கள் எல்லாமே இம்முறையில் முழுக்க குணமடைந்து விடும். அலோபதி முறையில் வைரஸ் கிருமிகளுக்கு முறியே கிடையாது. ஆன்டிபயாடிக்குகள் தற்காலிக நிவாரணம் தருவதோடு கூடுதல் நோய்த் தொற்று வராமல் காக்கின்றன. ஆனால் ஹோமியோபதி சிகிச்சை வைரஸை விரட்டி விடுகிறது.

இதனால் ஹோமியோபதியும் அலோபதியும் விரோதிகள் என்று முடிவு கட்டி விட வேண்டாம். அவசியமானால் இரு முறைகளையும் இணைத்து மிகச் சிறந்த பயன்களைப் பெற முடியும். ஹோமியோபதி மருந்து சாப்பிடுவோர் ஏராளமாய்ப் பத்தியங்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்பதும் உண்மையல்ல.

தவிர, செலவைப் பார்த்தால் அலோபதி இதர பதிகளோடு ஒப்பிடுகையில்



பத்தில் ஒரு பங்குதான் என்னும் போது காதில் தேன் பாயவில்லை?

முகமூடி போட்டு, கையில் கத்தியோடு நீவிழி விழிக்கிற ஆபரேஷன் சம்பிரதாயங்கள் ஹோமியோபதியில் இல்லை என்கிறார் டாக்டர். நோயின் ஆரம்ப நிலையிலேயே ஹோமியோவுக்குள் புகுந்து விட்டால் வெறும் மாத்திரைகளாலேயே சரி பண்ணி விடுவது இதன் சிறப்பம்சம். பைல்ஸ், சிறுநீரகத்தில் கல் போன்றவற்றை எளிதில் சரி கட்டலாம். எய்ட்ஸ"க்கு ஒரு வெற்றிகரமான சிகிச்சை முறையை ஹோமியோபதி மருத்துவத்தில் கண்டுபிடிப்பதற்காக, அரசாங்க உதவியுடன் மதுரை ராஜாஜி மருத்துவமனையில் ஆரம்ப கட்ட ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

இவ்விடத்தில் ஹோமியோ - மாத்திரைகள் பற்றிக் கொஞ்சம் சொல்லலாம். நூறுவித மாத்திரைகளைப் பார்த்தாலும் பார்வைக்கு வித்தியாசம் தெரியாது. பல்லி மிட்டாய் மாதிரி அத்தனையும் ஒரே சைஸ்; ஒரே கலர்! வெறும் சர்க்கரைக் கட்டி! திரவ வடிவ மருந்துகள் (டின்சர் என்கிறார்கள்) இந்தச் சர்க்கரைக் கட்டிகள் நிறைந்த பாட்டிலில் சொட்டு சொட்டாக விடப்படுகின்றன. பின் ஒரு கலக்கல். அந்தே! இனிப்பு காரணமாக, குழந்தைகளுக்கும் சுலபமாகக் கொடுக்கலாம்! தாவரங்களிலிருந்தும், கறிகாய்களிலிருந்தும், கனிமங்களிலிருந்தும் (சில ஜீவராசிகளிலிருந்தும்) தயாரிக்கப்படும் இம்மருந்துகள் எவ்வித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாதவை என்பது குறிப்பிட வேண்டிய விஷயம்.

நீங்கள் கேட்கலாம். இத்தனை நற்குணங்கள் நிரம்பிய இம்முறையிலான மருத்துவம் ஏன் பிரபலமாகவில்லை என்று.

டாக்டர் பன்யன் தரும் விளக்கம் இது. ''கிராமப்புற மக்கள், கையில் ஒரு சிரிஞ்சும் கழுத்தில் ஒரு ஸ்டெதஸ்கோப் மாலையும் இல்லாதவரை டாக்டராகவே ஒப்புக் கொள்வதில்லை. நகர்ப்புறங்களிலும் பெரும்பாலும் அவ்வண்ணமே. எந்த வகையிலும் நோயாளிக்குச் சிறு துன்பமும் தரக் கூடாதென்பது ஹோமியோபதி சித்தாந்தம். ஆஸ்பத்திரியிலும் கூட, அவர்கள் வீட்டிலிருப்பதைப் போலவே உணர வேண்டும். (டைட்டில் ஓ.கேயா?) எனில், ஊசி குத்துவது இம்சை இல்லையா? சிரமமே இல்லாமல் நிவாரணம் தருவது ஹோமியோபதி. இதை மக்கள் இன்னும் உணரவில்லை! மேலும், போதுமான அளவு மருத்துவப் படிப்பு இன்றியே ஒரு 'B' class registration பெற்றுக் கொண்டு ஹோமியோபதி சிகிச்சை அளிக்கும் ஆயிரக்கணக்கானோர் உள்ளார்கள். இவர்களிடம் சிகிச்சைக்குப் போய் அடைந்த ஏமாற்றங்கள் காரணமாக பலர் ஹோமியோபதி பேரில் நம்பிக்கை இழந்து விட்டார்கள். எல்லா ஹோமியோபதி டாக்டர்களுக்கும் ஒரே சீரான பயிற்சியும் சான்றிதழும் இருந்தால் இந்த நிலை சீர்பட்டுப் போகும்.

ஸ்டெத்தும், சிரிஞ்சும் தேவைப்படாத இந்த எளிய மருத்துவ முறையைப் பிரபலப்படுத்துவதன் மூலமே 'Health for All by 2000' என்ற இலக்கைக் குறைந்த செலவில் இந்தியாவில் அடைய முடியும் என்பது டாக்டர் பன்யனின் கருத்து. டங்கல் திட்டம் அமுலுக்கு வர உள்ளதால் அலோபதி மருந்துகளின் விலை கிடு கிடு என்று ஏறப்போகிறது. ''ஹோமியோபதியைக் கைதூக்கிவிட இதுவல்லவா சமயம்?'' என்கிறார் டாக்டர் பன்யன்.

பேட்டி : **சீதா ரவி, கிச்சா**

படம் : **கோபிநாத்**



பூகம்பங்களையும் நோய்களையும் தடுக்க முடியுமா?



பூகம்பம்! இன்று இந் நாட்டை குலுக்கிய நிகழ்ச்சி : இன்றோ, நாளையோ, இப்போதோ, அடுத்த நிமிடமோ என்று நீடித்த கவலையுடன் நிலையற்ற வாழ்க்கை - இதன் காரணம்தான் என்ன? இதைத் தவிர்க்கவே முடியாதா? எங்கும் இதே சிந்தனை! இதற்கு இயற்கையின் சீற்றமோ, சாபக்கேடோ காரணம் அன்று. நமது வாழ்க்கை முறையை பார்ப்போமா? ஆதி மனிதனிலிருந்து இன்று வரை நடந்த மாற்றங்கள், உணவு, உடை, உறைவிடம் என்ற நிலை மாறி வாழ்க்கை பகட்டாகி விட்டிருக்கின்றது. மகிழ்ச்சிக்கு வித்திட்டிருந்தால் சந்தோஷப்படலாம். அழிவை தேடித்தான் வேகமாகச் சென்று கொண்டிருக்கின்றோம். கனிகளையும், காய்களையும், கீரைகளையும், மூலிகைகளையும் மட்டுமே உணவாகக் கொண்ட மனிதன் பலநூறு ஆண்டுகள் வாழ்ந்த வரலாறு தெரிந்திருந்தும் இன்று பலவகை ருசியுடன் கூடிய உணவு, விதவிதமான காற்றுப் புகாத பகட்டான ஆடைகள், பொன், வெள்ளி ஆபரணங்கள், நச்சுப் புகை கக்கும் தொழிற்சாலைகள், பெட்ரோல், டீசல் வாகனங்கள், தொழிற்சாலை கழிவுகளை ஆற்று நீரில் கலக்கும் கொடுமைகள், கனிகளை அளிக்கும் மரங்கள் அழிந்து காப்பி, டீ எஸ்டேட் ஆக மாறிப் போன கதைகள். மரம் அழிந்ததால் மழை இன்றி நீர் வற்றி பாசனத்திற்கே அதிகப்படியான ஆழ்கிணறுகள் தோண்டியாகி விட்டது. இந்த செயற்கை வாழ்க்கைக்காக உருவானவைகள்தானே பெட்ரோல், இரும்பு, நிலக்கரி, பொன், வெள்ளி, தாமிர சுரங்கங்கள்! உடல்நலத்திற்கு இன்றி நாவின் ருசிக்காக மட்டுமே தயாராகும் உணவு தயாரிப்பு நிறுவனங்கள்! மாளிகைகளையும் வீட்டையும் கட்ட மரங்களையும் அல்லவா அழித்தோம்! இயந்திரங்களையும் உருவாக்க இரும்புச் சுரங்கங்கள்! இவ்வாறு பல வகைகளிலும் பூமியை துளையிட்டும், தோண்டியும் வருவதால் பூமியின் உள் இருக்கும் வெப்பமானது வெளியேறி பூமி குளிர்ந்து விடுகின்றது. பொருள்கள் குளிர்ச்சியினால் சுருங்கி விடும் என்பது அனைவரும் அறிந்ததே! பூமியின் அடியில் ஏற்படும் வெற்றிடத்தாலும், பூமி குளிர்ச்சி அடைவதாலும், பூமி சுருக்கத்தாலும் இயற்கையாக உள்ள உறுதிநிலை பாதிக்கப்பட்டு பூமி அதிர்ச்சி பூகம்பம் ஏற்படுகிறது. இதில் மனிதனால் உருவாக்கப்பட்ட அனைத்தும் அழிந்து இயற்கை வாழ்க்கையை மீண்டும் எண்ணத் தூண்டுகிறது. இது எவ்வாறு மாறியது?

பறவையைக் கண்டான், விமானம் படைத்தான்! அழகான பாட்டு! பறவை உண்ணும் உணவைப் பற்றி சிந்தித்தானா? பல ஆயிரம் மைல்கள் சோர்வற்று பறக்கும் பறவைகள் கனிகளையும், இலை, பழங்களை உண்ணும் பூச்சிகளையும் மட்டுமேதான் உணவாக உட்கொள்கிறது. அன்றைய மனிதன் இயற்கையான காய்களையும், கனிகளையும் உண்டான். உடை இன்றியும் இருந்தான்! அதனால் இயற்கையாக உள்ள குளிரையும் சூரிய வெப்பத்தையும் தாங்கிக் கொண்டான்! உறுதியான உடலுடனும், நோய் எதிர்ப்புச் சக்தியுடனும் இருந்தான். அவ்வாறான மனிதன் பல ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தான் என்கிறது வரலாறு. விலங்கினத்தை வேட்டையாடி பச்சையாக மாமிசத்தை உண்டான் மனிதன். எதிர்பாராமல் காட்டுத் தீயில் சிக்கித் தீய்ந்து மடிந்திருந்த மிருகங்களின் மாமிசத்தை உண்ணத் தெரிந்து கொண்ட பின் நாக்கைவைக்கு அடிமையாகிப் போனான். பின்பு அவ்வாறு சுட்ட மாமிசத்தை எடுத்துச் செல்லும் வழியில் சேற்றில் விழுந்ததால் அதைச் சுத்தம் செய்ய வேண்டி எதிர்பாராமல் கடல் நீரில் கழுவியதால் உப்புச் சுவையும் சேரவே, இப் புதிய சுவையால் தேவைக்கு அதிகமாகவே உட்கொண்டான்! உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து, பலவித நோய்களை வரவழைத்துக் கொண்டான். எனவே இயற்கையிலிருந்து விலகிச் சென்று விட்டான்! செயற்கை உப்பும் வேகவைத்த உணவும் முறையற்ற காமத்தை பெருக்கி உடலை மறைக்க உடை உடுத்த வேண்டியதாகி விட்டது. இயற்கையிலிருந்து மாறியவன் குளிரையும், வெப்பத்தையும் தாங்க முடியாமல் வீட்டைக் கட்டினான். வீடு கட்ட மரம், சிமெண்ட், செங்கல் என்று படிப்படியாக இயற்கையை அழித்து செயற்கை வாழ்க்கைக்கு ஆட்பட்டான். பல நோய்களுக்கும் உள்ளானான். இயற்கையை அழித்த காரணத்தால் பூகம்பத்திற்கும் வித்திட்டான்!

இவ்வாறு ஏற்பட்ட சிறுநீரகக் கோளாறு, ஆஸ்த்மா, புற்றுநோய், நீரிழிவு, அல்சர், எய்ட்ஸ், மூட்டுவலி, இடுப்புவலி - போன்ற எவ்வகை நோய், வலி, வியாதிகளையுடையவர்களும் பஞ்சபூதங்களான நிலத்திற்குரிய அருகம்புல், நீருக்குரிய மாவிலை, நெருப்புக்குரிய வாழையிலை, காற்றுக்குரிய வேப்பிலை, வானத்திற்குரிய வெற்றிலை ஆகியவைகளுடன் அற்புத மருத்துவ குணமுடைய வில்வம், துளசி, அத்தி, ஆடாதொடை, குப்பைமேனி, கீழாநெல்லி, தும்பை, நாவல், முருங்கை போன்றவைகளையும் தனித்தனியாக வெயிலில் உலர்த்தி பொடி செய்து சலித்து, தக்க அளவில் கலந்து ஒரு மண்டலம் எனப்படும் 48 தினங்கள் உட்கொண்டு வியக்கத்தக்க வகையில் குணமடையலாம். இது பற்றி முகாமில் நேரில் சந்தித்து ஆலோசனை பெற முடியாதவர்கள் கடிதம் எழுதுங்கள்.

தலைமை முகவரி :

ஞானோதய தெய்வீக மூலிகை வைத்தியர்

Dr. C.K. மாணிக்கவாசகம், P.B.No:30 (காலேஜ் எதிரில்)

திருப்பத்தூர் (N.A.A.) 635 601. போன்: 04179 - 20469

சென்னை கிளைகள் : போன் : 6427638, 8280466 - வீடு : 6424285

குறிப்பு : இடுப்பு வலி, ஆஸ்த்மா, சைனோபீலியா, காமாலை, வெள்ளைபடுதல், வாயுத்தொல்லை, ஆண்மைக் குறைவு, தூக்கமின்மை, உடற்பருமன், புற்றுநோய், மலச்சிக்கல், பசியின்மை, சிறுநீரகக் கோளாறு போன்றவைகளுக்கு ஆலோசனையும், உணவில் ஒரு வகையேயான தெய்வீக மூலிகை கலவைப் பொடிகள் கிடைக்கும்.

வைத்தியரிடம் ஆலோசனை பெற, நேரில் சந்திக்க : 1994-ம் வருட புதிய முகாம் விவரம், ஒவ்வொரு மாதமும் (பொங்கல் போன்ற பண்டிகை தினங்களிலும் கூட முகாம் உண்டு.)

2-ந் தேதி : வேலூர் (N.A.) பிற்பகல் 1.00 மணி முதல் 2.00 மணி வரை, ஹோட்டல் கன்னா, 16, ஆபீஸர்ஸ் லைன், போன் : 25060.
3,6,7,19,20,21 ஆகிய தேதிகளில் - சென்னை காலை 10 மணி முதல் 1.00 மணி வரை, முகவரி : 89/14, வெள்ளாளத் தெரு, புரசைவாக்கம், சென்னை - 84. போன் : 6427638
4-ந் தேதி : கடலூர் (S.A. Dt.) காலை 9 மணி முதல் 11 மணி வரை அந்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல், போன் : 20707.
4-ந் தேதி : விழுப்புரம், பிற்பகல் 2 மணி முதல் 3 மணி வரை, ஹோட்டல் ஆனந்தா, பஸ் நிலையம் எதிரில், போன் : 2962.
4-ந் தேதி : திருவண்ணாமலை, மாலை 5 மணி முதல் 6 மணி வரை, பிரகாசம் லாட்ஜ், 10, சின்னக்கடைத் தெரு, போன் : 2050.
9-ந் தேதி : பெங்களூர், காலை 11.30 மணி முதல் 12.30 மணி வரை, ஹோட்டல் பிராட்வே. (கல்பனா தியேட்டர் அருகில்). கெம்பே கவுடா ரோட், போன் : 72321.
9-ந் தேதி : ஓசூர், மாலை 3 மணி முதல் 4 மணி வரை, சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட், போன் : 22899
9-ந் தேதி : கிருஷ்ணகிரி, மாலை 5 மணி முதல் மாலை 6 மணி வரை, அமராவதி லாட்ஜ், போன் : 2120.
12-ந் தேதி : சேலம், காலை 11.30 மணி முதல் 12.30 மணி வரை, ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில். போன் : 49333.
12-ந் தேதி : ஈரோடு, மாலை 4 மணி முதல் 5 மணி வரை, ஹோட்டல் ஆக்ஸ்போர்டு, பஸ் நிலையம் எதிரில், போன் : 61761.
13-ந் தேதி : கோயம்புத்தூர், காலை 9.30 மணி முதல் 12.30 மணி வரை, சேரன் பேலஸ் லாட்ஜ். (சாந்தி தியேட்டர் பின்புறம்), போன் : 210265, 216691.
14-ந் தேதி : மதுரை, காலை 9.30 மணி முதல் 11.00 மணி வரை, ஹோட்டல் ரொண்ட்ஸ் சென்ட்ரல், மேலப்பெருமாள் மேஸ்திரி தெரு, (தங்கம் தியேட்டர் அருகில்) போன் : 36311.
14-ந் தேதி : தஞ்சாவூர், மாலை 5 மணி முதல் 6 மணி வரை, அசோகா லாட்ஜ், போன் : 20021.
15-ந் தேதி : திருச்சி, காலை 9.30 மணி முதல் 11 மணி வரை, ஹோட்டல் ஆனந்த் (சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில்), போன் : 40545.
15-ந் தேதி : நாமக்கல், பிற்பகல் 2.30 மணி முதல் 3.30 மணி வரை, ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, போன் : 21336.
18-ந் தேதி : ஆம்பூர், காலை 10 மணி முதல் 11 மணி வரை, சம்பங்கி லாட்ஜ், போன் : 43311.
18-ந் தேதி : காஞ்சிபுரம் மாலை 4 மணி முதல் 5 மணி வரை, ராஜம் லாட்ஜ், (பஸ் நிலையம் அருகில்) 9, காமராஜர் தெரு.
25-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை, திருப்பத்தூர் வீட்டு முகவரியில் முன்னதாக போன் (போன் : 20469) செய்து உறுதிப்படுத்திக் கொண்டு வரவும்.

அறிவிப்பு : எமது T.V. பேட்டிகளைப் பார்க்காதவர்களும், பத்திரிகைப் பேட்டிகளைப் படிக்காதவர்களும், மூலிகை வைத்திய பயிற்சி முகாமில் கலந்து கொள்ளாதவர்களும், ஆலோசனையை நேரில் பெற முடியாதவர்களும் என்னால் 20 வருட ஆராய்ச்சியில் எழுதப்பட்ட 'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்' என்ற நூலைப் படித்தாலே போதும். பலன் உறுதி! இந் நூலைப் பதிவு அஞ்சல் மூலம் பெற ரூ. 40/-ஐ மேலே உள்ள தலைமை அலுவலக முகவரிக்கு அனுப்புங்கள்.

வெளிச்சப்பூ

இப்படியொரு தலைப்பில் தமிழ் சினிமா வந்திருக்கிறது என்றால் அநேகமாக யாரும் நம்ப மாட்டார்கள். ஒருவேளை, மலையாள டப்பிங்காக இருக்கலாம் என்பீர்கள். ஒருசில குசும்பு சிந்தனையாளர்கள், நீலவண்ணப் படமாக இருக்கக்கூடும் எனலாம். நானும் முதலில் அங்ஙனமே நினைத்தேன்.

அடா-புடா அதிரடிகளுக்கும், எங்க ஊரு எருமைமாட்டுக்காரன் போன்ற காவிய லட்சணங்கள் பொருந்திய டைட்டில்களுக்கும் பழகிப் போன நமக்கு, மேற்படி டைட்டில் நெப்டியூன் கிரக ரகமாகப் படுவதில் வியப்பொன்றும் இல்லை.

வருஷத்திற்கு சுமார் நூற்றைம்பது அமர காவியங்கள் ரிலீஸாகும் இப்புண்ணியத் தமிழ் பூமியிலே - அத்தனையையும் நான் பார்த்தாக வேண்டுமென்பது, என் அப்பன் இட்டமுடன் என் தலையில் எழுதி வைத்த விதி. போன ஜென்மத்தில் ஒரு கசாப்புக் காரனாக நான் பிறந்திருக்கக்கூடுமென்பது, இதற்கான காரணம்.

ADMIT ONE என்கிற சிவப்பு சிக்னலோடு, அவ்வப்போது வரும் கொட்டை எழுத்து அழைப்பிதழை எடுத்துக்கொண்டு, நகர் மையத்தில் நீங்கள் பார்த்திராத குட்டி தியேட்டர்களில், ரிலீஸாவதற்கு முந்தின தினம் படம் பார்த்து, நாலு வரி விமர்சனம் எழுதி விட்டால் என் கடன் தீர்ந்தது. சற்று வித்தியாசமாக, சுற்றம் சூழ வந்திருந்து பார்த்து ரசிக்கச் சொன்னது, வெளிச்சப்பூ.

ஆரம்பத்தில், எப்பாடுபட்டேனும் என்னோடு ஒட்டிக் கொண்டு, ஓசியில் படம் பார்க்க அலைந்த நண்பர் குழாம், இப்போதெல்லாம் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. மாறாக, கேரளாவுக்குப் போகும் பொன்னாச்சி அடிமாட்டைப் பார்ப்பது போல என்னை ஒரு பார்வை! ஆகவே, நான் மட்டும் களம் காணப் புறப்பட்டேன். அனுபவம் தந்த பாடத்தின்படி, ஒரு பாட்டில் அமிர்தாஞ்சன், ஒரு இன்ஹேலர், சற்று பெரிய சைஸ் கர்ச்சிப், இரண்டு பாக்கெட் பாப்கார்ன் இத்யாதிகளுடன் அன்றைய எனது மாலை நேரம் மங்களகரமாகத் தொடங்கியது.

லேசாக மழை பெய்து கொண்டிருந்ததனாலும், வை.கோவின் நீதி கேட்கும் பேரணியினாலும், மறுநாள் பல்லவன் ஊழியர் ஸ்டிரைக் அறிவிக்கப்பட்டிருந்ததாலும், அனைத்துக்கும் மேலாக சன் டி.வி.யில் அன்று வாத்தியார் படம் என்பதனாலும் தியேட்டரில் ஏராள ஈ. என்னைப் போன்ற ஒருசில கர்ம வீரர்கள் மட்டும் ஜோல்னா பை சகிதம் தியேட்டர் வாசலில் சமோசா சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அக்குளில் இடுக்கிய பையுடன் பி.ஆர்.ஓ., ஸ்டில் கொடுத்துக் கொண்டிருந்தார். பெண்களின் திருமண வயதைப் பின்புறம் சொன்ன ஆட்டோவிலிருந்து, ஃபிலிம் ரோல் அடங்கிய அலுமினியப் பெட்டிகள் இறங்கிக் கொண்டிருந்தன. முன்னதாக, வரவேற்பு அறையில் அமர்ந்திருந்த ஃபிலிம் நியூஸ் ஆனந்தன், மறுநாள் நடக்கவிருக்கும் ஏதோ பூஜைக்கான நீள நீள அழைப்பிதழ்களை ஆள் பார்த்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர் இல்லாத பத்திரிகையாளர் காட்சி இல்லை.

சட்டென்று என் தோளில் ஒரு கை விழுந்து, மெல்லத் திருப்பியது. பி.ஆர்.ஓ.

''சார், ஒரு நிமிஷம். இவர்தான் டைரக்டர். டைரக்டர் சார்! இவர் ராகவன். — பத்திரிகை.''

வழக்கமான அறிமுகம். நான் அந்த இளைஞனைப் பார்த்துப் புன்னகைத்தேன். வேறு வழி? அவன், என் கையைப் பிடித்துக் கொண்டான்.

''கேள்விப்பட்டிருக்கேன் ஸார். உங்க பத்திரிகை ரொம்ப நேர்மையா எழுதும், இல்லே?''



''அதை நீங்க சொல்லணும். அஃப் கோர்ஸ், இது உங்க முதல் படம் இல்லை?''

''ஆமாம் சார். பூர்வீகம் தமிழ்நாடுதான் எனக்கு. ஆனா படிச்சது, வளர்ந்தது எல்லாம் பம்பாய்ல. கோவிந்த நிஹலானியிடம் எட்டு படம் அஸிஸ்டெண்டா இருந்திருக்கேன் ஸார்!''

வளர்ப்பிலும், உடையிலும் பம்பாய் தெரிந்தாலும் உச்சரிப்பில் மெட்ராஸ் தொனித்தது. ப்ரொஃபைலில் அழகாகத் தெரிந்தான். படம் ஓர்க்-அவுட் ஆனால் நிறைய கிசுகிசு வரக்கூடிய தோற்றம்.

''எதுக்கு சார் தமிழ்ப் படம் எடுக்கிற ஆசை? இங்க, ஃபீல்டுல முத்தெடுத்த வங்களெல்லாம் இப்ப அரிசி மண்டி நடத்திட்டிருக்காங்க. நீங்க, அமீர்கான் - ஜூஹி வெச்சி எடுக்கறதை விட்டுட்டு... ப்ச், தமிழ்ல ஒரு படம் எடுத்தா மணிரத்னம் ரேஞ்சுக்குப் போயிறலாம்னு யாரோ உங்களுக்கு சோப் போட்டிருக்காங்க சார்! பைசா பேறாது சார் இங்க! டைட்டிலுக்கு என்ன அர்த்தம்னு வெளில பத்திரிகைக்காரங்களே சிண்டைப் பிச்சிக்கறாங்க, பாத்தீங்க இல்ல?''

''யாரும் சொல்லலை சார். பம்பாய் ஃபீல்டுல வளர்ந்தாலும் தமிழ்ல எடுக்கறது தான் சார் என் லட்சியம்.''

கஷ்டப்பட்டு சிரிப்பை அடக்கிக் கொண்டேன். சர்வீஸில், இதுபோல் ஏராளத் திரையர்களைப் பார்த்து விட்டேன். என் மொழி, என் மக்கள், ரத்தம், நரம்பு, கிட்னி என்றெல்லாம் எட்டு காலம் பேட்டி கொடுப்பார்கள். ரெண்டு ஃபைட், நாலு டான்ஸ் (ஒன்றில் பிரபு தேவா) ஒரு மாரியாத்தா பாடல், டைட் குளோஸப்பில் தாலி, ரேக்ளா ரேஸ், தண்ணி அடித்து தத்துவப் பாடல் - இப்படியாக பஜனை

பா. ராகவன்

பண்ணுகிற பார்ட்டிகள். கொசுறாக ஒரு கோவிந்த நிஹலானியின் சிஷ்யப் பிள்ளை!

என்ட்ரன்ஸில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நுழைந்து கொண்டிருந்தது. சாலி, சாக்லேட் கேக் சாப்பிட்டுக் கொண்டிருந்தது. அமர்க் களச் சிரிப்புடன் குமுதம், மீசை தடவிக் கொண்டிருக்க, குங்குமம் மூன்றாவது சிக ரெட்டில் லயித்திருந்தது. ஹிண்டு இன்னும் வந்தபாடில்லை. கடிகாரம் ஏழைக் காட்ட, ''ஆரம்பிச்சிறலாமில்ல?''

''இன்னும் பத்து நிமிஷம் பாக்கலாம் சார். நிறைய பேர் இன்னும் வரலை'' என்று நகம் கடித்தார் பி.ஆர்.ஓ. டைரக்டராகப் பட்ட ஜூனியர் நிஹலானி, என்னை விடுவ தாக இல்லை.

''ஹிந்தில நான் முயற்சி பண்ணாம இல்லை சார். ரெண்டு கோடி பட்ஜெட் டுக்குக் குறைவா கதை சொல்லாதேங்கறான் ப்ரொட்யூஸர். பாம் வெடிக்கற ஸீன் ஸ்டில் லில் இல்லாட்டி, நியூஸ் போட மாட்டேங் கறான், பத்திரிகைக்காரன். ஃபீல்டே அங்க குட்டிச்சுவராயிடுச்சி சார்! படத்துல பாட்டு இல்லைன்னா, பைத்தியக்காரனைப் பாக்க றது போலப் பாக்கறான். கவிதை மாதிரி ஒரு கதை சொன்னா, 'நீ உருப்பட மாட் டே'ங்கறான். ரெண்டு வருஷம் வீட்ல கம்மா இருந்தேன் சார். ஃபிலிம் டிவி ஷனுக்கு, மகாராஷ்டிரா பூகம்பம் பத்தி ஒரு டாக்குமென்ட்ரி ஸப்மிட் பண்ணேன். அவ லம் அதிகமாகத் தெரியலைன்னு ரிஜெக்ட் பண்ணிட்டாங்க.''

''இங்க மட்டும் என்ன வாழுதாம்? போகட்டும். இந்தப் படத்துல யார் ஹீரோ?''

கொஞ்சம் வெட்கப்பட்டான்.

''நான்தான்!''

''போச்சுறா. புதுமுகமா? ஹீரோ யின்?''

''இல்லை சார்!''

''என்னது?''

''ஹீரோயினே கிடையாது சார்!''

''அப்ப டூயட்? கனவு ஸீன்? பூந்தேரில் ஊர்கோலம்? உனக்காக உயிருள்ள வரைக் கும் காத்திருப்பேன் டயலாக்? மரணத்தில் கூட எங்களைப் பிரிக்க முடியாதுன்னு கடை சில ஒரு ஸ்லைடு?''

''இல்லை சார்! நீங்க சொன்ன எதுவுமே என் படத்துல கிடையாது. ஜெயிலுக்குப் போயிட்டு வந்த ஒரு நக்ஸலைட்டை, சமு தாயம் எப்படி எதிர்கொள்றதுன்றதைக் காட்டியிருக்கேன். ஆர்ட்டிஃபிஷியலா எது வுமே சொல்லலை சார்!''

''கடவுளே! கன்னித் தமிழ் மொழில இப்படி ஒரு படமா! யார் சார் இதுக்கு ஃபைனான்ஸ் பண்ணாங்க? ஆடிச்ச நல்லூர்ல கடலைத் தோட்டத்தை வித் துட்டு, மூட்டைல பணத்தைக் கட்டிட்டு வந்த எந்த இளிச்சவாயன் சிக்கினான்?''

அவன் மெல்லச் சிரித்தான். ஒரு நீண்ட பெருமூச்சின் முடிவில் சொன்னான் :

''சொந்தப் படம் சார்! யாரும் ஃபைனான்ஸ் பண்ணலை. பூர்வீக நிலம் கொஞ்சம் தஞ்சாவூர் பக்கம் இருந்தது. அப்பு றம் மனைவியின் நகைகள். ஏற்காட்டுல ஒரு தேயிலை எஸ்டேட்... எல்லாத்தையும் வித் தாச்சு! இப்ப இருக்கறது, மைலாப்பூர் முண்டகண்ணியம்மன் கோவில் தெருல ஒரு வாடகை வீடு! பேரன்ட்ஸ் ஒத்துக்கலை. மாமனார் வீட்டுலயும் ஒதுக்கிட்டாங்க. நௌ ஐயாம் பென்னிலெஸ். இந்தப் படம் ஓடினாத்தான் ஸார், வாழ்க்கையே...''

அவன் கண் ஓரம் ஒரு வெள்ளித் துளி எட்டிப் பார்த்தது. முகம் சிவந்து, காது நுனி கள் சூடாயின. உதடு துடித்து, கர்ச்சீப்பால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண் டான்.

இதுவும் எனக்குப் புதிதல்ல. முதல் படம் எடுப்பவர்களின் வழக்கமான டென் ஷன். ஓடி விட்டால் அப்புறம் ஆளைப் பிடிக்க முடியாது. ஓடாவிட்டால் அடுத்த சில நாட்களில் கட்டை மீசை போஸ்ட ரோடு, 'வண்டிக்கார தண்டச்சோறு' என்று புதுப்படத்துக்கு ஏமகண்டத்தில் பூஜை போட்டு, எருமை மாட்டைக் குறுக்கே விட்டுப் புரட்சி செய்வார்கள்.

மணி அடித்து விட்டார்கள். இன்னும் சில மணித்துளிகளில் இருட்டறையில் வெளிச்சப்பூ உதிர ஆரம்பித்து விடும். சிறிய தியேட்டர். சற்று முந்திக் கொண்டால்தான் கடைசி ரோவில் இடம்பிடிக்க முடியும். இல்லையேல் ஸ்கிரீனுக்கு அருகில் தலை யை 180 டிகிரியில் உயர்த்தி, இரண்டரை மணி நேரம் தவம் கிடக்க நேரிடும். ஆனால்

" 'மகாமகம் கண்ட தலைவர் அவர் களே! வருக, வருக'ன்னு போட்டு இருக்கே ஏன்?"

"அவர் இதுவரைக்கும் 12 கட்சிக்கு மாறி, மாறி இப்போ இந்தக் கட்சிக்கு வந்திருக்கார், அதான்!"

– ஸ்ரீராம் ஸ்ரீதர்



அவன் என்னை விடுகிறதாகத் தெரிய வில்லை.

''ரொம்பக் கஷ்டப்பட்டுட்டேன் சார்! இந்தப் படம் மட்டும் ஓடாட்டா தற்கொலை பண்ணிக்கிறதைத் தவிர வேற வழியில்லை சார்...''

கஷ்டமே! இதென்ன கூத்து? இப்படி பெண் பிள்ளை மாதிரி அழுகிறவனை, நமது ரசிகமகா ஜனங்கள் எப்படி ஹீரோவாக ஒப்புக் கொள்ளப் போகிறார்கள்? இவனெல்லாம் எதற்குப் படமெடுக்க வந்தான்? பேசாமல் ஜுஹுவில் மூன்று நட்சத்திர ஓட்டல் வைத்து, நூறு ரூபாய் நோட்டுக்களைத் தடவித் தடவி வாங்கி, பெண்டாட்டிக்கு கோஹினூர் வைரத்தில் நெக்லஸ் செய்து போட்டு அழகு பார்த்துக் கொண்டிருக்கலாம். மெனக்கெட்டு தமிழ்நாட்டுக்கு வந்து, ஹீரோயின் இல்லாமல் சொந்தப் படம் எடுத்து, பத்திரிகைக்காரனிடம் மூக்கு சிந்திக் கொண்டிருக்கிறான்...

நான் உள்ளே நுழையுமுன், சட்டென்று அவன் என் கையில் ஒரு கவரைத் திணித்தான்.

''என்னது?''

''ஜஸ்ட்... என்னோட அன்பளிப்பு... ப்ளீஸ், நீங்க இதை வாங்கிக்கணும்!''

''ஸாரி... எனக்கு இதெல்லாம் பழக்கமில்லை. எல்லா பத்திரிகைக்காரனையும் காசு கொடுத்து வாங்கிடலாம்னு நினைச்சீங்கன்னா... ஐயம் ஸாரி. நான் அதுக்கு ஆளில்லை. படம் நல்லா இருந்ததுன்னா, விமர்சனம் தன்னால நல்லா வரும். பை-தி-பை தமிழ் ஃபீல்டை ரொம்ப நல்லாவே தெரிஞ்சி வெச்சிக்கிட்டிருக்கீங்க. ஆல் தி பெஸ்ட்!''

ஒருகணம் அவன் துடித்துப் போனான். ''ஸாரி ஸார்! வெரி ஸாரி. எனக்கு இதெல்லாம் தெரியாது. பி.ஆர்.ஓ.தான்... ஸாரி ஸார்... டோன்ட் மிஸ்டேக் மி... ஸாரி...''

புன்னகைத்து, உள்ளே போனேன். கடவுள் அருளால் கடைசி ஸீட் கிடைத்து, லைட்டில் போட்டார்கள்.

ஒருவித அசுவாரஸ்யத்துடன் பார்க்க ஆரம்பித்த சில விநாடிகளில் நிமிர்ந்து உட்கார்ந்தேன். முகத்தில் யாரோ சவுக்கால் அறைந்தது போல் ரத்தம் சூடேற, நெஞ்சு படபடக்க, என் கணிப்புகள் யாவும் பொய்யாகிப் போய்க் கொண்டிருக்கிற நிஜத்தைக் கண்முன் கண்டேன்! வார்த்தைகளை விரயம் செய்து, படத்தை வருணிக்கிற வேலையில் நான் இறங்கப் போவதில்லை. இந்தப் படம் ஓடினால், தமிழ் மக்களின் ரசனை இன்னும் குட்டிச்சுவராகவில்லை என்ற வியப்பு எனக்கு ஏற்படும். அந்த பம்பாய் இளைஞனின் விஸ்வரூப தரிசனத்தில் நான் லயித்துக் கிடந்த நேரம், படம் முடிந்து லைட் போட்டார்கள்.

நினைவிருக்கிறதா?

ஸ்ரீரங்கம் – சமயபுரம் – திருவானைக்காவல் வாசகர்களே! அடுத்தது உங்கள் ஊர்ச் சிறப்பிதழ்தான்! எடுங்கள் பேனாவை! கதை, கட்டுரை, பேட்டி, தகவல், துணுக்கு என்று எழுதி ஜமாய்த்து விடுங்கள்!

கடைசித் தேதி : **15.2.94**

– ஆசிரியர்

வாசலில் அவன் பலருக்குக் கைகூப்பிக் கொண்டிருந்தான். மேலும் அழுதிருப்பான் போலிருக்கிறது. கண்கள் சிவந்திருந்தன. என்னைப் பார்த்ததும் விலகி வந்தான்.

''படம் எப்படி?''

''வெளியானதும் விமர்சனம் பாருங்கள்!''

அதற்குப் பிறகு ஆறேழு படங்கள் பார்த்தாகி விட்டது. வழக்கமான படங்கள். அவன் படத்திற்கு விமர்சனம் எழுதி, கம்போஸ் ஆகித் தயார் நிலையில் இருக்கிறது. டிசம்பர் ரிலீஸ் என்றார்கள். பிறகு ஜனவரி முதல் தேதி என்றார்கள். பொங்கலுக்குக் கட்டாயம் வந்து விடும் என்று பி.ஆர்.ஓ. சொன்னார். நேற்று வரை பார்த்த பொங்கல் வெளியீடுகளில், அவனுடையது இல்லை.

வேலைச் சுமையில் மறந்து போனேன். ஒரு பொன்மாலைப் பொழுதில், பொழுது போகாமல் ஏதோ ஓர் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருக்கையில் வியாபாரமாகாததால் வெளிச்சப்பூ, இருட்டில் முடங்கி விட்டதாக நாலு வரி கிசுகிசுத்திருந்தார்கள்.

மறுநாள் தினத்தந்தியின் எட்டாம் பக்கத்தில் ஒரு ஓரமாகக் கட்டம் கட்டி, அவன் போட்டோவைப் போட்டு, எங்களைப் பிரிய எப்படி மனம் வந்தது என்று கேட்டு, சுற்றமும் நட்பும் கண்ணீரில் நனைந்திருந்தார்கள். எதிர்ப் பக்கத்தில், 'மாரியாத்தா மனசுவெச்சா' - 175வது நாள் விழா கோலாகலக் கொண்டாட்டம். அழைப்பு வந்திருக்கிறது. சாயங்காலம் போயாக வேண்டும்.

அடுத்த இஷ்யூவுக்கு மேட்டர் வேண்டாமா?

நடுக்கடலில் நடராஜர்!

பசிபிக் மகா சமுத்திரத்தின் மத்தியில், குறுக்காக நடந்தால் நாற்பது மைல் தூரமே உள்ள ஒரு சிறிய தீவில் ஆனந்தக் கூத்தன் நடனமாடிக் கொண்டிருக்கிறார் என்றால் நம்ப முடிகிறதா? கடலின் அடியிலிருந்து எரிமலையாகப் பொங்கி எழுந்து அதன் கொதிப்பு பல லட்சக்கணக்கான ஆண்டுகளாகக் குளிர்ந்து, இப்போது பூலோக கைலாயமாக விளங்குகிறது குவாய் தீவு. இது ஹவாய் தீவுகளில் ஒன்று. அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பிரதேசம். ஆண்டுக்கு 450 அங்குலம் மழை. இந்தச் சின்னஞ்சிறு தீவில் ஏழு நதிகள்! திரும்பிய இடமெல்லாம் பச்சேலென்ற குன்றுகள், சொரியும் அருவிகள், பறவைகளின் கலகல த்வனிகள், மடலவிழும் மலர்கள், காய்த்துக் குலுங்கும் மரங்கள். இன்னொரு பக்கத்தில் நீல நிற வானம், மெல்ல எழும்பி விழும் அலைகள் தவழும் ஆழ்கடல், வானில் திரியும் விதம் விதமான கடற் பறவைகள்.

பஞ்ச பூதத் தலமாகவே இந்தத் தீவுகள் இருப்பதால்தான் பஞ்ச கிருத்யங்களைச் செய்து கொண்டிருக்கும் நடராஜப் பெருமானுக்கு உகந்த தலமாகவும் இருக்கிறதோ?

பூஜை பண்ணுவதென்றால் இந்தத் தீவில் பண்ண வேண்டும். அருகம்புல் என்ன பசுமை! என்ன செழிப்பு? செடிகளும் கொடிகளும் பூக்களைச் சொரிகின்றன. வில்வ தளமா இது? செம்பருத்திப் பூவில் எத்தனை விதம்? ஒரு ஆரஞ்சு மரத்தில் எத்தனை கூடைப் பழங்கள்? எடுப்பார் இல்லாமல் தரையில் உதிர்ந்து, தாய் மரத்துக்கே உரமாகின்றன நூற்றுக் கணக்கான பழங்கள்!

குவாய் தீவு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக புனிதமான தலமாக இருந்திருக்கிறது. ஹவாய் நாட்டுப் பழங்குடி மக்கள் இந்தத் தீவின் ஒரு பகுதியை ''பிஹானா களனி'' என்று போற்றி வந்தனர். ''வானுலகும் பூவுலகும் சந்திக்குமிடம்'' என்று பொருளாம். ஹவாய் மக்களுடைய ஏழு வழிபாட்டுத் தலங்கள் வைலுவா நதிக் கரையை ஒட்டி அமைந்திருந்ததாம். அத்தகைய இடத்தில் வைலுவகங்கை என்று தற்போது அழைக்கப்படும் நதிக்கரையில் அமைந்திருக்கிறது நடராஜர் கோவில். இதை மையமாக வைத்து, குவாய் ஆதீனம் என்று அழைக்கப்படும் மடத்தை நிறுவியிருக்கிறார் குருதேவர் என்று பக்தியுடன் அழைக்கப்படும் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள். ஜப்பான், தஹீதி, ரஷ்யா, ஸ்விட்ஸர்லாந்து, மொரீஷியஸ், மலேஷியா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா அமெரிக்கா முதலிய பல நாடுகளிலிருந்து இந்துக்கள் இந்த ஆலயத்துக்கு வருகிறார்கள். பற்



* எழில் கொஞ்சும் ஆலயம்

பல அமெரிக்கர்களும் இந்து சமயத்தைத் தழுவி உண விலும், வாழ்க்கை முறையி லும், ஆன்மீகத்திலும் சைவர் களாக வாழ்கிறார்கள். இதை அற்புதம் என்றுதான் சொல்ல வேண்டும். சிவ பெருமானே முழு முதற்கடவுள் என்று நம்பி வழிபடுகிறார்கள்.

சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள், பிறப்பினால்



* குருதேவர்



* நடராஜர்

அமெரிக்கர்! இளம் வய திலேயே யாழ்ப்பாணத்தில் சத்குரு சிவ யோக சுவாமி என்ற மகானிடம் பஞ்சாக்ஷர உபதேசம் பெற்று சந்நியாச ஆச்ரமத்தை மேற்கொண்டவர். குருவின் ஆணைப்படி சைவ சித்தாந்த உண்மைகளை எடுத்துச் சொல்லித் தொண்டாற்றி வருபவர். இவருடைய குருவின் ஆதி குரு திருமூலர். ஆதலால் குவாய் தீவில் ஒரே தமிழ் மணம்!

குளிர்ச்சி தரும் மரங்கள் கவிழ்ந்த சாலை வழியே கோவிலுக்குப் போகி றோம். பூஜைக்குரிய புஷ்பங்கள் நிறைந்த தோட்டம். பெரிய ஆலமரம். சூரிய னுடைய கதிர் ஊடுருவாத அடர்த்தியான இலைகளுடன் அகன்ற கிளைகள். எதிரே முதலில் நாம் பார்ப்பது 16 டன் எடையுள்ள ஒரே கல்லில் செய்யப்பட்ட நந்திகேசுவரர். 22 அடி உயரமுள்ள செப்பினால் ஆன த்வஜஸ்தம்பம். கோவிலின் அமைப்பு யாழ்ப்பாண பாணி. பரிசுத்தம் என்பதற்குப் பொருள் தெரிந்து கொள்ளலாம். அவ் வளவு சுத்தம்! பல அடியார்கள் கோவிலில் மௌனமாக அமர்ந்து தியானம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அகில் தூப மணம் பரவி ஆலயத்தை இன்னும் புனிதமாக்குகிறது. மகா மண்ட பத்திலுள்ள சிற்பங்களைக் கண்டு வியக்கி றோம். சிவபெருமானுடைய 108 கரணங் களையும் வெண்கலச் சிலையாக வடித்து இங்கே வைத்திருக்கிறார்கள். இந்தியாவில் செய்து இங்கே வந்த தெய்விகக் கலையழகு மிக்க சிலைகள்.

சந்நிதியின் முந்நிலையில் மூன்றடி உயரமுள்ள ஸ்படிகத்தினால் ஆன ஆறு பட்டைகளுடன் கூடிய சிவ லிங்கம் பல வண்ணச் சிதறல் களுடன் ஜொலிப்பதைக் கண்டு மனம் குவிந்து வணங்கு

கமலமனராஜன்



✤ ஸ்படிக லிங்கத்திற்கு தீபாராதனை.....

கிறோம். இந்த ஸ்படிக லிங்கேசுவரரை முறைப்படி வழிபடுவதற்காகத் தனிக் கோவில் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிகிறோம். ஸ்படிகத்தின் சிகரத்தில் ஒளிரும் சிவந்த மாணிக்கம் ஒளி சிந்துகிறது. முன்னால் தலையில் நீலமணியுடன் நாகம்.

சந்நிதியின் ஒரு பக்கம் விநாயகப் பெருமான். கண்களைத் திறந்து பார்ப்பது போல ஜீவகளை. இன்னொரு பக்கம் முருகக் கடவுள். பூஜை தொடங்கிவிட்டது. மடத்தில் பூஜை முறைகள் பயின்ற துறவி, பூஜை செய்கிறார். நிதானமாக ஒவ்வொரு நாமமும் தெளிவாகக் காதில் விழும்படி உச்சரித்து ஆகம விதிப்படி உபசாரங்களைச் செய்து முடிக்கிறார். திரை போட்டு நைவேத்யம் செய்து, தீபாராதனை மந்த்ர புஷ்பம் ஆனபிறகு விபூதி குங்குமப் பிரஸாதம் தந்தார் அர்ச்சனை செய்த துறவி. பிறகு நந்திகேசுவரருக்கு அபிஷேகம் செய்து நிர்மால்யம் ஸமர்ப்பித்து பலி பீடத்தில் அன்னத்தை வைத்து.

''அன்ன பூர்ணே ஸதா பூர்ணே
சங்கரப் பிராண வல்லபே''

என்ற அன்னபூர்ணாஷ்டகத்தின் கடைசி சுலோகம் முழுவதையும் சொல்லிப் பிறகு அந்த அன்னத்தைப் பறவைகளுக்கு அளித்தார். ஒரு வித்தியாசம். காக்காய் கிடையாது. புறாக் கூட்டம் சூழ்ந்து கொண்டு கொத்துகிறது!

மடத்தில் இருந்து கொண்டு தொண்டு செய்து கொண்டே தத்துவ சாஸ்த்திரங்களைப் படித்து வரும் சாதகரான ஹரானந்தி அவர்கள் மடத்தைப் பார்க்க அழைத்துச் சென்றார். மடத்தின் வாயிலில் அசந்து போகிறோம். திருமூலநாயனாரும், வள்ளுவர் பெருமானும் கம்பீரமாக அமர்ந்திருக்கிறார்கள்.

குவாய் மடத்தைச் சார்ந்த அடியார்கள் தங்கள் பிள்ளைகளை மடத்துக்கு அனுப்புகிறார்கள். பள்ளிக்கூடப் படிப்பு முடிந்ததும் இரண்டு ஆண்டுகள் மடத்தில் தங்கி ஆன்மிகக் கல்வி பயில்கிறார்கள். அதன் பிறகு மேல் படிப்புக்குப் போய் விடுகிறார்கள். ஓரிருவர் சாதகனாகத் தங்கிவிடுகிறார்கள்!

நந்தவனத்தைப் பார்த்துக் கொண்டே வைலுவா கங்கைக் கரையை அடைகிறோம். விரைவில் இங்கே ஸ்நான கட்டம் கட்டவிருக்கிறார்கள்.

வழியில் அடர்ந்த ருத்ராக்ஷ மரச் சோலையைத் தாண்டிப் போனால் உருவாகப் போகின்ற கோவிலில் கணபதி எழுந்தருளியிருக்கிறார். விநாயகப் பெருமானின் அனுமதி பெற்று மேலே சென்றால் குன்றின் மீது தேவசேனாபதி வேலுடன் காத்து அருள்கிறார். அதைக் கடந்தால் தானே முளைத்துத் தழைத்த மருந்நீரான சிவலோகநாதன் ருத்ராக்ஷமாலைகள் அணிந்து விபூதி தரித்து உருவும் அருவு மாகி வீற்றிருக்கிறார். இந்த சிவலோகத்தை மையமாகக்கொண்டு மேல் தளத்தில் ஸ்படிக லிங்கத்தையும் ஸ்தாபித்துக் கோவில் எழும்பிக் கொண்டிருக்கிறது. இந்த இடத்துக்கு ஸன்மார்க்க சரணாலயம் என்று அற்புதமாகப் பெயர் சூட்டியிருக்கிறார்கள். வைலுவாகங்கை நீரைக் கொண்டு வந்து அபிஷேகம் செய்து மலர் தூவித் தொழுத பிறகு இன்னொரு பாதையில் செல்கிறோம்.

யாக சாலையை வலம் வந்து கோவில் நந்தவனம் அமையப்போகும் இடத்தைச் சுற்றி வரும்போது ஏழு சிறிய தடாகங்களைக் காண்கிறோம். இங்கே அறுபத்து மூவருக்கும் தனித்தனியாகச் சிறிய கோவில் அமையும். அவற்றில் அவரவர் கதைகள் பொறிக்கப்பட்டிருக்கும். வேறு பல சந்நிதிகள் தவிர ஆல மரத்தின் அடியில் ஒன்பது அடி உயரத்தில் ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கு சந்நிதி. இந்த விக்கிரக வேலைகள், தூண்கள் எல்லாமே பெங்களூரில் திருச்சி சுவாமிகளின் அனுக்ரகத்தோடு நடந்து வருகிறது.

குவாய் ஆதீனத்திலிருந்து சைவ மணம் பரப்பி வரும் சுமார் முப்பது துறவிகளுக்கும், சாதகர்களுக்கும், சீடர்களுக்கும் தில்லைச் சிதம்பரம்தான் புனிதத்தலம். சிதம்பரநாதனைக் கண்டுகளிக்க தமிழ் நாட்டுக்கு யாத்திரை வருகிறார்கள்.

பசிபிக் என்பதற்கு அமைதியான கடல் என்று பொருள் சொல்வார்கள். மன அமைதியையும், உலக அமைதியையும் நிலைநாட்ட, சாந்தம் தவழும் கடலில் ஒரு சரணாலயம் இருப்பது என்ன பொருத்தம்?

எதிர்காலத்திற்காக திட்டமிடும் தருணம் இன்றே.



உத்தியோகக் கனவுகள், நம்பிக்கைகள் மற்றும் ஆசை அபிலாஷைகள். எதிர்காலத்திற்கான திட்டங்கள்... ஓய்வு காலம் மற்றும் அத்துடன் கூட வரும் பிரச்னைகள். இத்தகைய நாளைக்காக திட்டமிடும் தருணம் இன்றே!

மிகக் குறைந்த வயதான 18 இல் அதாவது 18-23 வயதுப் பிரிவில் நீங்கள் இருந்தால் இத்திட்டத்தில் சேரலாம். மிகச் சிறிய தொகையான ரூ.2500 செலுத்தி உங்கள் முதுமைப் பருவத்தில் ரூ.5 இலட்சம் வரையிலான மருத்துவமனை செலவுகளை உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் தீர்க்க இத்திட்டம் வழிவகுக்கிறது. நீங்கள் செலுத்தும் தொகையை சுட்டிக் காட்டும் அட்டவணை இதோ. நீங்கள் செலுத்த வேண்டிய சரியான தொகையை அறிய, எங்கள் இலவச பிரசுரத்தை எந்த யூ.டி.ஐ கிளை யிலிருந்தும் பெறுங்கள்.

வயது	ரூ.	வயது	ரூ.
18	2500	40	9800
25	2800	45	15300
30	4200	50	24500
35	6300		

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டின் கூட்டிணைப்புடன் இத்திட்டத்தை உங்களுக்கு வழங்குகிறது யூ.டி.ஐ. இந்தியா முழுதும் பெரும்பாலான முக்கிய நகரங்களிலுள்ள 100 புகழ்பெற்ற மருத்துவமனைகளில் மருத்துவ செலவுகளை தீர்க்கும் வசதி உங்களுக்கு கிடைக்கிறது. மேலும் பல மருத்துவமனைகள் இத்திட்டத்தில் சேர்க்கப்படும்.

இத்திட்டத்தில் நீங்கள் சேருங்கள் அல்லது உங்கள் பெற்றோர்களுக்கு உங்கள் அன்பின் காணிக்கையாக இதை வழங்குங்கள்.

இந்த புதுமையான, ஜனரஞ்சகமான திட்டம் மறுபடியும் விற்பனைக்கு வந்துள்ளது! டிசம்பர் 1, 1993 முதல்.

சிறப்பம்சங்கள்

- ஒருமுறை மட்டும் இத்திட்டத்தில் முதலீடு செய்யுங்கள். உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் இத்திட்டம் பூரண பாதுகாப்பு அளிக்கிறது.
- இந்தியாவில் ரூ.5 இலட்சம் வரையிலான மருத்துவமனை செலவுகளை தீர்க்கும் வசதி.
- உங்கள் ஸீனியர் சிட்டிசன்ஸ் அடையாள அட்டையை நியமிக்கப்பட்ட மருத்துவமனைகளில் காட்டுங்கள்; கையொப்பமிடுங்கள் மற்றும் சிகிச்சை பெற்று மகிழ்ச்சியுடன் வெளியேறுங்கள்.
- 60 வயது வரையுள்ள நபர்கள் இத்திட்டத்தில் ஜூன் 1994 வரை சேர முடியும்.
- மருத்துவமனை நற்பயன்களை இழக்காமல், 61 ஆம் வயதில் திட்டத்தின் கீழுள்ள திருப்பெறாத தொகையை எடுத்துக்கொள்ளும் வசதி.
- வருமான வரிச்சட்டம் பிரிவு 80 டீ கீழ் ரூ.10,000 வரை வரிச்சலுகை.
- சில கூடுதல் முதுமைக்கால நற்பயன்களைப் பெறும் வாய்ப்பு.

SENIOR CITIZENS' UNIT PLAN

உங்கள் ஓய்வு கால கவலைகளை ஒரு மொத்தமாக தீர்க்கிறது.


இத்திட்டத்தை
யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா
கூட்டிணைப்புடன் உங்களுக்கு வழங்குகிறது.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம். லிட்.
இந்தியாவின் மிகப் பெரிய ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம்

எல்லா செக்யூரிட்டி முதலீடுகளும் மார்க்கெட் ரிஸ்க்கிற்கு உட்பட்டவையாகும். முதலீடு செய்யும் முன்பு உங்களுடைய முதலீட்டு ஆலோசகரை அல்லது முகவரை கலந்தாலோசிக்கவும்.

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101
கிளை அலுவலகங்கள்: ● கோயம்புத்தூர். போன்: 210359 ● சென்னை. போன்: 517101, 517190 ● மதுரை. போன்: 38186 ● திருச்சி. போன்: 32619.

UTI 154.93 TMB



பாலம்

●● சிறு தொழிலாக ஊறுகாய் தயாரித்து வியாபாரம் செய்ய விருப்பம். தயாரிப்பு, விநியோகம் பற்றி யோசனைகள் கூறி ஒத்துழைக்கக் கூடியவர்களின் உதவியை நாடுகிறேன்.

– என். செல்வராஜ்,
மே/பா. சின்னப்பா நாயுடு,
செத்தாரப்பள்ளி,
அஞ்சூர் (போஸ்ட்),
கிருஷ்ணகிரி வட்டம்
– 635 203.

●● அத்வைதம் பற்றிய எனது ஆராய்ச்சிக்கான நூல்கள் தேவை. விலை, தபால் செலவு, ஜெராக்ஸ் செலவு ஏற்கிறேன்.

– எஸ். கே. ஆர். காதிரி,
கனரா வங்கி,
தேவாரம் – 626 530.

●● நல்ல முறையில் இயங்குகிற பழைய தமிழ் கோத்ரெஜ் டைப்ரைட்டர் மிஷின் தேவை. விற்கும் எண்ணம் உள்ளவர்கள் தொடர்பு கொள்க.

– எஸ். குமார்,
42, சண்முகம் பிள்ளை வீதி,
செக்காலை,
காரைக்குடி – 623 002.

●● கோலம் போடுவது பற்றி ஆய்வு செய்ய விரும்புகிறேன். தகுந்த விவரங்கள், நூல்கள் இருப்பின் தகவல் தரவும். தபால் செலவுகள், அவசியப்பட்டால் ஜெராக்ஸ் செலவு ஈடுகட்டப்படும்.

– பி. பாலசுப்பிரமணியம்,
டி.ஸி. 37/364
KOOPAKKARAMADOM
FORT, TRIVANDRUM - 695 023.

●● கலப்படமற்ற சுத்தமான விபூதி, குங்குமம், தசாங்கம், வாசனைப் பொடி தயாரிக்கும் முறைகள் தெரிந்தால் எழுதவும். பழைய புத்தகங்கள் இருப்பின் அனுப்பி உதவவும்.

– பாலசுப்பிரமணியன்,
1756/2 அம்பாள்புரம் 2-ம் வீதி,
புதுக்கோட்டை – 622 001.

●● தமிழ்நாடு தேர்வாணையம் நடத்திய Group I முதனிலைத் தேர்வு எழுதி வெற்றி பெற்றுள்ளேன். முக்கியத் தேர்வுக்குப் பயிற்சி அளிக்கும் நிலையங்கள் சென்னையில் இருப்பின் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

– ஜே. செல்வகுமார்,
5, பிள்ளையார் கோவில் தெரு,
வடபழனி, சென்னை – 600 026.

●● எனது பி.எச்.டி. ஆய்வுக்கு மகரந்தம் பற்றிய பல்வேறு அம்சங்களின் ஆய்வுக் கட்டுரைகள் (தமிழ் அல்லது ஆங்கிலம்) தேவை. தயவு செய்து அனுப்பி உதவுங்கள்.

– கே. விஸ்வநாதன்,
129, ராஜு வீதி,
கோயமுத்தூர் – 641 001.

●● ஆர்.எஸ். மணி என்பவர் திருவண்ணாமலை மின்வாரியப் பிரிவு அலுவலகம் ஒன்றில் பத்து ஆண்டுகளுக்கு முன் பணியாற்றியிருக்கிறார். புலவர் அரிமதி தென்னகன் அவர்களின் நண்பர். மணி அவர்களோ அல்லது அவரை அறிந்தவர்களோ தொடர்பு கொள்ளவும்.

– கருமலைப்பழம் நீ.,
46, மாணிக்க விநாயகர் கோவில் தெரு,
வியாசர்பாடி, சென்னை – 39.

●● என் தந்தை வலங்கைமான் அப்துல்லா எழுதிய கட்டுரைகள் தேவை. 'பிறை', 'மணி விளக்கு', 'மறுமலர்ச்சி' போன்ற இதழ்களில் எழுதியுள்ளார். தகவல் சொல்லுங்கள். தக்க சன்மானம் தந்து பெற்றுக் கொள்கிறேன்.

– ச. ஏ. அப்துல் நசீர்,
3, சலீம்மா இல்லம்,
வலங்கைமான் – 612 804.

●● சணல் (சாக்குப்) பைகள் தைத்துத் தயாரித்துக் கொடுக்கும் நிறுவனம் அமைக்க திட்டமிட்டுள்ளேன். இது தொடர்பாக புத்தகங்களும் வழிகாட்டுதலும் பெற்றுக் கொள்ள நன்றியுடன் காத்திருக்கிறேன்.

– கே. எம். வீரன்,
614, வி.கே.கே. மேனன் சாலை,
சித்தாபுதூர், கோவை – 641 044.

●● எனது எம்.ஃபில் ஆய்வுக்கு முருகன் பெயரில் அமைந்த கவச நூல்கள், கவச உரை நூல்கள் தேவை. விலைக்கு என்றாலும் சரி. உடன் எழுதவும்.

– மு. பாலவடிவேல்,
C-2, சப்பாணியர் வீதி,
வட்டம் – 10, நெய்வேலி – 607 801.

●● திருச்சியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு இளம் எழுத்தாளர் இயக்கத்தில் இணைய அனைத்து மாவட்டவாசக எழுத்தாளர்களையும் அன்புடன் அழைக்கிறோம். எழுதுவதற்குப் பயிற்சியும் அளிக்கிறோம்.

– த. நா. இளம் எழுத்தாளர் இயக்கம்,
22/1 பண்ணீர் செல்வம் தெரு,
சுப்பிரமணியபுரம், திருச்சி – 620 020.

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பு ஏற்க இயலாது.)



* எல்லிஸ் ஆர். டங்கன்

டங்கல் அல்ல, டங்கன்!


டங்கல் திட்டத்தைப் பற்றித் தெரிந்தோ தெரியாமலோ இங்கே எல்லா அரசியல்வாதிகளும் பாய்ச்சல் காட்டிக் கொண்டிருக்கும் போது, வந்து சேர்ந்தார் டங்கன். அமெரிக்கருக்கு அமோக வரவேற்பு. அமெரிக்கத் தகவல் நிலையத்தில் அவருடன் உரையாடினார் ராண்டார் கை. தெரியவந்த ரசத் துளிகள் :

●● இவர் டைரக்ட் செய்த படங்களில் ஆரம்பத்தில் 'பிட்' ரோல்களில் நடித்த எம்.ஜி.ஆர்., மந்திரி குமாரியில் ஹீரோ. கதை, வசனம் : மு.க.! இருவருமே முதல்வர்களாக உயர்ந்ததில் டங்கனுக்குக் கொள்ளைப் பெருமை! சதி லீலாவதி (கதை, வசனம் : எஸ். எஸ். வாசன்) மீரா, சகுந்தலா போன்ற படங்கள் டங்கனின் டைரக்ஷனில் உருவானவை. எப்படி, எதற்காக இந்தியா வந்தார்? பதில் அடுத்த பாரா :

●● சிறுவன் டங்கன், கப்பலில் எடுபிடி வேலை செய்து உலகம் சுற்றி, பாரிஸை அடைந்தான், பாக்ஸ் காமிராவோடு. அங்கே மனிதர்கள், சிலைகள், கட்டிடங்கள் என்று படமெடுத்து, டூரிஸ்ட்டுகளுக்கு விற்றுக் காசாக்கினான். இந்த வெற்றித் துளிர், காமிராக் கலை பற்றி அறிய ஆர்வத்தை வளர்க்க, அமெரிக்கா திரும்பி, ஒரு பல்கலைக் கழகத்தில் சினிமா கலையும் சேர்த்துப் பயின்றான். அப்போது அங்கே உடன் படித்த இரு இந்திய மாணவர்கள், தாய்நாடு திரும்பி, ஸ்டூடியோ நிர்மாணிக்கப் போவதாகக் கூறி, டங்கன் உதவியை நாடவே, வந்து சேர்ந்தார். ஸ்டூடியோ திட்டம் புஸ்வாணமாகி விட, இங்கேயே பல படங்களுக்கு டைரக்ஷன் பொறுப்பு ஏற்றார்.

●● சகுந்தலையில் வனதேவதை குளத்திலிருந்து எழ வேண்டும். தாம் தங்கியிருந்த காஸிபாரா ஹோட்டலில் (இந்த விஜயத்தின் போதும் அங்கேதான் வாசம்) இருந்த ஒரு 'செக்' தேசப் பெண்ணை வனதேவதையாகத் தோன்றி ஆடச் சம்மதிக்கச் செய்தார். நீர் நிரம்பிய செயற்கைக் குளம் உருவாக்கி, மேடை அமைத்துப் பெண்ணை நிற்க வைத்தார். ஒரு விசையைச் சுழற்ற, மேடை குளத்துக்குள் இறங்கியது. காமிரா இயங்கியது. ஆனால் தேவதை மேலே எழ அல்லவோ வேண்டும்? ஃபிலிமை 'ரிவர்ஸ்' செய்ய, தேவதை மேலேறினாள், ஒரு சொட்டு ஈரமுமின்றி! வனதேவதை யானதால் லாஜிக் இடிக்கவில்லை!

●● ஹாலிவுட் படாதிபதியுடன் சேர்ந்து ஒரு 'ஜங்கில்' படம் இந்தியாவில் எடுத்தார். காட்டு யானைகள் படையெடுத்து அணைக்கட்டை அழிப்பதாகக் காட்சி. தகர்ப்பு : 'டேபிள்டாப்'. அதற்கு முன்பு அசல் அணைக்கட்டு, நிஜ




யானைகளைக் காட்ட வேண்டுமே! யானைகளைப் படம் பிடிப்பதில் சிரமம் இல்லை. ஆனால் மேட்டூருக்கு அனுமதி மறுப்பு. விமான நிலைய அதிகாரியுடன் டங்கனின் உதவியாளர் சுவாரஸ்யமாகச் சினிமாக் கதைகள் பேசிக் கொண்டிருக்க, டங்கனும் காமிராமேனும் ஓசைப்படாமல் ரன்வே பக்கம் சென்று, ஒரு குட்டி விமானத்தில் காமிரா சகிதம் ஏறி... விர்ர்ர்ர்! டாப் ஆங்கிளில் மேட்டூர் அணைப்படங்கள் எடுத்துத் திரும்பிய பிறகு, ஊரி... ஊரி... சமாளிப்பு.

●● மீரா படத்துக்காக வடக்கே சென்ற போது, எல்லோரும் போல் நாமும் பாபம் தீர யமுனையில் குளிக்கலாமே என்று டங்கன் இறங்க, இழுத்துச் செல்லப்பட்டார்! நதி நீரால் அல்ல; அவர் கால் வைத்திருந்த ஆமையால்! கரை ஏறலாம் என்று அடியெடுத்து வைத்தால் இன்னொரு ஆமை மீதுதான் கால் பாவுகிறது! மற்றொன்று, வேறொன்று... ஆற்றுப் படுகையில் கால் ஊன்றவே முடியவில்லை! திண்டாடி, திணறி எப்படியோ தப்பி...

●● மீராவில் மறக்க முடியாத நினைவு : லொகேஷன் ஷூட்டிங், சரித்திர கால மீரா பாடிய கோவில் களிலேயே. அங்கே திரண்ட மக்கள், மீராவே மறு அவதாரம் செய்து வந்து விட்டது போல் எண்ணி, கண்ணீர் பெருக பக்திப் பரவசமாக நின்றனர். எம்.எஸ்., மீராவாகவே மாறிய அந்தக் காட்சிகளை எண்ணி நெகிழ்ந்தார் டங்கன்.

●● அஸ்ஸாம் காடுகளில் ஒரு காண்டாமிருகம்



பாய்ந்து வர, படம் பிடிக்கும் சுவாரஸ்யம் உயிர்ப் பயத்தை விரட்டியது. இவர் நகரவேயில்லை! வெகு அருகே வந்து விட்ட காண்டா, காமிராவின் 'கிர்ர்ர்' சத்தத்தில் தயங்கி, பின் மிரண்டு திரும்பி ஓட, அதையும் படம்பிடித்துக் கொண்டார் டங்கன்!

●● தென்னிந்திய சினிமா வர்த்தக சபை வரவேற்பு தவிர, அமெரிக்கத் தகவல் நிலையத்தில் மாலையிட்டவர்கள் : பாரதிராஜா, எஸ்.பி.முத்துராமன், ஆர். சி. சக்தி, கமல்.

– குமரன்.

புகைப்படம் : கோபிநாத்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka